


மாத வெளியீடு

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் : 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

மாலை 12 | DECEMBER 1944 : தாரண ஞு மார்கழிமீ | முத்து 6

## பொருளடக்கம்

| விஷயம் | பக்கம் |
|---|---|
| 1. ஈயார் தேட்டு—வே. நாராயணன் ... | 359 |
| 2. இலக்கிய யாத்திரை—ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ. & ர. ரங்காச்சாரியார், எம்.ஏ. | 361 |
| 3. சிறு கதைகள்—திவான்பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் ... | 365 |
| 4. வசனக் காவியங்கள்—டர்ஜெனீவ் ரசனையின் மொழிபெயர்ப்பு ... | 368 |
| 5. பொன் செய்யும் மருந்து—தி. எஸ். ராமானுஜம், எம்.ஏ., எல்.எல்.பி.(லண்டன்) | 375 |
| 6. கதீஜா—கு. பா. வேங்கடாசலம் ... | 381 |
| 7. ஸங்கீதமா ? ஸங்கேதமா ?—ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல். ... | 384 |
| 8. பொது உடமைகளா ! —டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம்.ஏ., எல்.ஐ.எம். | 389 |
| 9. மாலதியின் தலைத் தீபாவளி—ஜயலக்ஷ்மி R. ஸ்ரீனிவாசன் ... | 396 |
| 10. ஸம்ஸ்கிருத கீர்த்தனை—ஸ்ரீ. யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் ... | 399 |
| 11. இந்தியாவின் துறைமுகங்கள்—ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி ... | 401 |
| 12. நமது தபால்பெட்டி ... | 405 |
| 13. இயற்கையின் தெய்விக அழகு—பி. ஸ்ரீ. ... | 406 |
| 14. மகாத்மாவின் மணிவாசகம் ... | 410 |

" பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# முடிவின் ஆரம்பம்




இந்த பெயர்கள் ஞாபகத்தில் இருக்கின்றனவா?...... கொஞ்ச நாட்களுக்கு முன்பு அவைகள் பத்திரிகையில் தலைப்புப் பெயர்களாய் இருந்தன. திமாப்பூருக்கு அருகாமையிலுள்ள ரயில்வே அபாயத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தது. கோஹிமாவிலுள்ள இந்திய சேனையை அதைவிடப் பெரியதோர் சேனை முற்றுகையிட்டது. ஜப்பானியத் துருப்புக்கள் இம்பால் சமவெளியில் நுழைந்து பிஷன்பூருக்கு வடக்கிலும், தெற்கிலும் இருந்தனர். உக்ரல் பாதுகாப்பு இல்லாமல் இருந்தது.

இப்பொழுது இவையாவும் பழங்கதையாகிவிட்டன. ஜப்பானியர்கள் தோற்கடிக்கப்பட்டு, தப்பி ஓடிக்கொண்டிருக்கின்றனர். இன்று திமாப்பூருக்கு 150 மைல் தூரத்திற்குள் ஜப்பானியர் ஒரு இடத்திலுமில்லை. நாகர்கள் கொஹிமாவிற்குத் திரும்பி வந்துவிட்டனர். வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டுப் பொசுக்கப்பட்ட மலைப்பட்டினத்தைப் புதுப்பிக்கத் திட்டமிடப்படுகிறது. பிஷன்பூர் மலைகளின் நடுவே "தோற்கடிக்கப்படமுடியாத சேனை" என்று தம்மைத் தாமே கூறிக்கொண்ட ஜப்பானியர்களின் எலும்புகள் குவிந்துகிடக்கின்றன. அவர்களின் முடிவுக்கு அது ஆரம்பம். நீங்கள் இதைப் படிக்கும் சமயம். இவைகள்போன்ற வெற்றிக்குக் காரணமான தைரியமுள்ள வீரர்களைப்பற்றி நினையுங்கள்.

நம்சேனைகள் 'ஜப்பானியர்கள்' அவதார புருஷர்களோ அல்லது தோற்கடிக்க முடியாத மேலானவர்களோ அல்ல என்பதை நிரூபித்துவிட்டனர்.

நம்மால் ஜப்பானியர்களைத்
தோற்கடிக்க முடியும் என்பது
நமக்குத் தெரியும்.......




தேசிய போர்முனையின் பிரசுரம் TM AAA 1309

## உங்கள் தொழிலாளிகளுக்கு
## நீங்கள் செய்யும் நன்மைகள்



எவ்வளவோ உண்டு. அதில் முக்கியமானவைகளில் ஒன்று அவர்களை இன்ஷ்யூர் செய்வதுதான். அவர்கள் பெறும் ஊதியத்திலிருந்து தாங்களாகவே இன்ஷ்யூர் செய்துகொள்வதை எதிர்பார்க்கமுடியாது. ஆனால் முதலாளிகளாகிய நீங்கள் அவர்கள்பேரில் ஒருமிக்க பாலிஸிகள் எடுத்து, சிறு தொகைகளில் ப்ரீமியம் கட்டி அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் சந்தோஷமாக இருக்கச் செய்யலாம். அதனால் உங்களிடம் அவர்களுக்கு உள்ள மரியாதையும் அபிமானமும் நீடித்து வரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குத் தகுந்தபடி நாங்கள் திட்டங்கள் வகுத்திருக்கிறோம். விவரங்களுக்கு எங்களுக்கு எழுதவும்.

# யுனைடெட் இந்தியா

**பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட் : : மதராஸ்.

# உயர்ந்தவை, அதிக காலம் உழைக்கும்

ரிக்ஷா, ஜட்கா, டோங்கா

இவைகளுக்கு

## யானை மார்க் காப் டயர்களை

உபயோகியுங்கள்.

உற்பத்தி செய்பவர்கள்

நான்கோ ரப்பர் ஒர்க்ஸ்,

லாலி ரோட், (P. O.)

கோயம்புத்தூர்



# இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஆபீஸ் — மாயவரம்

சென்ட்ரல் ஆபீஸ் — சென்னை

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 25, 00, 000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 21, 25, 000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 18, 75, 000 |
| ரிஸர்வுகள் | ரூ. 3, 25, 000 |
| மொத்த ரிஸர்வுகள் | ரூ. 2. 85. கோடிக்கு அதிகம் |

சென்னை ஆபீஸ்கள்: சைனா பஜார் ரோடு மாம்பலம் மயிலாப்பூர் பெரியமேட் திருவல்லிக்கேணி

கிளை ஆபீஸ்கள்:

| | | |
|---|---|---|
| அம்பால வல்ஸா | மதுரை | தஞ்சாவூர் |
| அனகபல்லி | மாருடேர் | திருநெல்வேலி டவுன் |
| சிதம்பரம் | பாலக்காடு | திருநெல்வேலி ஜங்ஷன் |
| சித்தூர் (கொச்சி) | பார்வதிபுரம் | திருவாரூர் |
| காஞ்சிவரம் | புதுக்கோட்டை | திருச்சி |
| ஈரோடு | சாலூர் | வேலூர் |
| காரைக்குடி | சீயாழி | விருதுநகர் |
| கும்பகோணம் | தாடே பள்ளிக்கூடம் | விஜயநகரம். |

பாங்கி சம்பந்தமான எல்லா விஷயங்களும் கவனிக்கப்படும்.

**எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,** மானேஜிங் டைரக்டர்.

# ஈயார் தேட்டு

[வே. நாராயணன்]

இட்டார் இடாதார் என்று மக்களை இருசாதியினராகப் பிரிப்பர் ஔவைப் பிராட்டி. இட்டாரே நல்லோர்; இடாதார் இழி குலத்தோர். இடுவது என்றால் 'என்றும் முகமன் இயம்பாதவர்க்கும் அவர்கள் இருக்குமிடத்திற்குச் சென்று பொருள் கொடுப்பதேயாகும்.' "அந்தணராலும் நெருப்பினாலும் நீரினாலும் உண்ணப்படும் பொருளையுடையவன் என்றும் இன்பமுடையவனாய் மகிழ்ச்சியெய்துவான்" என்று சுக்கிர நீதி கூறுகின்றது. "அந்தணரின் மூலமாகப் பிதிருக்களுக்கு உணவு முதலிய பொருள்களை வழங்கவேண்டும்; தேவர்களுக்கு அக்கினியின் மூலமாக அவிப் பொருளை வழங்கவேண்டும். தான் வேறு பிறர் வேறு என்ற உணர்ச்சியை ரிஷிகள் கூறிய வேத வசனங்களால் பொய்யுணர்ச்சியென்று அறிந்து நீர் வார்த்து வேண்டுவோர்க்கெல்லாம் தான் ஈட்டிய பொருளை வழங்கவேண்டும். இவ்வாறு செய்வதால், முக்கடனும் நீங்கப்பெற்றவனாய் அகமகிழ்ந்து வாழலாம்" என்பது இந்நீதி வாக்கியத்தின் கருத்து.

இவ்வாறு செய்வதற்குப் பொருள் ஈட்டுதல் அவசியம். அதனாலேதான் 'திரைகடலோடியும் திரவியந் தேடு' என்ற பழமொழி எழுந்தது. கடலுக்கு அப்பாற் செல்லுதல் நற்காரியமன்று; ஆயினும் பொருளீட்டுவதற்கு அவ்வாறு செல்வது அவசியமானால், அவ்வாறு சென்றேனும் பொருள் தேடவேண்டும், என்பது இப்பழமொழி. ஆனால் விரைந்து பெரும் பொருளாளனாக முயல்வது தவறு. "மனிதர் விரைந்து பெரும் பொருள் திரட்டுவாராயின், அது வஞ்சத்தாலன்றி ஆகாததொன்றாம்; பிறர் பொருளைக்கவர்ந்தாலன்றி எவனும் விரைந்து பெரும் பொருளாளனாக முடியாது" என்பது சுக்கிர நீதி. அதனால், பச்சைப் பசும் பொய்கள் பேசியும், இச்சகங் கூறியும், முகமன் இயம்பியும், இல்லாத பெருமைகளையிட்டுப் பாடியும், படைக்கும் பொருள் பெரும் பொருளாயினும், அது எத்தனை நாளுக்குப் போதும் என்று அத்திய வழிகளிலே மனஞ்செலுத்தாதிருத்தல்வேண்டும். மெய் வருந்திப் பெற்ற கூலியைக் கொண்டே அறமும் இன்பமும் வீடும் பெறவேண்டும். பர்த்திருஹரி என்னும் வடமொழிப் புலவர் சொல்கிறார்: "தானம், போகம், நாசம் என்று மூன்று போக்குகள் உண்டு செல்வத்திற்கு; எவன் கொடாமலும் இன்பத்தை நுகராமலும் இருக்கிறானோ அவனுடைய பொருள் மூன்றாவது கதியை அடைகின்றது." செல்வம், தனம் தானியம் என்று இருவகைப்படும். தானியம் போகத்தால் அழிவது; பிறர்க்கும் கொடுக்கத்தக்கது; அதனை அனுபவியாதும் பிறர் அனுபவிக்குமாறு கொடாமலும் சேமித்து வைத்தால், செல்லுண்டு மக்கிப்போகும். தனம் இவ்வாறு மக்கிப்போகாதென்றாலும் கள்வராலும் கொள்ளையிடுவோராலும் அது கவர்ந்து கொள்ளப்படும். பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து, கள்வரினின்று காப்பாற்றினாலும், தன் உயிர் கூடுவிட்டு நீங்கிய பின், அந்தப் பணத்தை யார் அனுபவிப்பார்கள்? பாபிகளின் செல்வமாகையால், அது தீயாரிடமேதான் போய்ச் சேரும்; நல்லோர் அதைத் தீண்ட மாட்டார்கள். இவ்வுண்மையையே 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்று ஔவைப் பிராட்டி கூறியதும்.

ஈகை என்பது பிறவிக் குணமாகக் கருதப்படும். 'நற்குடிப் பிறந்தோர் நல்கூர்ந்தாராயினும் இல்லை என மாட்டார்.' உடைமையைச் சேமித்துவைத்து ஈயாது வாழும் வன்கண்மையுடையவர் ஈதலால் இரந்து பெற்றவர்களுக்கும் தமக்குமே உவகை எழுவதை அறியார் என்கிறார் திருவள்ளுவர் :

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
வைத்திழக்கும் வன்கண் அவர் [தாமுடைமை

செல்வத்தைச் சேமித்து வைத்து இறுதியில் அதை இழந்து போகாமல், நாமே உண்டு அழிப்போம் என்பார்க்கும் அவ்வாறு அனுபவிப்பது இன்னாதாகி விடும் என்று

'இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்'

என்னுங் குறளிலே விளக்குகின்றார். ஆகவே, பொருளை ஈட்டவேண்டும் ; பொருளில்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை; அப்பொருளை அருள்கூர்ந்து ஈதல் வேண்டும் ; அருளாலே தான் மேலுலகம் பெறலாம் ; இங்கேயும் ஈத்துவக்கும் இனிமையை யுடையாராய் வாழலாம். பொருளும் அருளும் உடையவராய் ஈவோர்க்கு மேலுலகம் கிடையாது என்று ஒரு விதி ஏற்பட்டாலும் ஈதலே நன்று ; ஏனெனில் அதினும் மனத்திற்கு இன்பம் தருவது வேறு இல்லை. ஈயாதவர் இருவகைப் படுவர் ; தாமே தனிப்பட அனுபவிப்பவர்களுக்குப் போகமே துன்பந் தருவதாகும். அனுபவியாது தேடிப் புதைத்து வைக்கும் உலோபிகளோ தங்கள் செல்வமெல்லாம் தீயாரிடம் போகுமாகையால், பெரும்பாவிகளாய் ஓயாத் துன்பத்துக்கு ஆளாவார்கள். இனி, "பிரதியுபகாரத்தை எதிர்பார்த்துக் கொடுத்தல் ஈகையாகாது ; அதுபோலவே, புண்ணியம் சேர்த்து அதன் பலனைச் சுவர்க்கம் முதலிய இன்பங்களை அனுபவிப்பதற்காகக் கொடுக்கும் கொடையும் 'அறிவிலே வாணிபம்' என்று இகழப்படும்" என்ற உயர்ந்த கருத்தையும் ஈவோர் மனத்துட்கொள்ள வேண்டும். இவ்வாறு ஈதல் எப்படி நிகழவேண்டும் என்பதை உணர்ந்து, தன்னைக்கடைசியிலே வைத்துக்கொண்டு தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்னப்பட்ட பிதுருக்கள், தேவதைகள், அதிதிகள், சுற்றத்தார் ஆகியவர்களுக்கு ஈந்து மிகுந்ததை அனுபவிக்கும் இல் வாழ்வோனைத் துறவியினும் சிறந்தவனாகக் கொண்டு போற்றுகிறார் திருவள்ளுவ நாயனார். ஈதற்பொருட்டே இல்லறம் மேற்கொள்ளத் தகும் என்பதை நினைத்தேபோலும், 'இல்லற மல்லது நல்லற மன்று' என்றபின் 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்று படிக்கப் பட்டது.



# இலக்கிய யாத்திரை

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. & ர. ரங்காச்சாரியார், எம். ஏ.]

## II

### கவிஞனும் ரஸிகனும்

உலகத்திலே ஒரு ஜீவன் தன்னுடைய துணையைத் தேடுகிறது. அதை அடைகிறவரையில் அதற்கு அமைதியில்லை. இது ஒரு நீங்காத தொடர்பு—மரணம் இதற்கு ஓர் அடை கதவு அன்று—இன்னுமோர் புதிய காட்சியைக் காட்டும் ஒரு வாயிலே. மாறி மாறி, பல பிறப்புப் பிறந்து, ஈறில் இன்ப வெள்ளத்தில் மூழ்குவதே அதன் வாழ்க்கைப் பயன். கவிஞனுக்கும் ரஸிகனுக்கும் உள்ள தொடர்பும் இத்தகையதே. தன் வாயிலாக வழிந்த கவிதையைத் தன்னதென்று உரிமை பாராட்டுகிற எண்ணமே உண்மைக் கவிஞனிடத்தில் எழாது. பொது மக்களின் சார்பாகத் தன்னிடம் வைக்கப் பட்ட அபூர்வமான சொத்தெனவே அதைக் கொள்ளுகிறான். சொத்துக்கு உடையவனிடம் அதை எப்பொழுது சேர்ப்போம். அதனுடைய மதிப்பை உணர்ந்து அதைப் போற்றும் ஆற்றல் அவனுக்கு எப்பொழுது வரும்? என் பொறுப்பு எப்பொழுது தீரும்? என்ற கவலைதான் அவனுக்கு. நல்ல ரஸிகன் கிடைக்காத அளவிலே அவன் மனோ வேதனைக்கு ஓர் அளவில்லை. ஒத்த தன்மை, விரிந்த கற்பனு சக்தி, நுண்ணறிவு, ததும்பும் உணர்ச்சி, இவைகளெல்லாம் ரஸிகனுக்கும் வேண்டும்.* ரஸிகனும் மெய்ம்மறந்து கவிதையை அனுபவிக்கிற வேளையிலே, தானும் கவியாக மாறிவிடுகிறான். இந்நிலையில்தான் இலக்கிய விமர்சமும் ஒரு தனிச் சிருஷ்டியாகும்—இலக்கியமுமாகும்.

இராமாயணம் என்னும் மகா காவியத்தை இயற்றியபின் எவன் இதன் சுவையை அறிந்து,* உலகத்திலே பரவச் செய்வான் என்ற ஒரு பெருங்கவலை வால்மீகிக்கு உண்டாகிறது. அச்சமயத்தில், தவவேடம் பூண்ட, சீதாதேவியின் பிள்ளைகள்—குசன், லவன்—இருவரும் மகரிஷியின் பாதங்களை வணங்குகிறார்கள். வால்மீகி, அவர்களை நோக்குகிறார். அரசிளங்குமாரர்களுக்கு இயற்கையாய் அமைந்து கிடக்கும் கம்பீரமான தோற்றம், ஆச்ரமவாஸத்தினுல் பெற்ற ஒரு பெருஞ் சாந்தம், சகல கலைகளிலும் தோய்ந்த உள்ளம், அமுதகீதம் பொழிய வல்ல இனிய குரல்—இவைகளெல்லாம் இந்தச் சிஷ்யர்களிடம் பொருந்தி நிற்பதை அவர் அறிகிறார். இவர்கள் மூலம் உலகத்தை உவப்பிக்கலாம்—உய்விக்கலாம்—என்று தேர்ந்து இராமாயணத்தைக் கானம் செய்யச் சொல்லுகிறார். அவர்கள் நாளடைவில், நன்கு பயின்று, ஒரு தினம், அரண்யத்திலே, அந்தணர்களும் முனிவர்களும் சேர்ந்த ஒரு சபையிலே, முதல் முதல் பாடினார்கள். "என்ன உருவம், என்ன அழகு, என்ன இழையும் குரல், இவர்கள் இருவரா, அல்லது ஒருவன்தானோ!" என்று வியந்தார்கள், அச்சபையில் சிலர். கதையின் உட்கருத்திலே நுழைந்து, மெய்ம்மறந்து, யாழொத்த குரலில் அவர்கள்

* இதனால் கவிஞனே, திறன் மிக்க சிலரே நன்று போற்றமுடியும். பொது மக்களுக்கு அவன் பயன்படமாட்டான் என்று கூற வொண்ணுது. உண்மைக் கவி, பண்டிதருக்கும் பாமாருக்கும், குழந்தைகளுக்குங்கூட இன்பம் பயக்க வல்லவன். ஆனால், கவியின் அழகைப் போற்றும் நல்லுணர்ச்சி, போலிக் கல்வியாலும், பொய் வாழ்க்கையாலும் மறைந்துபோகும்! மறுபுடியும் இந்த நல்லறிவைப் பெற்றால்தான் ஒருவன் ரஸிகனுகலாம்.

* "தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள்).

பாடப்பாட, எல்லோரும் உள்ளம் கசிந்து, கண்ணீர் விடுகின்றனர். "என்ன இது, பழங்கதையா நாம் கேட்கின்றோம்? எல்லாம் நம்முன் நிகழ்கின்றனவே. நாமும் அதில் கலக்கின்றோமே!" என்ற ஆச்சரியத்திலே தன்னிலையை இழக்கிறார்கள். இளங்காயகர்களுடைய உற்சாகம் ஓங்குகிறது. ஆனால், அறியாமலே அவர்கள் மெய் தளர்ந்து, கானம் மெல்ல மெல்லத் தேய்கிறது—நின்றும் விடுகிறது. கீத மந்திரத் தளை அறுகிறது. சபையோர்கள் விழிப்பு நிலை அடைகிறார்கள்.

பழுத்த முனிவர் ஒருவர் எழுகிறார். தள்ளாடி நடந்து, கையிலே ஏந்திய மண் கலசத்தை, அரசிளங் குமரர்களுக்கு அளிக்கிறார். இளம் தபஸ்வி ஒருவன், விரைந்தோடி மரஉரிகள் இரண்டைத் தானும் தருகிறான். மான் தோல் ஆசனத்தை அளிக்கிறான் மற்றொருவன். அந்தணனாயினும் வாலிய முறுக்குக் குலையாத இன்னொருவன், ஒரு விறகு கட்டு, கோடரி, கயிறு, இவைகளைத் தன் காணிக்கையாக வைக்கிறான். பாட்டி ஒருத்தி, தழுதழுத்த குரலில், "குழந்தைகளே, சிரஞ்சீவியாக நீங்கள் இருக்க வேண்டும்" என்று ஆசி கூறுகிறாள். அவ்விரு சகோதரர்களும் கைகுவித்து, மனத்தினால் தங்கள் குருவை வழுத்துகிறார்கள். ஈடில்லாத இக்காவியத்தை, உலக மக்களிடையே கானஞ்செய்வதே, தங்கள் வாழ்க்கைப்பணி இனியெனத் தேர்கிறார்கள். (இதயத்தோடு பொருந்தும் என்ன காட்சியிது!)

பிறகு, நாடுகளிலும், நகரங்களிலும், ராஜவீதிகளிலும், மாந்தர்களின் செவியையும் சிந்தையையும் கவர்ந்து கொண்டே பாடிச் செல்லுகிறார்கள். ஸ்ரீராமனின் அரண்மனை வாயிலில் ஒரு நிமிர்ந்த கூட்டம். இராமன், மாளிகை மீதிருந்து இதைக் காண்கிறார். விரைந்தோடி அவர்களை வரவேற்கிறார். ஒரு மகா சபை கூடுகிறது. தம்பிமார்களும் மந்திரிகளும் சூழ, அரியாசனத்தில் அமர்ந்தவராய், அக்குமரர்களைக் காவியம் முழுவதும் பாடும்படி வேண்டுகிறார். கானம் ஆரம்பமாகிறது. சபையில் ஓர் ஆனந்தம் பரவுகிறது. உடல் குளிர்கிறது. உயிர் தழைக்கிறது. மனம் எல்லையற்ற அமைதியை எய்துகிறது. கவிதைச் சுவை, அரசனை ஆசனத்தி லிருந்து, மக்கள் நடுவே இழுக்கிறது. காவலனும், குடிகளும், காயகர்களும் ஒன்றாய்க் கரைகின்றனர், அக்கானத்திலே, காவியத்திலே—இப்படித் தொடங்குகிறது, வால்மீகியின் மகா காவியம்.

இத்தோற்றுவாய் வால்மீகி இராமாயணத்திற்கு ஓர் அணிகலன் மட்டுமன்று. அக்காவிய உடலுக்கே ஜீவநாடியாக அமைந்து கிடக்கிறது. அதில் நம் கையை வைத்துப்பார்த்தால் அம் மகா காவியமே பேசும் என்பதற்கு ஐயமில்லை. அதில் கவிதையின் பிறப்பைக் காண்கின்றோம். ஒரு காவிய ரஸிகனின் மனப்பண்பும் நமக்குத் தெரிகிறது. ஒரு மகாகவியின் ஆழ்ந்த உள்ளத்தில் தோன்றிய உண்மைக் காவியம், ஒவ்வொரு இதயத்திலும் ஒலிக்கும் என்ற தத்துவத்தையும் உணர்கிறோம். அரணியத்தில் தோன்றிய காவியம் நாடு நகரமெங்கும் பரவுகிறது. அதோடு அது நிற்கிறதில்லை. அனேக நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய அக்காவியத்தின் இன்னிசை இப்பொழுதும் நம் இதயத்தைத் தொட்டு நம்மை மெய்ம்மறந்துவிடச் செய்கிறது. காலதேச வரம்பு கடந்து, கவி சிருஷ்டித்த உலகத்தில் நாம் உலாவுகிறோம்.

குறுகிய நெறியை விட்டு, பரந்த மெய்ந் நெறியில் அக்காவியம் செல்வதால், அது சிதையாத அமர முத்திரை பெற்று விளங்குகின்றது. எந்தக் கவியும் தன் காலத்திற்குப் புறம்பே முற்றிலும் நிற்க முடியாது. ஆனால் அவ்வப் பொழுது நடமாடி மறைகின்ற பழக்க வழக்கங்களுக்கு உருக் கொடுப்பதோடு நில்லாமல், அவைகளை வைத்துக் கொண்டே மனிதனுடைய அழியாத மூல இயல்பை உள்ளபடி சித்தரிக்கிறான் மகாகவி. சாதாரண விஷயத்திற்குத் தகுந்த உருவம் அமையுமானால்

அதை "நல்ல கலை" என்று சொல்லுகிறோம். விஷய காம்பீர்யமும் சொற்செறிவும் பொருந்தினால் அதை "உயர் கலை" என்று சொல்லுகிறோம். நல்ல கலையானாலும் சரி, உயர் கலையானாலும் சரி, ஒரு முக்கிய அம்சம் உருத்தான். பொருள்தான் உரு, உருத்தான் பொருள்: இவ்விரண்டிற்கும் வித்தியாசம் இல்லை என்றும் சொல்லலாம். "வாக்கும் அர்த்தமும் போல" என்றல்லவோ காளிதாஸன் அர்த்தநாரீசுவர உருவத்தை வர்ணிக்கிறான்! சொற்கள், வாக்கியங்கள், காட்சிகள், படலங்கள்—இவைகள் பிற்காலத்துக் கவிகளில் துண்டு துண்டாய் நின்று விடுகின்றன. இவைகளைத் தனித் தனியாய் ஆராய்ந்தால் ஒருவித அழகைக் காணலாம். ஆனால் முழுக் காவியத்தின் பொருத்த முள்ளவைகளாய் அமைகிறதில்லை. ஆதி கவி, வால்மீகி பகவானுடைய கண்ணிற்கு முன் காவியம் முழுவதுமே விரிந்து கிடக்கின்றது. ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு காட்சியும், அந்த அந்த இடத்தில் தானாகவே வந்து சேர்கிறது. எல்லா ரசங்களையும் அவர் கையாளுகிறார். ரசத்திற்குத் தகுந்த சித்திரம் நம்முன் அலர்கின்றது. காவியத்தில் எழுகின்ற ஒவ்வொரு ஒலியும் அக்காவியத்தின் மூல சுருதியில் கரைந்து விடுகின்றது. தனித்துப் பேசுகிறதில்லை.

வால்மீகி ராமாயணத்தின் மூல சுருதி என்ன, என்று கேட்டால், "கருணை" என்று சொல்லிவிடலாம். இக்கருணை எல்லா இடத்திலும் பாய்கிறது. மேனாட்டார் போற்றும் ஹோமரின் "இலியத்தில்" சீற்றந்தான் ஆதார சுருதியாக விளங்குகிறது. "அக்கிலீஸின் அழல் சீற்றத்தைப் பாட அருள்வாய்" என்றே காவியம் ஆரம்பிக்கிறது. அப்பொழுது எழுந்த சீற்றத்தின் ஒலியை மேனாட்டில் சதா நிகழ்கின்ற போர்களிலே இன்றும் கேட்கின்றோம். மகா கவியின் உள்ளத்தில் தோன்றிய உண்மைக் கால வெள்ளத்தில் மறையாது என்பதற்கு இது ஒரு சான்று போதும்.

ஒரு பொருள்மீது வைத்த அன்பினால், அதை அதிகப்படுத்திச் சொல்லி விடுகிறார்கள் சிலர்; அதில் எழுந்த வெறுப்பினால், அதன் பெருமையைக் குறைத்து விடுகிறார்கள் மற்றுஞ் சிலர். விருப்பு, வெறுப்பு, இவைகளை விலக்கி, உள்ளபடி சொல்லுகிறதுதான் சிரமம். நல்லோர்க்கும், பொல்லார்க்கும் நடுவே நின்று நோக்குகின்ற தெய்வம்போல உண்மைக் கவி விளங்குகிறான். தெய்வம் போல இவன் தன் சிருஷ்டிகளோடு ஒன்றாகி விடுகிறான். சிருஷ்டிகளிலிருந்து தனித்தும் நிற்கிறான். கவிக்கு இந்தத் தனித்த நிலை இல்லாத போனால், கதா பாத்திரங்களெல்லாம் அறுபட்ட உறுப்புக்கள் போலாகி, காவியத்தின் திவ்ய சரீரம் சிதைவுறும். காவியத்திற்கு உயிர் கவிதான். இவ்வுயிருக்கு நிலை கவி கண்ட உண்மைதான். ஆனால் எல்லாக் கவிகளும் உண்மையின் ஒரே தோற்றத்தைத்தான் காண முடியும்—அல்லது காண வேண்டும் என்ற நியதி இல்லை. கண்ட தோற்றத்தின் உண்மை மட்டும் காவியத்தில் பிரதிபலிக்க வேண்டும். இது கைகூடுகிற அளவிலேதான், காவியத்தின் ஒரு பகுதியாவது, கால மாறுபாடுகளுக்கு இடையே நிலைபெற்றிருக்கும்.

நூற் பயிற்சியினாலும், கேள்வி அறிவினாலும், சிலர் கவியின் நிலையை அடையக் கூடும். ஆனால் பெரும்பாலும் இவர்களின் காவியங்களில் ஓர் இயற்கை மணம் வீசாது. பழைய ஏட்டுச் சுவடிகளின் மக்கிய நாற்றம் நடுநடுவே அடிக்கும். ஆதி கவியான வால்மீகியின் இயற்கை மணத்தைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. ஹோமரின் "இலியத்திலும்" இதே மணத்தை நுகர்கின்றோம். வர்ஜிலின் "ஈனியத்தில்" சம்பவங்களும் சொற்றொடர்களும், இலியத்தைப் பின்பற்றி யிருந்தாலும், அந்த முதற் பசுமை இல்லை. இதுபோலவே நம் நாட்டுக் கவி காளிதாஸனிடமும் வால்மீகியின் இயற்கை அழகு மறைய ஆரம்பித்து விடுகிறது. பிற்காலத்திய வடமொழிக் கவிகளிடம் இந்த அழகு

அபூர்வமாகப் போய்விடுகிறது. தமிழிலும் சங்க இலக்கியங்களில் தோன்றும் இளமை அழகு கால ஓட்டத்தில் தேய்கிறது. கம்பனின் காவியமும் இதற்கு விலக்கன்று. ஆங்கிலக் கவிகளில் மில்டனின் போக்கும் இவ்விதமே கல்வித் திறனைப் பற்றி நிற்கிறது.

இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு. இலக்கியத்தின் அழகை—சுவையை—நன்கு அறிந்து அனுபவிப்பதற்குக் கருவியாகவே இலக்கணம் முதலில் தோன்றி இருக்க வேண்டும். இந்த முறையிலே பார்த்தால், இலக்கியம் விரிய விரிய, இலக்கணமும் அதற்கு இடம் தர வேண்டும். ஆனால் உண்மை இலக்கியத்தின் மூல தத்துவத்தைப்பற்றிய வரையில் ஒரு விதமான மாறுபாடும் இருக்க முடியாது. காலப் போக்கில் உருவங்கள் மாறும் — மாறத்தான் வேண்டும். இதற்கு இலக்கணம் இடையூறாக நிற்கக்கூடாது. இலக்கியச் சரித்திரத்தை நோக்கினால், இலக்கணமும் அலங்கார சாஸ்திரமும், உண்மைக் கவிதைக்கு பெரும்பாலும் தடைகளாகவே நின்றதாகத் தெரிகிறது. கவி பாடப் புகுந்தவன் இலக்கிய உலகத்தில் ஓர் இடம்பெற வேண்டுமானால், அவன் இந்த இந்த முறைகளைக் கையாள வேண்டும் என்ற கட்டுப்பாடு எழுந்திருக்கிறது. உதாரணமாக :—

தமிழ்க் காவியம் பாடினால், முறையே கடவுள் வணக்கம், அவை யடக்கம், ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் முதலியவைகளைப் புகுத்தியே தீர வேண்டும். கண்டதுமே காதல்; காதல் அரும்புவதற்கு முன்னமேயே பிரிவுக்காக இரங்கல்—மாலையையும் தென்றலையும், நிலாவையும், காம வேளையும் பழித்தல்—காதலியின் ஒவ்வொரு அவயவத்தையும் அலங்கார சாஸ்திர முறையில் ஒன்று விடாது வர்ணித்தல் முதலிய சம்பிரதாயக் குப்பைகளை விரித்தேதீர வேண்டும். ஜீவனத்திற்காக ஓர் அரசனையோ அல்லது ஒருசெல்வனையோ அல்லது ஒருசமூகத்தையோ அண்டி யிருக்கவேண்டிய நிலையிலே, கவிஞன் தன் கவிதையை ஆதரிப்பவனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது. நன்றி பாராட்டுகிற முறையிலே, கதையின் போக்குக்கு முரணாகச் சொற்களைத் தொடுக்கவேண்டி யிருக்கிறது. இக்காரணங்களால், கவிஞனுடைய உண்மையான மனோபாவம் அவனுடைய கவியில் தோன்றுகிறதில்லை. அநேக போலிக் கவிகளும் வந்துவிடுகிறார்கள். வால்மீகி போன்ற முதல் கவிகளுக்கு இத்தகைய கஷ்டங்கள் இல்லை. அவர்கள் தங்கள் உணர்ச்சி வழியே சென்று, மனித உள்ளத்தின் போக்கு முழுவதையும் ரஸிகனுடைய மனத்திலே எழுப்புகிறார்கள். உள்ளத்தில் தோன்றியதை எக்காரணம் கொண்டும் கரவாது மொழிந்திருப்பதிலேதான் அக்கவிகளின் அழகு நிலை பெற்றிருக்கிறது. வால்மீகி ராமாயணத்திலும் மற்றக் காவியங்களிலும் உள்ள இவ்வழகை ஓரளவு காட்டும் நோக்கத்துடன்தான் தொடங்குகிறது எங்கள் இலக்கிய யாத்திரை.



## மாஸ்தி வேங்கடேசய்யங்காருடைய

# சிறு கதைகள்

[திவான்பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

மாஸ்தி வேங்கடேசய்யங்கார் கன்னட மொழியில் பெரிய எழுத்தாளர். அவர் மைசூர் சமஸ்தானத்தில் பெரிய உத்தியோகங்களை வகித்து இப்பொழுது உபகாரச் சம்பளம் பெற்றுச் சமூக சேவையிலும் மொழித் தொண்டிலும் ஈடுபட்டுத் தன் வாழ்க்கையை நடத்தி வருகின்றார். மிகவும் சாந்தமூர்த்தி, வசிகரமான தோற்றம், சிரித்த முகம், சுறுசுறுப்பான உழைப்புடன் கூடிய வாழ்க்கை முறைகள், கண்களில் எப்பொழுதும் கருணையும் இனிப்பும் சரசத்தன்மையும் விளையாட்டும் மாறிமாறி ஒளி வீசிக்கொண்டிருக்கும். பேச்சில் எப்பொழுதும் நகைச்சுவைத் ததும்பிக் கொண்டிருக்கும். காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றபடி நோக்கமறிந்து ஒருவர் மனமும் நோகாமல் பேசுவார். இப்பொழுது ஓய்வில்லாமல் சலிப்பின்றிக் கன்னட பாஷை மகாநாடுகளைப் பல இடங்களில் நடத்திக் கன்னடமொழியை நன்கு வளர்த்து வருகின்றார். ஏனை மொழிகளுக்குத் தொண்டு செய்யப்பட்டவர்களிடத்திலும் அவர் மிகுந்த அன்புள்ளவர். அன்பு அமைதி அழகு ஆனந்தம் எங்கும் விளங்க வேண்டும் என்ற பேராசை கொண்டவர். குழந்தையைப் போலக் கர்வமற்ற மனப்பாங்குள்ளவர். அதிதிகளைக் கண்டு விட்டால் வெகு சினேகமாக மரியாதையாக வரவேற்று இன்புற்று இன்பப்படுத்தும் இயற்கை உள்ளவர்.

இந்திய மொழிகளில் சிறு கதைகள் எழுதுவது ஒரு புது கலைநிர்மாணமாகும். அந்த முயற்சி வங்காள மொழியில் ரவீந்திரரால் உச்ச நிலையை அடைந்தது. இப்பொழுது நடையிலிருக்கும் எல்லா இந்திய மொழிகளிலும் அது பரவிவிட்டது. பரபரப்பும் நெருக்கடியும் துரிதமும் நிறைந்த இக்காலத்திலும் கலை விருப்பம் குறையவில்லை, குறைய முடியாது, குறையக் கூடாது. சிறு கதைகளும் ஒரு அங்க நாடகங்களும் (one act plays), இசைக்கிசைந்த உணர்ச்சி ததும்பும் கவிதையும் (lyric) வருங்காலத்தில் மிக மேன்மை அடையும். அவைகள் தான் சுருக்கமான காலத்தில் பெரிய கலை இன்பத்தை அளிக்கும். ஆகையால்தான் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அவைகளை இப்பொழுது அதிகமாகக் கையாண்டு வருகின்றார்கள்.

மாஸ்தி வேங்கடேசய்யங்கார் கன்னட மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் யாவரும் நன்கு மதித்துக் கொண்டாடும் ஸ்தானத்தை அடைந்திருக்கின்றார். அவருடைய சிறு கதைகளில் "வேணுகானம்" "தயிர்க்காரி" என்ற இரு கதைகளைத் திருவாளர் மாஜி முதல் மந்திரி சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் தமிழில் அழகாக மொழி பெயர்த்தார். இப்பொழுது மாஸ்தியின் (அவரை அப்படிச் சுருக்கமாகக் கூப்பிடுவது தான் வழக்கம்) சிறு கதைகள் நான்கு புத்தகங்களாக ஆங்கில மொழியில் வெளிவந்துள்ளன. இது ஒரு கொண்டாடக்கூடிய முறை. ஆங்கிலத்தில் வெளியிட்டதால் உலகம் முழுவதும் அவருடைய கலை மகிமையை ஒருவாறு அறியமுடியும். ஆனால் ஏனைய இந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பதுதான் முக்கியமான கடமையாகும். அப்பொழுது தான் எல்லா மொழிகளும் நன்கு வளரும் புதுமையை அடையும், கலையின் முன்னேற்றம் ஏற்படும்.

இந்த நான்கு புத்தகங்களுக்குச் சக்கர வர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஒரு வெகு அழகிய முகவுரையை அமைத்திருக்கின்றார். மாஸ்தி தன் நாட்டிலுள்ள பொது ஜனங்களின் உள்ளுணர்ச்சியை நன்குணர்ந்து சுவைத்துச் சிறு கதைகளை அழகிய புது முறையில் அமைத்திருப்பதை அவர் மிகவும் புகழ்கின்றார்.

இச்சிறு கதைகளை நான்கு முக்கிய வகுப்புகளாகப் பிரிக்கக்கூடும். சில கதைகள் குடும்ப சுகதுக்கங்களைப்பற்றியவைகள். சில கதைகள் சமூக சுக துக்கங்களைப் பற்றியவைகள். சில கதைகள் வேடிக்கைக் கதைகள். சில கதைகள் கற்பனை உலகத்தில் கவியின் சிருஷ்டி. இது தவிர பல வகைப்பட்ட கதைகளும் உண்டு.

முதல் வகுப்பு கதைகளில் "ரங்கப்பாவின் மணம்" "ரங்கப்பாவின் தீபாவளி?" "ரங்கப்பாவின் காதல்" என்ற கதைகளை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அவைகள் ஒரு கன்னட குடும்பத்தில் உள்ள சம்பவங்களைச் சித்தரிக்கின்றன. அவைகளில் வரப்போகிற மனைவி எப்படி வந்து சேருகின்றாள், சின்ன வயதில் மணம் ஏற்பட்டால் உண்டாகும் வேடிக்கை சம்பவங்கள், காதலின் பிறப்பும் வளர்ச்சியும் என்ற விஷயங்களை எளிய அழகிய நடையில் வர்ணிக்கப்பட் டிருக்கின்றன. அப்படியே "எனது உபாத்தியாயர்" என்ற சிறு கதையில் இக்காலத்திய ஆரம்பக்கல்வி ஆசிரியர், அவருடைய மனைவி, இன்ஸ்பெக்டர், மாணுக்கர்கள் முதலியவர்களை அன்புடனும் நகைச்சுவையுடனும் வர்ணித்திருக்கின்றார். அந்த வர்ணனை மேனாட்டு மகாகவி கோல்ட்ஸ்மித்துடைய "பாழடைந்த கிராமம்" (The Deserted Village) என்ற சிறு காவ்யத்தில் உள்ள வர்ணனை போல் அழகிய எளிய முறையில் இருக்கின்றது. "கிருஷ்ணமூர்த்தியின் மனைவி" என்ற கதை மிகவும்உருக்கமாக இருக்கின்றது! "அது இந்திராவா" என்ற சிறு கதையில் இரண்டாம் மனைவியை மணந்த ஒருவன் கனவில் கண்ட முதல் தாரத்தின் வரவை வர்ணிக்கின்றது. உணர்ச்சி ததும்பும் முறையில் எழுதப்பட்டிருக்கின்றது. கணவனை விட்டுப் பிரிந்து அவனையே நினைந்து நினைந்து கண்ணீர் மல்கி மனம்நொந்து வெறுப்புடன் வாழ்க்கையை நடத்திவந்து பிறகு அவனைத் தற்செயலாக அடைந்து களித்த சாவித்திரம்மாவை "காமன் பண்டிகை" என்ற கதை வர்ணிக்கின்றது.

இப்படி அனேக அழகிய முறைகள் விளங்கும் மாஸ்தி சிறு கதைகளில் சம்பவக் குறைவு சம்பாஷணைக் குறைவு இருப்பதாகத்தான் என் விமர்சனம். கதையில் உள்ள பாத்திரங்களின் உணர்ச்சியை அவர்களுடைய பேச்சாலேயே காட்டினுல் கலையழகு நன்கு வெளிவரும். கதையிலோ கவிதையிலோ உணர்ச்சி வர்ணனைதான் உயிர்நிலை. ஆசிரியரே வர்ணிக்கலாம். பாத்ரங்களின் பேச்சாலும் காட்டலாம். பின் சொல்லிய முறைதான் முக்கியம். ஆங்கிலச் சிறு கதை ஆசிரியர்களில் மிகவும் பிரசித்தி அடைந்த எழுத்தாளர்கள் அம்முறையைத்தான் அதிகமாக உபயோகப்படுத்தி இருக்கின்றார்கள்.

சிறு கதைகளில் இயற்கை அழகு வர்ணனைகள், முக்கிய சம்பவங்கள், குறைந்த சிரத்தையான கதைப் பாத்திரங்கள், அவர்களுடைய சுக துக்கங்களை அவர்களுடைய பேச்சால் வெளியிடுதல், ஆசிரியரின் சுய எண்ணங்கள், எல்லாம் பஞ்சாமிர்தம்போல இனிப்பாகக் கலந்திருக்க வேண்டும். ஆனல் ஓர் அம்சத்தையாவது மிகவும் விரிக்கக் கூடாது சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற குணங்கள் எழுத்தாளர்களுடைய எல்லா முறைகளிலும் இருக்கவேண்டும் என்பது உண்மையானுலும் அக்குணங்கள் சிறு கதைகளில் முக்கியமாக இருக்க வேணும். மாஸ்தி கதைகளில் சம்பவங்களை விரிந்த முறையில் ஆசிரியரே கூறுவது அவருடைய நடைச்சித்திரம். சிறு கதைகளில் மிகவும் விரிவு இருந்தால் இனிப்பு கற்கண்டில் போல் இறுகி இருக்க முடியாது. ஆனல் அனேக

அழகு முறைகள் நிறைந்த அவருடைய சிறு கதைகளில் இதை ஒரு குறையாக அடித்துக் கூறுவது மிகையாகும்.

மாஸ்தியின் சமூகக் கதைகளும் நன்ருக இருக்கின்றன. 'தயிர்க்காரி' என்ற கதையில் ஒரு ஏழைக் குடும்பத்தின் நிலையையும் கிராம வாழ்க்கையின் உருவத்தையும் காணலாம். "அந்த மாது" என்ற கதை ஒரு வேசியின் நிலையை சித்திரிக்கின்றது. அது நன்கமையவில்லை. குருடாய்ப் பிறந்த ஒரு பெண்ணின் வாழ்க்கையை "மேலூர் லக்ஷமம்மா" என்ற கதை உருக்கமான முறையில் காட்டுகின்றது. "சுபேதாரின் அபாயம்" என்ற கதை கொஞ்சம் நொண்டியாக இருக்கிறது. அதில் வேடிக்கையோ வாழ்க்கைச் சித்திரமோ மேம்பட்ட நடையில் இல்லை. ஆனல் "உக்கிரப்பாவின் ஆண்டின் புது தினம்" வெகு அழகிய கதை. கிராம முனிசிப்பின் ஓய்வற்ற உழைப்பையும் கிராம வாழ்க்கையின் முறைகளையும் அதில் நன்கு காணலாம். "ரங்கசாமியின் பேதமை" என்ற கதையில் உணர்ச்சி மங்கி இருக்கின்றது. "வேங்கடசாமியின் காதல்" என்ற கதையில் உணர்ச்சி பொங்குகின்றது. "கல்மாடி எருமை" என்ற கதையில் பிராணி பலி கொடுக்கும் முறையின் பயங்கர உணர்ச்சியைக் காணலாம். "ஜோகி அஞ்சப்பாவின் கோழி" வேடிக்கையாக இருந்தாலும் விசேஷ உணர்ச்சி நிறைந்ததாக இல்லை. "வேங்கடராவ் பிசாசு" என்ற கதையும் அப்படியேதான்.

ஆனல் மாஸ்தி வேங்கடேசய்யங்காருடைய கற்பனைத் திறமையும் வர்ணனை அழகும் அவருடைய கற்பனைப் பிரபஞ்ச சிருஷ்டிக் கதைகளில் வெகு நன்ருக விளங்குகின்றன. "சகுந்தலாவின் திரும்பி வருகை" என்ற கதை வெகு அழகு. சகுந்தலையும் பரதனும் கண்வர் ஆச்ரமத்திற்கு வருகையை மிகவும் அழகான ஆச்சர்யமான முறையில் அக்கதை சித்திரிக்கின்றது. "ஸ்ரீ ராமானுஜரின் மனைவி" என்ற கதையும் உணர்ச்சி நிறைந்த அழகிய கற்பனைக் கதை. "மற்ருெரு பழங் கதை" என்ற கதை பராசர பட்டர் வாழ்க்கையை வர்ணிக்கின்றது. அது நன்ருக இருந்தாலும் முற்கூறிய இரண்டு கதைகளைப்போல் அமையவில்லை. ஆனல் "பெனுகொண்டா கிருஷ்ண விக்கிரகம்" "சாரி புத்திரருடைய முடிவு நாட்கள்" என்ற கதைகளில் வர்ணனையும் உணர்ச்சியும் வெகுவாக புகழக்கூடியவை. எல்லாவற்றைக் காட்டிலும் "ஒரு கவியின் கடைசிநாள்" என்ற கதை ஒப்பற்ற கதை. அது கதே என்ற ஜெர்மன் மகாகவியின் ஆச்சர்யமான மோகனமான வாழ்க்கையை அவருடைய முடிவுநாள் கனவு உருவமாகக் காட்டுகின்றது. அதுபோல் 'மாசு மட்டி' என்ற ஒரு ஓவியக்காரரின் கிருஷ்ணசித்திர நிர்மாணம் வெகு அழகாக இருக்கிறது.

மாஸ்தியின் பலவகைச் சிறு கதைகள் ஒரு சிறந்த கதம்பம். அவைகளில் "ஷாவின் தீர்ப்பு" என்ற இரண்டு கதைகள் "அரபி இரவுக் கதைகளை"ப் பின்பற்றியவை. "ஒரு பழங்கதை" என்ற கதையில் ஹரி கதைகளில் நாம் அடிக்கடி கேட்கும் ஒரு கதையைக் காண்கிருேம். "ஒரு மல்காட்டுப் பிசாசு" என்ற பிசாசுக்கதை சுமாராக இருக்கின்றது. "நிஜ கல்யாணி" "பண்டிதரின் மரண சாசனம்" என்ற கதைகளும் நடுமாதிரிக் கதைகளே. 'தப்பண்ணு' என்ற கதை ஒரு பெரிய சிறு கதை. அது தனலக்ஷ்மி கடாக்ஷமில்லாவிட்டாலும் தனலக்ஷ்மி கடாக்ஷம் உள்ளவரின் வாழ்க்கையை அழகாகவும் உருக்கமாகவும் வர்ணிக்கின்றது.

தமிழ்நாட்டிலுள்ள எழுத்தாளர்களில் பலர் சிறு கதைகளை உணர்ச்சிச் சிறப்பு வர்ணனைச் சிறப்புடன் எழுதுவதில் மிகத் தேர்ச்சி யுள்ளவர்கள். ஆனல் அவர்களும் மாஸ்தி வேங்கடேசய்யங்காருடைய கலையழகை மெச்சி அவருடைய சிறு கதைகளைப் படிப்பதால் தங்களுடைய கலையை முன்னிருந்த நிலையை விட உயர்ந்த நிலைக்குக் கொண்டுவைக்கக்கூடும் என்று என்னுடைய திண்ணமான எண்ணம்.

---

# வசனக் காவியங்கள்

[டுர்ஜெனீவ் ரசனையின் மொழிபெயர்ப்பு]

III

[இந்த இதழுடன் மூன்று மாதங்களாகத் தொடர்ந்து வெளிவரும் மொழிபெயர்ப்பு முடிவடைகிறது. டுர்ஜெனீவ் செய்திருக்கும் வசனக் காவியங்கள் சுமார் ஐம்பது. காந்ஸ்டந்ஸ் கார்நேட் என்ற அம்மையாரால் ஆங்கிலத்தில் வெகு அழகாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலிருந்து பொறுக்கி ஆங்கில அனுவாதத்தைத் தழுவியே மொழி பெயர்த்து இங்கே 26 காவியங்கள் தரப்பட்டிருக்கின்றன. 'தாய்ப் பாஷை' என்ற துணுக்கில் டுர்ஜெனீவுக்குத் தன் தாய் மொழியினிடமிருந்த ஆர்வமும் மதிப்பும் நன்கு வெளிப்படுகின்றன. அதில் அவர் ருஷியாவின் நிலைமையை வருணிப்பது நம் தேசத்தின் தற்கால நிலைமைக்கும் ஒக்கும். ஆகவே, தமிழன் ஒவ்வொருவனும் தன் தாய்ப் பாஷையைக் காத்துப் போஷித்துக் கௌரவிப்பதற்கும் அதன் மூலம் தேசசேவை செய்வதற்கும் டுர்ஜெனீவ் போன்ற உலகப் பேராசிரியர்களின் இலக்கியங்களை பாவம் மாறாமல் இங்கிதமறிந்து மொழிபெயர்ப்பதும் ஒரு வழியாகும்.—ர.]

---

## தாய்ப் பாஷை

எப்போதும் கலவரப்பட்டுக் கொண்டும் என் தேசத்தின் தலை விதியை நொந்து கொண்டும் இருக்கும் இந்நாளில் நீ யொன்றுதான் எனக்குப் பற்றுக்கோல், ஸத்தியமும் சுதந்திரமும் ஊடுருவி நிற்கும் என் மாபெரும் ருஷிய மொழியே! நீ ஒன்று இல்லையேல், நம் நாட்டில் நடப்பதையெல்லாம் கண்டு நம்பிக்கை யிழக்காமல் எப்படி இருக்கமுடியும்? ஆயினும் இத்தகைய மொழியைப் பெற்ற ஜனங்கள் பெருமை வாய்ந்தவரல்லரென்று எண்ணலாகுமா?

---

## இரு!

இரு! இதோ என் கண்முன் தோன்றுகிறபடியே என்றைக்கும் அழியாது என் ஞாபகத்தில் நீ இருத்தல் வேண்டும்.

தெய்விகச் சக்திபெற்ற நாதத்தின் கடைசி அலை உன் அதரத்திலிருந்து எழும்பிவிட்டது. உன் கண்களில் ஒளியுமில்லை மின்னலும் இல்லை. சுகமாகிற பளுவும், பிரும்மானந்தத்தை ஊட்டும் அழகை அமைக்க நீ கொடுத்து வைத்தாயே, அந்த அழகும் சேர்ந்து உன் கண்களை அமுக்கி மங்கச் செய்திருக்கின்றன. அந்த அழகைக் கட்டிப் பிடிக்கவல்லாவோ உன் ஆர்வங்கொண்ட கைகளை, வெற்றிபெற்றுக் களைத்த கைகளை நீட்டியிருக்கிறாய்!

இது என்ன தேஜஸ்—கதிரவன் காந்தியைவிடத் தூய்மையும் மேன்மையும் வாய்ந்த தேஜஸ்—உன் ஒவ்வொரு அவயவத்தையும், புடைவையின் சிறு மடிப்பையுங்கூடக் கவிழ்ந்து கிடக்கின்றதே!

உன் கலைந்த கூந்தலை மிதக்கச் செய்யும் காற்று எந்தத் தேவனின் கொஞ்சும் மூச்சோ!

உன் புருவத்தில், இப்பொழுது சலவைக்கல் போல் வெளுத்திருக்கும் புருவத்தில் அவன் முத்தம் தகதகவென்று எரிகிறது.

ஆகா! கண்டு கொண்டேன் தத்துவத்தை; கவிதையின் மர்மமும் வாழ்நாளின் மர்மமும் அன்பின் மர்மமும் இதுதான். இதுவே அமரத்துவம்! வேறு அமரத்துவம் கிடையாது, வேண்டுவதுமில்லை. இந்த ஒரு க்ஷணம் நீ சாசுவதை.

அது முடிந்தால் திரும்பவும் நீ கேவலம் தூசி, பெண், குழந்தை....எப்

படி யிருந்தாலென்ன ? இந்த ஒரு விநாடிப் பொழுது அநித்தியமாயும் நசுவரமாயுமுள்ள ஸமஸ்தத்திற்கும் நீ மேலும் புறம்பும் ஆவாய். இந்த உன் விநாடி என்றைக்கும் அழியாது.

இரு! நானும் உன் அழியா நிலைமையில் கலக்கிறேன்; உன் நித்திய வாழ்வின் ஒளியில் என் ஆன்மா பரிணமிக்கட்டும்.

---

## என்ன எண்ணுவது....?

உயிர் நீக்கும் தருவாயில், என்னைத் திறமிருக்குமாயின், எதைப்பற்றி நினைப்பேன் ?

வாழ்நாளைப் பயன்படுத்தாமற் போனேனே, தூங்கிச் சோம்பிக் கழித்தேனே, அதன் சுகத்தைக் கொஞ்சமும் அடையாமல் விட்டேனே, இதையெல்லாம் எண்ணவா ?

“ என்ன, சாவா ? அதற்குள்ளா ? சே! இராது ! ஏன், நான் இன்னும் ஒரு காரியமும் பண்ணவில்லையே....இப்பொழுது தானே வேலை துவக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன் !”

நடந்து போனதை நினைப்பதா? அத்தி பூத்தாப்போல் அபூர்வமாய் விநாடிப் பொழுது நிகழ்ந்த சில சந்தோஷச் சம்பவங்கள் உண்டே—அருமையான தோற்றங்கள், அன்பிற்குரிய முகங்கள்—இவைகளை எண்ணவா ? என் தீய வினைகள் மனத்திடையே தோன்றுமோ ? மாற்றொணாத குற்றத்தை யெண்ணி எண்ணி ஆறாத் துக்கத்தில் என் ஆன்மா வதகுமோ ?

இவ்வாழ்க்கையைத் துறந்தால் அப்புறம் என்ன கிட்டுமோ என்று எண்ணவோ?....உள்ளபடி அப்புறம் ஏதாவது உண்டோ ?

இல்லை........இவ்வித எண்ணங்களுக்கு இடம் கொடுக்க மாட்டேனென்றே நினைக்கிறேன். என் முன்னே தோன்றும் பயங்கரமான அந்தகாரத்தை மறந்திருப்பதற்காகவே ஏதாவது ஒரு அற்ப விஷயத்தைப்பற்றிக் கட்டாயம் யோசிக்கலாகும்.

பிராணன் போகும் சமயத்தில் ஒருவன் தனக்கு வாயில் போட்டுக் கடிக்கப் பாக்கு தாமாட்டேனென்கிறார்கள் என்று விடாமல் குறை சொல்லிக் கொண்டிருந்தான்....வெகு சீக்கிரம் ஒளியிழந்து வரும் அவன் கண்களுக்குள்ளே மட்டும் ஆழத்தில் மரணக் காயம்பட்ட பறவையின் அறுந்து தொங்கும் இரக்கைபோல ஏதோ ஒன்று திண்டாடித் தத்தளித்தது.

---

## பிரகிருதி

பூமிக்குள்ளே உயர்ந்தோங்கிய வளைவுக் கூரை வேயப்பட்ட வெகு பெரிய கோயில் ஒன்றை சொப்பனத்தில் கண்டேன். அதில் ஒருவிதமான நிரந்தரக் கிழுல ஒளி நிலவியிருந்தது.

கோயிலின் நட்ட நடுவே தரையில் புரளும் ஆடம்பரப் பச்சை ஆடை அணிந்த கம்பீரமான ஸ்திரீ ஒருத்தி காணப்பட்டாள். கையில் தலையை ஏந்தினபடி தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாப்போல் பட்டது.

இந்த மாது பிரகிருதியே என்று கண்டேன்; வணக்கம் நிறைந்த விநயம் என் அந்தராத்மாவைச் சிலிர்க்கச் செய்தது.

உட்கார்ந்திருக்கும் அந்த உருவத்தை அணுகி, மரியாதையாய்க் கும்பிட்டு, “எங்களெல்லோரையும் படைத்த தாயே, எதைப்பற்றி யோசிக்கிறாயோ? மனிதவர்க்கத்தின் வருங்கால விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கிறாயா ? மனிதன் எவ்விதம் பூரணமடைந்து சுக வாழ்வு வாழலாமென்று எண்ணுகிறாயா ? ” என்று ஆவலாய்க் கேட்டேன்.

அந்த ஸ்திரீ மெதுவாகத் திரும்பித் தன் கறுத்த பயமூட்டும் கண்களால் என்னைப் பார்த்தாள். உதடுகள் அசைந்தன. இரும்பு மோதிக் கிளம்பும் சத்தம் போன்று கனீரென்ற குரல் கேட்டது.

“ ஈயின் கால் தசைகளுக்கு எவ்விதம் அதிக பலமளித்தால் அது தன் சத்துருக்களிடமிருந்து சுலபமாய் விடுபடலாமென்று யோசிக்கிறேன். அபாயமும்

அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியும் தராசு முனைப்பது போல் சரி சமனாய் நின்ற நிலை குலைந்து விட்டது....அதை மறுபடி நாட்டவேண்டும். ”

“ என்ன? எதைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறாய்? மனிதர்களாகிய நாங்களல்லவா உன் செல்லப் பிள்ளைகள் ?” என்று நாகுழறக் கேட்டேன்.

அந்த மாது மூஞ்சியைக் கொஞ்சம் சிணுக்கினாள். “ எல்லாப் பிராணிகளும் என் குழந்தைகள் தான். எல்லாவற்றையும் சமானமாக வளர்க்கிறேன், ஒன்று போல் எல்லாவற்றையும் அழிக்கவும் அழிக்கிறேன். ”

“ அப்படியானால் ஒழுங்கு.......காரணம்....நியாயம்..........” என்று ஏதோ தழதழத்த குரலில் ஆரம்பித்தேன்.

“ அதெல்லாம் மனிதர்கள் பேச்சு. எனக்கு ஒழுங்குஒழுங்குத் தப்பு ஒன்றும் தெரியாது. உங்கள் காரணம் என்னைக் கட்டுப்படுத்தாது—நியாயம் என்கிறாயே, அதென்ன ?—உனக்கு உயிரை அளித்தேன், அதைப் பறிப்பேன், பிறருக் களிப்பேன், புழுவாயிருக்கட்டும் மனிதனாயிருக்கட்டும்........எனக்கு அக்கறையில்லை........உன் அலுவலைப் பார், என் வேலையில் குறுக்கிடாதே” என்றது அந்த இரும்புக் குரல்.

பதில் சொல்லியிருப்பேன்........அதற்குள் பூமி ஒரு பெரும் முக்கல் முக்கிக் கடகட என்று சப்தித்தது, விழித்துக் கொண்டுவிட்டேன்.

---

## சுவரிலமைத்த பதுமைச் சித்திரம்

எலும்பு கிளம்பின நெட்டைக் கிழவி ஒருத்தி, கடுமைகொண்ட முகமும் அசைவற்ற மழுங்கல் பார்வையுமாய், இன்னொரு ஸ்திரீயைக் கட்டைபோன்று வறண்ட தன் கையால் முன்னே தள்ளிச் செல்கிறாள்.

இந்தப் பெண்பிள்ளையோ—ஆஜானுபாகு, பருத்து ராக்ஷஸ பலம் வாய்ந்த உடல், இருந்தின பெருங் கழுத்தில் பொருந்திய குடுக்கைத் தலை, கண் இரண்டும் பொட்டை—இவளும் உடல் மெலிந்த சிறு பெண் ஒருத்தியைத் தன் முன்னே இடித்துத் தள்ளிச் செல்லுகிறாள்.

இந்தப் பெண்ணுக்கு மட்டும்தான் கண் தெரிகிறது. போகாமல் முரண்கிறாள், திரும்பித் திரும்பிப் பார்க்கிறாள், லக்ஷணம் வாய்ந்த சிவப்புக் கைகளைத் தூக்குகிறாள்; உயிர்ததும்பும் அவள் முகம் சற்றும் பொறுமையின்றியும் தைரியம் பொங்கியும் விளங்குகிறது. அவள் படியவோ அவர்கள் பலாத்காரமாய் இட்டுப் போகும் இடத்திற்குப் போகவோ இஷ்டப்படவில்லை...........அப்படி யிருந்தும் அடங்கிப் போகத்தான் வேண்டியிருக்கிறது.

நிர்பந்தம்—உயிர் — சுயேச்சை : விளங்குகிறதா இந்த சூத்திரம்?

---

## தொழிலாளியும் வெளுப்புக் கையனும்

தொ : எங்கே மெள்ள மெள்ள நகர்ந்து வருகிறாய் எங்களிடம்? என்ன வேணும்? நீ எங்களைச் சேர்ந்தவனல்ல, போ, போ.

வே : தோழர்களே, நானும் உங்களைச் சேர்ந்தவன்தான் !

தொ : எங்களைச் சேர்ந்தவனும்! அழகாயிருக்கிறது ! என் கையைப் பார். எத்தனை அழுக்கேறி யிருக்கிறது ? மண் நாற்றம் வேறு, தார் நாற்றம் வேறு —உன் கைகளோ தூ வெள்ளை. அவை என்ன மணம் வீசுகின்றன ?

வே : (கைகளை நீட்டி) : மோந்து பாரேன்.

தொ : (மோந்து) ஆரம்பமே விபரீதமாயிருக்கிறதே. இரும்பு நாற்றம்போலல்லவா இருக்கிறது?

வே : ஆம் ; இரும்புதான், ஆறு வருஷம்—ஒரு வருஷம் இரண்டு வருஷமல்ல—இந்தக் கைகளில் விலங்கு தரித்திருந்தேன்.

தோ: அது ஏனோ?

வே: ஏனு? உங்கள் நன்மைக்காக உழைத்தேன்; துன்புறுவோரையும் பேதைகளையும் விடுவிக்க முயன்றேன்; உங்களை இம்சிக்கிறவர்களை எதிர்க்க ஜனங்களைத் தூண்டினேன்; அதிகாரிகளை எதிர்த்தேன்........ஆகையால் என்னைச் சிறையிலிட்டார்கள்.

தோ: சிறையி லி ட் ட ா ர் க ள ா? வேணும் உனக்கு. எதிர்த்ததற்குத் தக்க தண்டனை.

(இரண்டு வருஷங்கள் கழிந்தன)

அதே தொழிலாளி இன்னொருவனைப் பார்த்து: அடேய், இரண்டு வருஷத்திற்குமுன் வெளுப்புக்கையன் ஒருத்தன் உன்னிடம் பேசினானே, ஞாபக மிருக்கிறதா?

மற்றவன்: ஆ ம ா ம்....அதற்கென்ன இப்பொழுது?

முதலவன்: அ வ னை இன்றைக்குத் தூக்கிலிடப் போகிறார்களாம். உத்தரவு பிறந்திருக்கிறது என்று சொல்லிக் கொண்டார்கள்.

ம: அ தி க ா ரி க ளை எதிர்த்துக் கொண்டே யிருந்தானே?

மு: ஆம், விடாப்பிடியாய்.

ம, ஓஹோ........என்ன, அண்ணே, அவனைத் தூக்குப்போடப்போகிறார்களே, அந்தத் தூக்குக் கயிற்றில் ஒரு துண்டு சம்பாதித்தால் நன்றாயிருக்கும். அது ரொம்ப அதிர்ஷ்டம் என்கிறார்களே!

மு: நிசந்தான். சரி, பார்ப்போம், தம்பி.

---

## "மூடன் தீர்ப்பு"

"மூடன் தீர்ப்பையும் கேட்கவேண்டியிருக்கும்...." ஆகா, நூற்றில் ஒரு வார்த்தை நீ சொன்னது, எங்கள் *கவியரசே! பொய்யா மொழியல்லவோ நீ.

"மூடன் தீர்ப்பும் சந்தைக் கூட்டத்தின் பேச்சு சிரிப்பும்" யார் அறியார்?

இதெல்லாம் பொறுத்தாக வேண்டியதுதான், பொறுக்கவும் பொறுக்கலாம்.

என், தெம்பிருந்தால் இதையெல்லாம் அலக்ஷியமும் பண்ணிவிடலாம்!

ஆனால் நாராசமாய் உள்ளத்தில் போய்த் தைக்கும் சில கொடுமைகள் உண்டு....ஒருவன் தன்னாலியன்றதைச் செய்கிறான்; உண்மையாயும் வஞ்சனை இ ல் ல ா ம லு ம் முழு மனத்தோடும் உழைக்கிறான்....அப்படி யி ரு ந் து ம் யோக்கியர்கள் அவனை வெறுக்கிறார்கள்; அவன் பெயரைச் சொன்னாலே ருஜுவான மனிதர்கள் முகத்தில் கோபாக்கினி ஜொலிக்கிறது. "ஒழி! தொலை!" என்று உண்மையான சிறுவர்கள் அவன் மேல் எறிந்து விழுகிறார்கள். "நீயும் வேண்டாம் உன் சேவையும் வேண்டாம். உன் நாற்றமே இங்கே உதவாது. எங்களை அறியவோ எங்கள் உண்மையை உணரவோ உன்னால் இயலாது.... நீ எங்களுக்குப் பரம சத்துரு!"

அவன் என்ன பண்ணுவது? தன் வேலையைச் செய்யவேண்டியதுதான். தான் செய்வது சரி என்று எடுத்துக் காட்ட முயலவோ, இப்பொழுதில்லாமற் போனாலும் நியாயம் ஒருநாள் பிறக்கும் என்று எண்ணவோ கூடாது.

ரொட்டிக்குப் பதிலாகவும் ஏழைகளுக்குணவாகவும் தற்காலம் வழங்கும் உருளைக்கிழங்கை முதன் முதல் கொணர்ந்த யாத்திரிகனை உழவர்கள் திட்டத்தான் செய்தார்கள்........அந்த அரிய கொடையை அவன் கைநீட்டிக் கொடுக்க எத்தனிக்கையில் உதறித் தள்ளி மண்ணில் போட்டு மிதித்தார்கள்.

இப்பொழுதோ அதைக் கொண்டு வயிறு வளர்க்கிறார்கள்: அதைத் தந்த உபகாரியின் பெயர்கூட அவர்களுக்குத் தெ ரி ய ா து. அப்படித்தானிருக்கட்டுமே! அவன் பெயர் தெரிந்தென்ன ஆகவேணும்? அநாமதேயமா யிருந்தாலும் அவனால் அவர்கள் பசியில்லாமலிருக்கிறார்களல்லவோ?

நாம் தருவது உடலுக்கு உகந்த உணவா என்ற ஒன்றைத்தான் கவனிக்க வேண்டும்.

அநியாயமாயும் ஆத்திரமாயும் நிந்திக்கிறார்கள் உன் அன்பிற்குரியோர்....

---

*புஷ்கின் என்ற ருஷ்ய மகாகவியின் காவியத்தில் வரும் வாக்கியம் இது.

அதைப் பொறுத்துக் கொள்ளலாம்.... "என்னை அடித்தாலும் அடி, நான் சொல்வதை மட்டும் கேள்" என்றான் ஏதன்ஸ் நகரத்துத் தலைவன் ஸ்பார்ட்டா நகரத்தவனைப் பார்த்து.

"என்னை அடித்தாலும் அடி, தெம்பாயிரு, நன்றாய்ச் சாப்பிடு!" என்றுதான் நாம் சொல்லவேண்டியது.

---

## பிழைக்கும் வழி

ஒரு கிழப்போக்கிரி, வெகு தந்திரசாலி .அவன், எனக்கு ஒரு சமயம் உபதேசம் பண்ணினான் பின்வருமாறு. "உன் விரோதியை வயிற்றெரிச்சல் கொட்டவேணும் உபத்திரவப்படுத்தவேணும் என்றால் ஒரு காரியம் பண்ணு. உன்னிடத்தில் என்ன குறையோ கெடுதலோ இருக்கிறதோ அதையே அவனிடம் ஆரோபணம் பண்ணு. வெகு கோபம் வந்தாற்போல் அவனைத் தாக்கு.

"அப்படிச் செய்தால் முதல் பக்ஷம் பிறத்தியார் உன்னிடம் அந்தக் குறையோ கெட்ட குணமோ இல்லையென்று நினைப்பார்கள்.

"இரண்டாவது, உன் ஆத்திரமும் வெறும் பாசாங்காய் இருக்கவேணுமென்பதில்லை....உன் மனச்சாக்ஷி ஏதாவது முணுக்கென்று குத்தினாலும் அதை இவ்விதம் பயன்படுத்திக் கொள்ளலாமல்லவா?

"நீ சமயோசித வேஷதாரி என்று வைத்துக்கொள்வோம். உன் விரோதிக்கு எதிலும் பிடிப்புக் கிடையாது என்று திட்டவேண்டியது!

"நீ அடிமை மனப்பான்மை படைத்தவனாயிருந்தால் உன் விரோதியை அடிமை என்று ஏசவேண்டியது....நாகரிகத்துக்கு அடிமை, மேல்நாட்டுக்கு அடிமை, 'ஸோஷியலிஸ'த்துக்கு அடிமை....... என்றெல்லாம்!"

இவ்வளவையும் கேட்டுவிட்டு, "ஏன், அடிமைத்தனம் உதவாது என்ற கொள்கைக்கு அடிமை என்று கூடச் சொல்லி விடலாமே" என்றேன்.

"அப்படியும் சொல்லலாம்" என்று ஆமோதித்தான் அந்தக் கவுட்டுப் போக்கிரி.

---

## மண்டையோடுகள்

வளமாய்ச் சமைக்கப்பட்டு ஒரே பிரகாசமாய் வெளிச்சம் போடப்பட்ட ஒரு 'ஹால்'; அங்கே பல சீமான்களும் சீமாட்டிகளும் கூடியிருந்தார்கள்.

எல்லோர் முகத்திலும் உற்சாகம், பேச்சு வெகு மும்முறம்....ஒரு பிரபல பாடகியைப்பற்றி உரக்கச் சம்பாஷணை நடக்கிறது. தெய்வீகத் தன்மை வாய்ந்தவள், அழிவற்றவள் என்றெல்லாம் புகழ்கிறார்கள்....ஆகா, நேற்று அந்த முக்தாயிபிருக்கா எவ்வளவு அழகாய் விழுந்தது!

திடீரென்று — மாந்திரீகன் மாந்திரைக்கோலை வீசிய மாத்திரத்தில் ஏற்பட்டாற்போல்—ஒவ்வொரு தலையிலிருந்தும் ஒவ்வொரு முகத்திலிருந்தும் திரை போன்ற மெல்லிய சதை கழண்டு மண்டையோடுகளின் உயிரற்ற வெண்மையையும் நடுநடுவே தெரியும் முகவாய்க் கட்டை பல் ஈறு இவைகளின் தோலுரித்த மங்கல் தோற்றத்தையும் வெளிப்படுத்திற்று.

அந்த முகவாய்க்கட்டைகளும் ஈறுகளும் அசைவதையும், விளக்கு வெளிச்சத்தில் இப்படியுமப்படியும் திரும்பிப் பளபளக்கும் முடிச்சுப் போன்ற அந்த எலும்புப் பந்துகளையும், அவைகளுக்குள்ளே இன்னும் சிறிய பந்துகள்,— அவைதாம் அர்த்தமற்ற கறுத்த உருண்டை விழிகள்—சுழலுவதையும் கண்டு உடல் நடுங்கினேன்.

என் மூஞ்சியையே கையால் தொட்டுப் பார்த்துக்கொள்ளவோ கண்ணாடியில் பார்க்கவோ எனக்குத்தைரியமில்லை.

முன்போல் மண்டையோடுகள் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கம் திரும்பித்திரும்பிக் கொண்டிருந்தன.... பழையபடி சத்தம் போட்டுக்கொண்டு இளிக்கும் பற்களுக்கிடையே சிவந்த சிறு கந்தல்கள் போன்ற நாக்குகள், என்ன அற்புதமாகவும் அபூர்வமாகவும்

அந்த அமரை—ஆம் அமரை—யான பாடகி அந்தக் கடைசி பிருக்காவை உகுத்தாள் என்பதைப்பற்றித் துரிதமாய்க் குழறிக்கொட்டின.

---

## கிழவி

ஒரு அகண்ட மைதானத்தில் தனியே நடந்துகொண்டிருந்தேன்.

திடீரென்று எனக்குப் பின்னே யாரோ இலேசாயும் உஷாராயும் அடி வைத்து வருவதுபோல் தோன்றிற்று.... யாரோ என் பின்னே வந்தார்கள்.

திரும்பிப் பார்த்தேன். கூனிக் குறுகின ஒரு கிழவி அழுக்கேறிய கந்தல் களுடுத்து மூடி முக்காடிட்டிருந்தாள். அவள் முகம் மட்டும் தெரிந்தது, மஞ்சள் பிளந்து சுருங்கின தோலும் கூரிய மூக்கும் பொக்கை வாயுமாக.

அவளை நெருங்கினேன்....நின்று விட்டாள். "நீ யார்? என்ன வேண்டும்? பிச்சைக்காரியா? பிச்சை வேண்டுமா?"

அவள் பதில் அளிக்கவில்லை. குனிந்து அவள் முகத்தைப் பார்த்தேன். இரு கண்களையும் மெல்லியனவாயும் வெளிச்சத்தைச் சற்றே தடுக்கும் தன்மை வாய்ந்தவையுமான படர் சதைகள் மறைத்திருந்தன. இவ்விதச் சதைகளைச் சில பக்ஷிகளின் கண்களில் காணலாம். கண்ணைக் கூசச் செய்யும் அதிக வெளிச்சம் அப்பறவைகளைப் பாதிக்காதபடி அவைகள் காப்பாற்றும்.

இந்தக் கிழவியின் கண்களிலோ சதை ஒதுங்கவும் இல்லை கண்ணைத் திறக்க விடவுமில்லை. இதிலிருந்து அவள் பொட்டையென்று தீர்மானித்தேன்.

"பிச்சை வேண்டுமா?" என்று மறுபடியும் கேட்டேன். முன்போலவே கிழவி மௌனம் சாதித்தாள். கொஞ்சம் ஒட்டிச் சுருங்கினதுபோல் மட்டும் பட்டது.

நான் திரும்பி வழி நடந்தேன். திரும்பவும் என் பின்னே அதே இலேசாயும் நிதானமாயும் கள்ளத்தனமாயும் வரும் அடிச்சத்தம் கேட்கிறது.

"மறுபடியும் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்தாயா! ஏது, என்னை விடமாட்டேனென்கிறாளே?" என்று எண்ணினேன். பின்னோடு, "கண் தெரியாததால் வழிதப்பிப் போயிருக்கலாம். என் காலடிச் சத்தத்தைத் தொடர்ந்துவந்து ஏதாவது ஜனசஞ்சாரம் உள்ள இடத்தை அடையவெண்ணுகிறாள்போலும். ஆம், அப்படித்தான் இருக்கும்" என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்.

இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாய் என் மனதில் ஏதோ ஒருவித விபரீதக் கலவரம் மூண்டது. இந்தக் கிழவி என்னைப் பின்பற்றினது மட்டுமல்ல, என்னை ஆக்ரமித்துத் தன் இஷ்டப்படி நடத்துகிறாள், வலது கைப் பக்கம் வேணுமானால் வலது கைப் பக்கம் திருப்புகிறாள், இடது கைப் பக்கம் வேணுமானால் இடது கைப் பக்கம் திருப்புகிறாள், நானும் அறியாமலே அவளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன் என்றெல்லாம் எனக்குத் தோன்ற ஆரம்பித்தது.

எனினும் நான் நிற்கவில்லை........ ஆகா! இது என்ன? ரஸ்தாவிலே என் கண்ணுக்கெதிரே ஏதோ கறுப்பாய்த் தெரிகிறது........ஒருவித ஓட்டை........ "சாவு குழி! இதில் தள்ளவல்லவா என்னை விரட்டுகிறாள்!" என்ற எண்ணம் பளிச்சென்று உதிக்கிறது.

நெருக்கென்று திரும்பினேன். கிழவி என் எதிரே நின்றாள்........அவளுக்குக் கண் தெரிகிறதே! பெருத்த பொல்லாக் குடியைக் கெடுக்கும் கண்களைக்கொண்டு என்னை நோக்குகிறாள்........மற்ற ஜந்துக்களை அடித்துத் தின்னும் பறவைகளின் கண்கள் போன்ற கண்கள்........குனிந்து அவள் முகத்தையும் கண்களையும் கவனித்தேன்........அந்தப் பழைய சதை படர்ந்து மூடின கண்கள்தான், பார்வையற்று மங்கின தோற்றம்தான்........

"ஆஹா! இவள் என் தலைவிதியே. தலைவிதியைத் தப்பமுடியுமா மனிதன்!" என்று நினைத்தேன்.

"தப்ப முடியாதா? தப்ப முடியாதா? இதென்ன பயித்தியக்காரத்தனம்!........ இயைந்தவரையில் பார்க்கவேண்டாமா?" என்று எண்ணி இன்னொரு திக்கை நோக்கி வெகு வேகமாய் ஓடினேன்.

வேகந்தான்....ஆனல் முன்போலவே எனக்குப் பின்னேயே இலேசான காலடிச் சத்தம் பட்டுப்பட்டென்று கேட்கிறது.......எனக்கெதிரே இன்னொரு இருண்ட குழி.

மறுபடி இன்னொரு திக்கை நோக்கித் திரும்பினேன்........மறுபடியும் அதே காலடிச் சத்தம் பின்னே, அதே அநர்த்தமான இருட்டுச்சுழல் முன்னே.

வேட்டையில் தப்பி ஓடப்பார்க்கும் முயல் போல எந்தப் பக்கம் திரும்பித் திரும்பி நான் ஓடினுலும்.......ஒரே மாதிரிதான், அதேதான்!

"பொறு, இப்பொழுது அவளை ஏமாற்றி விடுகிறேன், பார். எங்கேயாவது போனல்தானே!" என்று எண்ணின அதே நிமிஷம் கீழே உட்கார்ந்து விடுகிறேன்.

கிழவி எனக்குப் பின்னுலேயே இரண்டு தப்படிக் கப்பால் நிற்கிருள். சத்தம் ஒன்றும் கேட்காமற் போனுலும் அவள் இருப்பது எனக்கு நன்ருய்த் தெரிகிறது.

திடீரென்று எட்ட இருந்த இருட்டுச் சுழல் மிதந்து தானகவே என்னண்டையில் ஊர்ந்து வருகிறது!

கடவுளே! மறுபடித் திரும்பிப் பார்க்கிறேன்....கிழவி என்னை நேர்முகமாய்ப் பார்க்கிருள். அவள் பொக்கை வாய் கோணி இழுத்து இளிக்கிறது.

ஏது, தப்ப வழியில்லை!

---

## அருள்

திறந்திருந்த ஜன்னலண்டையில் உட்கார்ந்திருந்தேன்....நடுச் சித்திரை, அதிகாலை வேளை.

பொழுது புலரவில்லை; ஆகிலும் காருண்ட கதகதத்த இரவு காலை வரவைக்கண்டு வெளுத்துச் சில்லிட ஆரம்பித்துவிட்டது.

பனி விழவில்லை காற்றடிக்கவில்லை, எல்லாம் நிறமற்று நிசப்தமாயிருந்தது.... விழிக்கும் தருணம் நெருங்குவதை மட்டும் உணரலாம். இலேசான காற்று ஜில்லென்று பனி ஈரம் கலந்து கமழ்ந்தது.

திடீரென்று திறந்த ஜன்னல் வழியே ஒரு பெரிய பறவை விர்ரென்று இரக்கையடிக்கும் சத்தத்துடன் உள்ளே புகுந்தது.

திடுக்கிட்டு உற்று நோக்கினேன்........ அது பறவையல்ல; இரக்கைகள் படைத்த வெகு சிறிய நங்கை. அவள் அணிந்திருந்த அகலக்குறைவான உடுப்பு கால்வரையில் நீண்டது.

நல் முத்து நிறம்; இரக்கைகளின் உட்புறம் மட்டும் மலரும் ரோஜாவின் இளம் சிவப்புடன் பொலிந்தது; அவள் சிறிய வட்டமான தலைமேல் பறந்துகிடக்கும் சுருட்டை மயிரில் ஆம்பல் மாலை சுற்றியிருந்தது; வண்ணுத்திப் பூச்சியின் கூரிய கொம்புகள்போல அவள் புருவங்களாகிய அழகிய கோணங்களுக்கு மேலே இரு மைல் தோகைகள் ஆடின, பார்க்க விநோதமாக இருந்தது.

தளத்தைச் சுற்றி இரு தடவை வட்டமிட்டாள். அந்தக் குஞ்சு முகத்தில் சிரிப்பு. அகன்டு தெளிந்து கறுத்த விழிகளிலும் சிரிப்புத்தான்.

விளையாட்டாய்ச் சஞ்சரித்த அவள் உல்லாஸக் களிப்பில் வைரங்கள் போல் அவை பளீரென்று மின்னின.

அவள் கையில் நீண்ட தாமரைத் தண்டைச் செங்கோல் போல ஏந்தியிருந்தாள்.

என் தலைக்கு மேல் வேகமாய்ப் பறக்கையில் அந்தப் பூவால் என் தலையைத் தொட்டாள்.

அவளை நோக்கி ஓடினேன்....அதற்குள் ஜன்னல் வழியே பாய்ந்து பறந்து போய்விட்டாள்........

தோட்டத்தில் புஷ்பப் புதர்கள் அடர்ந்த இடத்தில் காட்டுப்புரு ஒன்று தன் காலை கீதத்துடன் அவளை எதிர்கொண்டழைத்தது.......அவள் மறைந்த

# பொன் செய்யும் மருந்து

[டி. எஸ். ராமானுஜம், எம். ஏ., எல். எல். பி. (லண்டன்)]

### நிலையாமை

இனிய உறவு, மேலாகிய பொருள், நல்ல அழகு, உயர்வாகிய குலம் என்னும் இவைகளெல்லாம் நிலையல்ல என்று மூதுரை கூறுகிறது. ஊரு, உறவு, "உற்றுப் பெற்ற" தாய் தந்தையார், மாதர்கள், ஐச்வரியம், நாட்டிலுள்ள யாவரும் நிலையல்ல, கச்சியேகம்பனின் திருவடியே நிலையுடைய பொருள் என்பது பட்டினத்தார் துணிபு. "பாலன் இளையன் விருத்தன் என நின்று, காலங் கழிவன கண்டும் அறிகிலர்" என்ற திருமந்திரம் இளமை நிலைக்காதென்று விளக்குகிறது. 'வருந்துகின்ற உயிர் ஒன்பது துவாரங்களுடைய உடம்பிலே தங்குதலே ஆச்சரியம், நீங்குதல் ஆச்சரியமன்று,' என்று 'நன்னெறி' யாக்கை நிலையாமையைக் குறிக்கிறது. இவ்விதம் சொல்லும் மூச்சிலேயே ஞானிகள் காயமே கோயில் என்றும் சொல்லுகிறார்கள். உடம்பே கோயிலாகவும், காக்கப்படுகிற மனம் கோயிலில் தொண்டுகள் செய்யும் அடிமையாகவும், வாய்மையே கோயிலின் பரிசுத்தமாகவும், அபரி சுத்தம் பெற்ற மனத்தினுள்ள ஒளியே அழகிய இலிங்கமாகவுங்கொண்டு, பக்தியே நெய்யும் பாலுமாக நன்கு நிறைய அபிஷேகம் செய்து, துதியை உணவாக்கி, ஈசனுக்குப் பூசனை செய்யும் முறையைக் காட்டினேனும் என்கிறார் திருநாவுக்கரசர். இவ்வுடல் நமதல்ல, இறைவனது என்று நினைத்த மாத்திரத்தில், அதை நோயற்றும் அழிவற்றும் வைத்துக்கொள்ள முயலுவதே திருப்பணி யாகுமென்று புலனாகும். அம்முயற்சி, மற்ற முயற்சிகளைப் போல், திருவினையாக்கத்தானே வேண்டும். பிணியும் சாக்காடும் ஓயா நடனஞ் செய்யும் இப்புவியில் அம்முயற்சி இதுகாறும் செய்யப்படவேயில்லை என்று சொல்லலாமா? அல்லது சரிவரச் செய்யப்படாததால் பலன் பெறவில்லையென்று சொல்லலாமா?

### விதி வழி

அமிர்தத்துக்கும் நஞ்சுக்கு முள்ள வித்தியாசத்தைக் கொடுத்தவர்கள் யாருமில்லை என்று கந்த புராணம் கூறுகிறது. அதுபோல் இவ்வுலகில் ஒருவனுக்கு நன்மை வந்து சேருவதும் அவன்செய்த வினைப் பயனலன்றி வேறு ஒருவராலன்றாம். எல்லாம் விதி வழியே நடக்கும், நன்மையும் தீமையும் பிரமன் எழுதா வகை சம்பவிக்குமா? முன் வினைப் பயனே பின்வாழ்விற்கு நிலைக்களமாகும். இதை யறிந்த ஞானிகள் எதற்கும் அஞ்சார்களாம்.

"வான்இன் றிடிக்கிலென்?
மாகடல் பொங்கிலென்?
கான்நின்ற செந்தீக்
கலந்துடன் வேகிலென்?
தான்ஒன்றி மாருதம்
சண்டம் அடிக்கிலென்?
நான்ஒன்றி நாதனை
நாடுவன் நானே" —திருமந்திரம்

எத்துயர் வரினும் தத்துவ ஞானிகள் தன்மை குன்றாமல், உள்ளத்துள் இறைவனைப் பிரியாராம்; இந்த ஐம்பூதக்

---

வெளியில் பால்வண்ண வானமும் இளம் ஊதாவாயிற்று.

மனோதர்ம தேவதையே, நான் உன்னை அறிவேன்! ஏதோ போகிற போக்கில் எனக்கு அகஸ்மாத்தாகக் காக்ஷி தந்தாய்; இளங்கவிகளைத்தேடிச்சென்றுவிட்டாய்.

என்னே கவிதை! என்னே யௌவனம்! பெண்மையின் பரிசுத்த வனப்புத்தான் என்னே! என் வஸந்தகால ஆரம்பத்தில் அதிகாலையில் ஒரு விநாடி எனக்கருள்புரிந்தாய்!

கூடே கெட்டாலுமென்ன? இன்னொரு கூடு செய்யும் அருளிறைவன் இருக்கிறான், நாடு கெடினும் அடியார் கெடார், என்று நடுங்காமல் இருப்பாராம் :

> "கூடுகெ டின்மற்ரேர்
> கூடுசெய் வானுளன்
> நாடுகெ டினும்
> நமர்கெடு வாரில்லை"—திருமந்திரம்

இவ்விதம் இறைவன் அன்பே பொருளென்று வாழ்ந்திறந்த பக்தர்கள் கோடா கோடி எனினும் மாந்தர் துயர் குறைந்த பாடில்லையே. ஏன்? கடவுள் அன்பு, ஆநந்தம், மட்டுமல்ல. அவன் பராசக்தி வாய்ந்தவன், ஞானி. அவனை ஓர் விதமாய்ப் பாவித்து முற்றிலும் தொழுவதால், அவனின் மற்ரேர் தன்மையை மறக்கிரேம். அதனல் அவனின் பரிபூரண் ஸ்வரூபத்தை அறியாமல் போகிரேம்.

## தேவாசுரப் பிரிவினை

சாகா வரம் பெற்று ஜீவராசிகளை நினைத்தவாறு துன்புறுத்தக் கூடும் சக்தியை ஆசைப்பட்டும் தம் முயற்சியால் சம்பாதித்தும் நின்ற அசுர ராக்ஷஸர்களின் கதைகள் பல கேட்டிருக்கிரேம். இறுதியில் அவர்களின் அகந்தையே அவர்களைக் கொன்றது. அன்புடனும் அறிவுடனும் கலந்த சக்தியே கடவுள். அச்சக்தியின்முன் அன்பும் அறிவும் அற்ற மிருக சக்தி நிற்க முடியவில்லை. பால் சமுத்திரத்தைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தார்கள். ஆநந்த மளிக்கும் அமிர்தம் தோன்றவே, தேவர்களைக் காட்டிலும் அதிதீவிரமாய் வேலை செய்த அசுரர்களுக்கு அதை விஷ்ணு கொடுக்கவில்லை. இது நியாயமா என்று தற்கால மனிதர்கள் கேட்கலாம். மனித இயற்கையில் அசுர குணமும் தேவ குணமும் கலந்து நிற்கிறது. அசுர குணத்தால் பெரும் முயற்சி செய்ய மனிதனல் முடிகிறது. அமிர்தம் வரும்முன் நஞ்சு வந்தாற் போல, அம்முயற்சி திருவினையாக்குமுன் பெரும் துன்பங்களும், குறைபாடுகளும், சண்டை சச்சரவுகளும் தோன்றுகின்றன. பிறகு அவனிடமுள்ள தேவ குணம் அவற்றை அடக்கி, அவன் அடிமையை இறைவனின் சுதந்திர சக்தியாகவும், அவன் மடமையை இறைவனின் ஞான ஒளியாகவும், அவன் கொடுமையை இறைவனின் அன்பு வெள்ளமாகவும் மாற்ற முயலுகிறது. தற்காலம் மேற்கண்ட வேலை முடிவுறு நிற்பகால், மனிதன் தன் நிலையையே ஒழுங்குபடுத்தி இறைவனின் ஸர்வ கல்யாண குணங்களாலும் பூரிக்கச்செய்து, மண்ணை விண்ணுக்குவதே இயற்கையின் கருத்து என்று நினைப்பது அரிதாயிற்று.

## நோயற்ற வாழ்வு

உடல் பயிற்சி, உடல் ஆராய்ச்சி, சுகாதாரம், வைத்தியம், இக்கலைகள் ஓங்கி நிற்கும் இத்தருணம் "உடம்பினில் உத்தமனைக் காண்" என்ற ஔவையார் உபதேசத்தை அரங்கேற்றுவது மிக மிக எளிது. தற்சமயம் நடக்கும் யுத்தகாரணமாய் ரஷ்யா தேசத்து நிபுணர்கள் ரணக் களத்தில் மடிந்த வீரர்களை மறுபடியும் உயிர் மூட்டவல்ல தந்திரங்களைக் கண்டு பிடித்து, கையாண்டு வருவதாக உணர்ந்திருக்கிரேம். தேவாசுர சண்டையில், மாய்ந்த அசுரர்களை சுக்ராசாரியார் தன் வசமுள்ள ஜீவ மந்திரத்தைப் பிரயோகித்து பிழைக்க வைத்தார் என்ற கட்டுக் கதை கண்கண்ட காட்சியாகி விட்டது. இரத்தப் பை ஓய்ந்துவிட்டால் சாவு நிச்சய மென்றெண்ணி யிருந்தோம். யந்திர ஹிருதயத்தால் உடலை மறுபடியும் ஒட்டிப்புது ரத்தம் கக்கவிடும் வித்தை நமக்குக் கிடைத்தபின், பிரம்ம ரகசியத்தை முற்றிலும் அறிய காலம் நெருங்கிவிட்டது போலும். ரண சிகிச்சை (Surgery), ரசாயன சாஸ்திரம் (Chemistry), ஜீவதத்துவ நூல் (Biology), இவைகளின் பயனுகவும், அணுதரிசனி (Microscope), தூரதிருஷ்டிக் கண்ணுடி (Telescope) முதலிய நவீன கருவிகளாலும், நோய்களைப் பெருவாரியாக ஒழிக்க மார்க்கம் ஏற்பட்டு விட்டது. பணப் பேய் பிடித்தாடும் சமுதாய அமைப்பில், அம்மார்க்கமாய்ச் செல்லும் ஹிருதய விசாலம் ஏற்படாததால் பண்டைய காலத்தைவிட அதிகமாய்

மனித சமுதாயம் துன்புற்றிருக்கிறதே ஒழிய, வாணி உரக்கத்தால் அக்கேடு விளைந்ததாகாது.

## ரோக உற்பத்தி

ஆயுர்வேதப்படி, வாதம், பித்தம், சிலேஷ்மம் (அவைகளின் பிரிவுகள்) முதலிய தச நாடிகளின் கோளாற்றிலேயே வியாதிகள் உண்டாகின்றன. மேல்நாட்டு வைத்திய முறையால் கண்ணுக்குத் தெரியாத சின்னஞ் சிறு கிருமிகள் (Germs) ஆயுர்வேதத்தில் கண்டிராத பல புது நோய்களுக்குக் காரணம் என்று தெரியவந்தது. மேலும் இக்கிருமிகளை எதிர்த்துப் போராடிக் கொல்ல வல்ல பல கிருமிகள் (White corpuscles) நமது ரத்த ஓட்டத்தில் நடமாடுகின்றதென்றும் சில சமயம் பாதுகாப்புப் படை தோல்வியடையவே விரோதிகளால் நோய்க் காளாகிறோமென்றும் சொல்லப்படுகிறது. எக்காலும், எச்சந்தர்ப்பத்திலேயும் பாதுகாப்புப் படை தோல்வியடையா வண்ணம் உடல் திடமடைந்திருப்பதெவ்வாறு என்ற கேள்வியைக் கேட்டு அதற்குத் தக்க விடை கண்டுபிடிக்கச் சரியான முயற்சி இன்னம் செய்யப்படவில்லை என்று சொல்லலாம். ரோகத்தின் மூல காரணம் வெளிவந்தால், ஒரே மருந்து அல்லது ஒரே சிகிச்சையால் எந்நோயையும் (சாவு உள்பட) விரட்டி அடிக்கலாம். இதுவரையிலும் உலகத்தோர் அறியாத ரோக உற்பத்தி ரகசியத்தை வெளியிட இங்கு முன்வந்தோம். அதை நண்பர்கள் கவனித்து அறிவார்களாயின் காசு பணமில்லாமல் வெகு சுலபமாய் எந்த வியாதியையும் எம்மனித உடலிலிருந்தும் போக்கடிக்கும் வல்லவர்களாவார்களென்பது நமது நம்பிக்கை.

## எண்பத்திநாலு சுவாசங்கள்

மனித உடலில் முதுகெலும்பின் நுனியே குண்டலினி ஸ்தானம் (பரமாத்மா வசிக்குமிடம்). ஜீவாத்மா ஹிருதயத்தில் வசிப்பதாகக் கருதவேண்டும். பரமாத்மா, பிரம்மா விஷ்ணு மஹேச்வரன் என்ற மூன்று அனுபவப் போர்வைகளைப் போட்டுக்கொண்டு குண்டலினி என்ற ஒரு ரப்பர் பந்துக்குள் மறைந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். ஜீவாத்மா, உடலைக் கட்டிக்காத்து அதன் மூலாதாரத்தில் மறைந்திருக்கும் பரமாத்மாவைக் காண வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் தான் உடலில் புகுந்தது. இவ்வெண்ணத்தை நிறைவேற்ற ஒவ்வொரு உச்வாச (inhalation) தருணத்திலும் முயலுகிறது. வெளியில் ஆவியாய் நிற்கும் சத்துக்கள் உச்வாசத்தால் உட்புகவே, சமுத்திரம்போல் எங்கும் பரவி நிற்கும் பிராண சக்தியும் ஓர் அளவு காத்துடன் கலந்து செல்லுகிறது. இப்பிராண சக்தியை உடலின் பல பாகங்களுக்கு வினியோகம் செய்வதே, “பாதுகாத்தல்” என்ற குண்டலினியின் முக்கியமான வேலை. உச்வாச சமயத்தில் ஜீவாத்மா பரமாத்மாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆசையால் ஹிருதயத்தில் ஓர் அதிர்ச்சி கொடுத்துத் தன் சக்தி அலை ஒன்றை குண்டலினியை நோக்கிக் கீழ் அனுப்புகிறது. அவ்வலை குண்டலினியை ஓர் இடத்தில் தட்டவே, குண்டலினி ரப்பர் போல் அழுந்துகிறதே ஒழிய தனக்குள்ளிருக்கும் பரமாத்மாவை அடைய வழி கொடுக்கிறதில்லை. ஏன்? அதற்கிட்ட உத்திரவு அவ்வாறிருக்கிறது. தனக்குள்ளிருப்பதை யாருக்கும் காட்டிக்கொடுக்கக் கூடாதென்ற குண்டலினி விதியையே மாயை யென்கிறோம். பரமாத்மா மாயையைப் போர்வையாகப் போட்டுக்கொண்டு “என்னைக் கண்டு பிடி, பார்க்கலாம்” என்று ஜீவாத்மாவுடன், தகப்பன் குழந்தையுடன் போல, சதா விளையாடி நிற்கிறான் போலும். இனி அழுங்கிக் கொடுத்தால்தான் கிழிந்துபோக வேண்டும் என்ற ஆபத்து நிலை உண்டாகவே, எப்படி ரப்பர் எதிர்த்தடிக்கிறதோ, அதுபோல குண்டலினியும் எதிர் சக்தி(Retortion force)யைக் காட்டுகிறது. உடனே ஜீவாத்மாவின் ஆசை அலை திரும்பி ஹிருதயத்திற்குச் செல்லுகிறது. இதுவே நிச்

வாசத்திற்கு (exhalation) மூல காரணம். இவ்விதம் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் மேல் கீழாய் விளையாடவே, ஹிருதயத்தினின்றும் பக்கவாட்டமாய் அலைகள் (சுவாசங்கள்) கிளம்பி உடலின் பல இடங்களில் ஓடிப் பரவி உலாவுகின்றன. இவைகள் எண்பத்துநாலு விதங்களடங்கியன. ஒவ்வொரு சுவாசத்திற்கும் ஒரு எண்ணும் பெயரும் கொடுபட்டிருக்கிறது. ஏழு வயதுவரையில் சுவாச ஓட்டம் ஒவ்வொன்றும் ஒரு குதிரை வேகம் (one Horse-Power) உடையது. ஏழு வயது முதல் நாற்பது வயது வரையில் சாதாரணமாய் ஒரு குதிரை வேகத்துடன்தான் சுவாசங்கள் ஓட வேண்டும். நாற்பது வயதிற்குமேல் இரண்டு அல்லது இரண்டரை குதிரை வேகத்துடன் சுவாசங்கள் ஓடவேண்டும். இவ்வேகம் குறையாவிடில் ஒரு உடல் 72 வயது வரையில் நோயற்றிருக்கலாம். 47 வயதிற்குப் பிறகு இரண்டரை அல்லது மூன்று குதிரை வேகத்துடன் சுவாசங்கள் ஓடமுடியும். அவ்விதம் ஓடினுல் 99 வருடம் வரையில் ஆரோக்யம் நிலைக்கும்.

சுவாசத்துக்குச் சுவாசம் வித்யாச மேற்படுவதேன்? உத்வாச தருணம் கிளம்பும் ஜீவாத்மா அலை குண்டலினியை எப்பொழுதும் ஒரே இடத்தில் தட்டுகிறதில்லை. குண்டலினியின் எதிர்ப்புச் சக்தியும் ஒரே வேகமுள்ளதல்ல. இதனுல் சுவாசங்கள் சரியான வேகத்தில் ஓடலாம், அல்லது அவ்வேகம் குறையலாம். வேகக் குறைவால் ரோகங்கள் உண்டாகி நாளடைவில் மரணத்தைக் கொடுக்கும். குண்டலினி தன் எதிர்ப்பை நிறுத்திவிட்டால் சுவாசங்கள் ஒடுங்கி உயிர் உடலைவிட்டுப் பிரியும்படியாகும். ஆதலால் ரோகங்களையும் மரணத்தையும் தடுக்கவேண்டு மென்றால் குண்டலினி எதிர்ப்பு எக்காலத்திலேயும் சரியான அளவுடன் நடக்கவேண்டும். தற்கால இயற்கை அமைப்பில் குண்டலினியே வலுவு குன்றியதென்றும் அதன் வேலை பரீக்ஷார்த்தமாய் நடக்கிறதென்றும், அதற்கே ஒரு பூர்த்தி (மோக்ஷம்) ஏற்படவில்லை யென்றும் யூகித்துத் தெரிந்துகொள்ளலாம். 74 சுவாசங்கள்தான் தற்காலம் வேலைசெய்ய முடியும். (சாதாரணமாய் 64 சுவாசங்கள் தான் வேலை செய்கின்றன). 74 சுவாசங்களுக்கு மேலுள்ள 10 சுவாசங்கள், மனிதன் பக்குவம் அடைய அடைய, நடமாட்டத்துக்கு வந்து, உடலை அழியாமல் வைத்துக்கொள்ளும் சக்தியை அவனுக்கு அளிக்கும். சுவாசங்களின் வேகத்தை ஒட்டி மனிதன் ஆரோக்யம் உண்டாகிறதென்று சொன்னேம். அவன் வயது, அவனுடைய ஜீவாத்மாவின் ஆசை, அவனுடைய குண்டலினியின் எதிர்ப்புச் சக்தி, இவைகளை ஒட்டி அவ்வேகம் நிர்ணயிக்கப் படுகிறதென்றும் எடுத்துக் காட்டினேம். சுவாசங்கள் சரியான வேகத்துடன் ஓடும்போது, பிராண சக்தி (இது பிராணவாய்வுடன் கலந்து செல்லும் சூக்ஷ்ம ஆவி) உடலின் ஒவ்வொரு அணுவுக்கும் வேண்டிய அளவு கொடுக்கப்படுகிறபடியால், எத்தகையகிருமிகளும், அல்லது உடம்பிலேயே யிருக்கும் தசநாடிகளும் ஆரோக்யத்தைக் கெடுக்கமுடியாது. ரோஹத்தின் மூல காரணம் தசநாடிகளுமல்ல, கிருமிகளுமல்ல, சுவாச ஓட்டங்களே என்பது இப்பொழுதாகிலும் விளங்குகிறதா? 84 சுவாசங்களின் பெயர்களையும் அவற்றின் ஓட்ட வேகம் குன்றுவதால் வரும் கெடுதிகளையும் முற்றிலும் வரைய இங்கு இடமில்லை. சுருக்கமாய், சிலவற்றை மட்டும் கூறுவோம்: சுவாசம் 1, மெமோரியா அம்பிரோஸ் (Memoria Ambrose), ஹிருதயம் சுவாசப்பை இவற்றைச் சூக்ஷ்மமாய்த் தாக்குகிறது. ஒருவன் மாண்ட உடனே தேகம் ஜில்லிட்டுப் போகாததற்கு இச்சுவாசமே காரணம். இறந்தபிறகு முதல் சுவாசம் நிற்கும் வரையுள்ள சிறிது நேரத்தில் "விட்ட உடலில் ஜீவன் எவ்வளவு நடத்திற்று, பாக்கியிருக்கும் வேலையை நடத்த எத்தகைய உடல் அது எடுத்துக் கொள்ளவேண்டும்" என்ற நிர்ணயம் ஏற்படுகிறது. சுவாசம் 2, பரிபர் அம்பிரோஸ் (Perifer Ambrose), ஹிரு

தயத்திற் கருகாமையில் ஓடும், திடீ ரென்று இது நிற்கவே, ஹிருதயமும் திடீரென்று ஓய்ந்துவிடும் (Heart - failure). சுவாசம் 6, உடலை எனும் புக்கூடாகச் செய்யலாம். நடக்கும் போது தொண்டையில் ஒருவித சத்தம் கேட்பதே சுவாசவேகக் குறையைக் காட்டும் சின்னம். சுவாசம் 7, செவிடு, குருடு, யானைக்கால். சுவாசம் 8, ரத் தக் குழாய்களைத் தாக்கி க்ஷயம், ஆஸ்த்மா, வயிற்றுவலி முதலியவற்றை உண்டாக்கும். சுவாசம் 9, மேகம், (Syphylis). சுவாசம் 10, படை, குஷ்டரோய். சுவாசம் 11, மூளையைத் தாக்குவதால் கீர்த்தியைக் கொடுக்க லாம், ஆராய்ச்சி ரஸம் அதிகரிக்கலாம், மலக்கட்டையும் கொடுக்கலாம். சுவா சம் 12, நீர் ரோகங்கள். சுவாசம் 14, வழுக்கத்தலை. சுவாசம் 15, பூட்டு வலி, தலைவலி, பெண்பிள்ளை மனக் கோட்டி (Hysteria). சுவாசம் 32, எந்த சிரங்கிலும் புரை ஓடும்.

சுவாசம் 33 கம்பீர ஜன்னி. சுவா சம் 34 விழித்துக்கொண்டிருக்கும் போது கூட குரட்டை. சுவாசம் 53, ஹிருதயத்தில் முட்டை போலுள்ள இடத்தில் ஓடி தோல் உரிதல், முக வாய்க் கட்டைகளில் பாலுண்ணி, முத லிய ரோகங்களைக் கொடுக்கும். சுவாசம் 60, கண்களுக்குள் ஓடும், இதன் வேகக் குறைவால் கண் விழிகள் மேலிழுக்கப் பட்டு, இறந்தவன்கண் திறந்திருக்கும். மரண காலத்தில் சுவாசங்களெல்லாம் வெகு வேகமாய்க் குன்றி உடலை ஓடுக் கும். பலவித ரோகங்கள் சம்பந்தமற்ற தாகத் தோன்றலாம். ஆனால் அவற் றுக்கெல்லாம் மூலகாரணம் ஒரு சுவாச ஓட்டமாக இருக்கும். உதாரண மாக, ஆராய்ச்சி சக்தி, உடல் பெருத்தல், மலக்கட்டு, இவற்றுக்கெல்லாம் சுவாசம் 11 மூலகாரணம். மேலும், "வயிற்றி லடித்தான், பல்லு போச்சு" என்பதைப் போல், ஏதோ ஓர் இடத்தில் ஓடும் சுவா சத்தால் மற்ற இடங்களில் கோளாறு கள் ஏற்படலாம். சுவாசம் 17 அடி வயிற்றில் ஓடுகிறது. அதனால் இல்லி மூக்கு, புளிச்சக்கண், வழுக்கத்தலை, காது குத்தல், தலைவலி, பிறர் மேல் வெறுப்பு முதலியவை உண்டாகின்றன.

எல்லா சுவாச ஓட்டங்களும் பூர்ண ஆரோக்ய ரீதியில் ஓடும் வண்ணம் குண்டலினியை சீர்படுத்தி வலுவுறச் செய்வதே பிருக்த ரஹித தாரக ராஜ யோகத்தின் கருத்து. குண்டலினியின் அந்தரங்க ஆசை எந்நாளும் உடல் அழி யக்கூடாதென்பதே. இதுதான் அதன் அந்தரங்க ஆசை என்று அறியாமலே, பலவித யோகாப்பியாசங்களால் குண்ட லினி சக்தியை பலவித சித்து லீலை களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட் டதே ஒழிய அதன் ஆதி இச்சையை யொட்டி அதன் இயற்கையின் குறை களைச் சீர்படுத்த முயற்சி செய்யப்பட வில்லை. குண்டலினியை நிறுத்தி, "உன் உள் ஆசை என்ன?" என்று கேட்கப் படவுமில்லை. இப்பொழுதுதான் குண்ட லினியை உள்ளபடி உணர்ந்து அதன் உள் ஆசையைப் பூர்த்தி செய்து அதற்கு மோக்ஷம் கொடுக்க வேண்டிய முயற்சி குடந்தை க்ஷேத்திரத்திலுள்ள யோகா லய மித்திர சங்கத்தால் செய்யப்பட்டு வருகிறது. இந்த யோகத்தின் குரு நாதனை குண்டலினிநாதனென்று கருத வேண்டும். குண்டலினிக்குக் குண்ட லினியாய் விளங்கும் குருநாதன் ஒரு பிராணப்புள்ளியாய் நம்முடைய ஹிரு தயத்தில் வசிக்கும் ஜீவப்புள்ளிக்கு ஒரு கவசம்போல் நின்று, அங்கிருந்து உச் வாசம் நடக்கும்போது, குண்டலினி யின் அந்தரங்கத்துக்கு உத்திரவு கொடுத்து, சரியான எதிர்ப்புடன் நிச் வாசம் நடந்தேறுமாறு செய்கிறான். அதனால் கொஞ்சம் கொஞ்சமாய் உடல் உறுதியாகி, எம்மனிதனும் ஒரு பிறப்பி லேயே அமரபதத்தை அடையும் நிலை சித்திக்கிறது. இந்நிலையை பிரம்ம துல் லியம், கைவல்ய மோக்ஷம், நாராரா யணத்துவம், என்றெல்லாம் கூறலாம். இதுவே எம்மனிதனுக்கும் பொதுவான சித்தியாகையால், அது ஆத்ம சித்தியாக வும் அகண்ட சித்தியாகவும் பரிமளித்து நிற்கிறது.

## சர்வரோஹ நிவாரண லகுமுறை சிகிச்சை

ஒவ்வொரு மனிதனும் தன்னிடமிருந்தே தனக்குத்தானே வைத்தியம் செய்து கொண்டு ஓர் அளவு சுகம்பெறலா மென்பதற்கு வழி உண்டு. நோயாளி காலையிலும் மாலையிலும் தனக்கு வேண்டிய ஆகாரமெடுத்த பிறகு சௌகரியமாய்ப் படுத்துக்கொண்டு கண்ணை மூடி, கீழ்க்கண்ட பிரார்த்தனையைச் செய்து கொள்ளலாம் :—

"உலகெலாம் ஒருயிராய் நிற்கும் குண்டலினிநாதனே! உன் ஆசை பூர்த்தி யடைந்தால் மனித சமுதாயத்திற்கே கைவல்யபதம் சித்திக்கும் என்பதை நம்புகிறேன். அவ்வாசை நிறைவேறப் பெருமுயற்சி நடந்து வருகிறதென்றும் கேள்விப்படுகிறேன். என் உடலிலுள்ள எக்குறைகளையும் போக்கி ஆரோக்யமளிக்குமாறு வேண்டுகிறேன். பூர்வஜன்ம வாசனைகளால் ஏற்பட்ட கர்மரோகங்களா யிருந்தாலும் சரி, நவக்கிரகங்களால் விளைந்த கோளாறுகளாயிருந்தாலும் சரி, எக்குறைகளானாலும் சரி, அவற்றை அறவே நீக்க வல்ல குண்டலினி உன் உத்திரவைக் கேட்டு நடக்கிறது. ஆதலால் என் உடலுக்குள் ஓடும் எல்லா சுவாசங்களையும் சரிவர ஓடும்படி சீர்திருத்தி என் உடல் எங்கேயாகிலும் வருந்தாமல், எவ்விதத்திலும் குன்றாமல், திடப்படும் வண்ணம் அருள்புரிவாய், சக்தி கொடுப்பாயாக."

சுமார் பத்து நிமிஷம் கண்மூடிக் கொண்டே உடலுக்குள் பிரார்த்தனையின் பயனாக என்ன வேலைகள் நடக்கின்றனவென்று கவனித்துப் பார்க்கலாம். கொஞ்சம் கொஞ்சமாய் ஆரோக்யம் வரும். அவசரம் மட்டும் கூடாது. பொறுமையே அருமை காட்டுமல்லவா?

இந்த சிகிச்சையைச் செய்துகொள்ள யாரால்தான் முடியாது. காசு பணம் வேண்டாம். நியமநிஷ்டைகள் ஒன்றும் கிடையாது. இதைச் செய்து கொள்ள வேண்டிய நம்பிக்கை மட்டும் இருந்தால் போதும். வேறுவித நம்பிக்கைகள் கூட வேண்டாம். எவ்வுயிர்க்கும் உயிராயிருக்கும் குண்டலினிநாதனைக் குறித்து பிரார்த்தனை செய்வதால், வேறு ஜப தபங்கள், துதிபாடல்கள், அனுஷ்டானங்கள், அப்பிரார்த்தனை நடந்து சுகம் பெறும் காலம் வரையிலாகிலும், வேண்டாமென்பது நியாயம். சமுத்திரமளவு ஜலம் கைவசம் வந்தபின் ஆற்றளவு ஜலம் கிடைக்குமா என்று ஒருவன் ஏங்கி நிற்பது பேதமையாகுமன்றோ? மேலும் மேற்கண்ட பிரார்த்தனையைத் தினம் இருதடவை செய்தால் போதும். அடிக்கடி செய்வதால் அதிக லாபமென்பது தவறு. பிரம்மம் செவுடல்ல. இரண்டு தரம் ஒருநாள் செய்வதுகூட எதற்காக என்று கேட்கலாம். பிரம்மத்தின் அன்பு நம்முடலில் பாய்ந்து பரவி எவ்விதம் வேலை செய்கிறதென்ற ஞானத்தை அடையப் போதுமான சந்தர்ப்பம் நாம் ஏற்படுத்திக் கொள்வதற்காகவே நாம் அவ்விதம் செய்யவேண்டும். அதற்குமேல் முயன்றால் உடல் தாங்கக்கூடாத சக்தி கூத்தாட நேரிடும். அதனால் உடம்பு கெட்டுப் பிரார்த்தனையின் நோக்கம் நிறைவேறாமல் போகும்.

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று திருவள்ளுவர் ஞானவெட்டியான் கூறுகிறது. மனம் போதுமென்று எப்பொழுது சொல்லும்? உடலை நடத்தி வைப்பதற்காகவே மனம் ஏற்பட்டது. ஆங்கிலத்தில் மனதை "மைண்ட்" (Mind) என்கிறார்கள். அதன் சப்தத்தைப் பார்த்து காதரகசியத்தை உணர்ந்தால் "மெயின்டு" (Main Do)—முக்கியமான வேலையை நடத்து, உடலைக் காப்பாற்றி வை, என்பதே மனதின் அந்தரங்கம் என்ற ஞானம் கிடைக்கும்.

உடலுக்குப் பரிபூர்ண ஆரோக்யம் கிடைத்த போதன்றோ "போதும்" என்று மனம் சொல்லும். பொன் செய்வதென்றால் ரசத்தைக் கட்டித் தங்கம் செய்யும் வாதவேலையல்ல. மெய்வாதம் உடலை உறுதி பண்ணுதலே. அதை நமக்குக் கற்றுக் கொடுக்கும் பொன் (குரு, ஆசான்), நமக்குள்ளேயே யிருக்

# கதிஜா

[கு. பா. வேங்கடாசலம்]

துன்ப வாழ்க்கையின் ஊடே வந்து மறையும் இன்பம்போல இருண்ட மேகங்கள் சஞ்சரிக்கும் மேற்கு வானத்தில் "ஸாவ்வல்" மாதப் பிறை தெரிந்து மறைந்தது. வளைந்த தங்கக் கம்பி போன்ற அந்தப் பிறையைப் பார்த்தவுடன், அடங்கி நிம்மதியாயிருந்த கிராமம் அல்லோல கல்லோலப் பட்டது. எங்கு பார்த்தாலும் ஜனங்கள் கும்பல் கும்பலாய் நின்றுகொண்டு, மேகங்களுக்கு மத்தியில் தோன்றி மறையும் அந்தப் பிறையைக் கண்டு ஆரவாரித்தார்கள். சிறு பையன்களும், பெண்களும் வேகத்துடன் வீடுநோக்கி ஓடினார்கள் தாங்கள் பிறையைப் பார்த்ததை அறிவிக்க.

கதிஜாவும் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து அந்த சுப சமாச்சாரத்தைத் தன் அம்மாவிடம் தெரிவிக்க ஓடினாள். ஓடின வேகத்தில் கல் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டாள். முழங்காலில் தோல் சிராய்ந்து இரத்தம் வந்ததைக்கூடப் பொருட்படுத்தவில்லை. எலும்புக் கூடு உயிர்பெற்று ஓடிவருவது போலிருந்த கதிஜா, மேல்மூச்சு வாங்க ஓடிவந்து, "அம்மா! பிறையைப் பார்த்தியா? நாளைக்குத்தான் பெருநா" என்று சந்தோஷத்துடன் கூச்சல் போட்டாள்.

அம்மாவின் உள்ளத்தில் பொங்கும் சோக ஊற்றின் ஒரு சிறு திவலையைக் கூட அந்தச் சின்ன உள்ளம் அறியவில்லை.

"அம்மா! நாளைக்குத்தானே பெருநா" என்றது குழந்தை. "ஆம்! அம்மா என்று குழந்தையை வாரி அணைத்துக் கன்னத்தில் முத்தம்கொடுத்தாள் அந்தத் தாய். "அம்மா! நாளைக்கு எனக்குப் பாவாடை........சட்டையெல்லாம்........" என்று தாயார் ஒக்கலிலிருந்துகொண்டே முகத்தைப் பார்த்துக் கேட்டது. "சரி! அதுக்கென்னம்மா தாரேன்" என்று சொன்னாள் ஒரு பெருமூச்சுடன். "நெசமாகவா. இத்தனை நாளையும்போல ஏமாத்துவியோ?" என்றது கெஞ்சுங் குரலில் குழந்தை. "ஹூம்....ம்....இதோ பார்! பாவாடை தயாராய் வச்சிருக்கேன்" என்று சொல்லிக்கொண்டே மேலே ஒரு பலகைமீதிலிருந்து ஒரு புதுப் பாவாடையை எடுத்தாள். தன்னுடைய கைகளாலேயே பல நிறத் துண்டுகளால் ஒட்டுப்போட்டுத் தைத்து வைத்திருந்த அந்தப் பாவாடையைக் குழந்தை கையில் கொடுத்தாள். ஏமாற்றத்தால் வாடியிருந்த முகம் பிரகாசித்தது. சாந்த மயமான அந்த முகத்தினூடே ஒளி வீசும் அந்த நீலக் கண்களிலே தான் எவ்வளவு திருப்திகூத்தாடிற்று.

பாவாடையை வாங்கியதும் தாயார் இடுப்பிலிருந்து கீழே குதித்து அந்தப் பாவாடையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடினாள். அப்பொழுதே அதைத் தன் சிநேகிதர்களிடம், முக்கியமாய் அடுத்தத்தெரு காஜாவிடம் காண்பித்தால்தான் இரவு அவளுக்குத் தூக்கம் வரும். அதற்காக

---

கும் கடவுள் (உட்புகுந்து பார்) என்று சொல்லக் கூடும் குண்டலினிநாதனே. காகபுசுண்டர் கீதமும் இதைத்தான் சொல்லுகிறது :—

"காசினியில் எல்லாமே ஒன்றமென்று
கருதத்தான் வைத்ததினை அறிவதிட்டா
..................................
இட்டனே கடவுளெனச் சொன்னசாரம்
எண்ணியதே உள்நுழைந்து பாருமென்று
திட்டமாய் குறித்ததே கவனித்தாலும்
.................................."

அவள் எத்தனைதரம் வெளியே ஓடியிருப்பாள். ஆனால் அம்மாவின் கைகள் அவளை வாரி எடுத்து மடியில் வைத்துக் கொண்டனவே!

ஓடும் கதிஜாவைக் கையிலெடுத்ததும் ஐந்து வருஷங்களுக்கு முன்னால் அவளுடைய மனம் துள்ளிப் பாய்ந்தது.

அன்றும் இதுமாதிரி "ரமலான்" பண்டிகைதான். கதிஜா அவளுடைய கர்ப்பத்திலிருக்கிறாள். பிரசவ வேதனை ஆரம்பிக்கும் சமயத்தில்தான் அவளுடைய கணவன் பிறையைப் பார்த்து விட்டு வந்து சொன்னதை இப்பொழுது அவள் மனம் ஞாபகப்படுத்தியது. விடிந்தால் கதிஜா பிறந்து ஐந்து வருடங்கள் ஆகின்றது என்று நினைத்து ஒரு பெருமூச்சு விட்டாள். கண்ணீர் பொல பொலவென்று உதிர்ந்தது. அப்பொழுது தான் நின்றிருந்த அந்தக் கண்ணீர் ஊற்று மறுபடியும் திறந்துகொண்டது. அவள் வாழ்க்கை பூராவும் அழுதே கழிக்கும்படியாகத் தான் ஆண்டவன் அவளை இந்தத் 'துனியா'வில் பிறப்பித்தான் போலும்.

தனியேயிருந்து துயரம் அத்தனையும் சகிக்கலாம். அதனால் அந்தச் சிறு ஜீவனும் அவளுடன் அந்த ஏழ்மை நிலையைப் பகிர்ந்துகொள்ள வந்திருக்கிறது. கதிஜாவின் முகம் வாடும்பொழுதுதான் அவள் துயரம் உச்சாணியை அடைகிறது. "பாவம்! அந்தச் சிறுவயதிலேயே கதிஜா துன்பக் கேணியில் விழுந்து தங்களித்தாளே" என்று.

அப்துல் காதர் என்றால் எல்லோருக்கும் தெரியும்; அவன் பணக்காரனல்லன். இரத்தத்தை வடித்து முதலாளியைச் சுகபோகத்திலிருத்தும் எண்ணற்ற தொழிலாளிகளில் அவனும் ஒருவன். இப்பொழுது முதலாளியின் ஞாபகத்தை விட்டே மறைந்துவிட்டான். அவன் இரத்தத் துளிகள் தனது பெட்டியில் பணமாக நிறைந்திருந்தும் அவரும் இவனை நினைக்கவே இல்லை.

கூரையற்ற குடிசையிலிருந்துகொண்டு முதலாளியின் பெரிய புது வீட்டிற்கு உத்திரம் தூக்கி வைக்கும்பொழுதுதான் அவன் பலிவாங்கப் பட்டான். அவன் என்ன செய்வான்? விதி அவன்மீது உத்திரத்தைச் சரியச் செய்தது. உழைத்து மிகுந்திருந்த இரத்தத்தையும் அந்த வீட்டின் புழுதிக்கே அர்ப்பணம் செய்து விட்டு அப்துல் காதர் மறைந்தான்.

இதெல்லாம் கொஞ்ச நாளில் அந்த ஊர் ஜனங்களின் நினைவைவிட்டு அகன்று விட்டது. ஆனால் அப்துல் காதரின் மனைவி.—ஆம்! அவள்தான் பாத்துமாள் பீபி. அவள் மனதில் இது கல்லின் மேல் எழுத்துப்போலப் பதிந்திருந்தது. இதை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடிப்பாள். கதிஜாவைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு அந்த இளமுகத்தில் பிரதிபலிக்கும் தனது கணவனின் சாயலைக் கண்டு சற்று ஆறுதலடைவாள். ஆனால் எவ்வளவு நேரம்....? மறுபடியும் புயல்,.....பிறகு........அமைதி........அவள் மனதில் இருவித நிலைமைகளும் மாறி மாறி உருப்பெற்றுப் போராடிக்கொண்டிருந்தன.

கதிஜா வளர வளர வறுமையும் வளர்ந்துகொண்டே வந்தது. தினசரி பீடி சுற்றுவதில் வரும் இரண்டரையணாவை வைத்துக்கொண்டு இரண்டு உயிர்கள் காலந்தள்ள வேண்டியிருந்தது. இதே நிலைமையில் எத்தனையோ பண்டிகைகள் வந்துவிட்டுப் போயின. ஆனால் இப்பொழுது வந்த ரமலான் பண்டிகை பாத்துமாள் பீபிக்கு வெகுமுக்கியமாய்ப் பட்டது. கதிஜா ஐந்து வருடங்களுக்கு முன் அதே தினத்தில்தானே பிறந்தாள். பண்டிகையோடு தன் குழந்தையின் ஐந்தாவது பிறந்த தினத்தையும் கொண்டாட நினைத்தாள். ஆனால் அதற்கு வேண்டிய சௌகரியங்கள் அவளுக்கு எங்கிருந்து கிடைக்கும்? இருந்தாலும் ஒருவிதமாய்க் கொண்டாட முடிவு செய்திருந்தாள்.

இரவு மணி $7\frac{1}{2}$. காலணா மண்ணெண்ணையால் உயிர் வாழ்ந்து, வெளிச்சத்தையும் புகையையும் கக்கிக்கொண்டிருந்தது ஒரு சிறு தகர விளக்கு. பாத்துமாள் பீபியின் மனம்போல வெளியே அடிக்கும் காற்றின் வேகத்தால் சுடர்

அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தது. சற்று நேரத்தில் பக்கத்திலிருக்கும் மசூதியில் நகரா ஒலித்து ஓய்ந்தது. மற்றக் காரியங்களிலீடுபட்டிருந்தவர்கள் எல்லோரும் "யஷா" தொழுகைக்காக மசூதிக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். பாத்துமாளும் தொழுவதற்காக எழுந்திருந்தாள். பின்புறம் போய் "ஒலு"ச் செய்தாள். பாயின்மீது மேற்குமுகமாக நின்று ஆண்டவனை நோக்கித் தொழ ஆரம்பித்தாள்.

வழக்கப்படி கதிஜாவும் தனது புதிய பாவாடையுடன் பக்கத்தில் தானிருந்தாள். தொழுகை முடிந்தது. "கதிஜா" என்றாள். பதில் இல்லை. பின்புறம் ஓடினாள். அங்கு அடிக்கும் காற்றும் மழையும் அவளால் வெளியே தலைநீட்ட முடியவில்லை. "கதிஜா, கதிஜா" என்று கத்தினாள். ஈரப் பசையற்று வரண்ட தொண்டையிலிருந்து வரும் சப்தத்தை வெளியே கேட்கமுடியாதபடி செய்தன அந்த மழையும் காற்றும். தகர விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டினுள் தேடினாள், காணவில்லை. இந்தக் காற்று மழையிலும் எங்கே போய் தேடுவாள்?

அடுத்த தெருவிலுள்ள காஜாவிடம் தனக்குக் கிடைத்த அந்தக் கோடிப் பாவாடையைக் காட்டுவதற்காக அந்த மழையைக்கூட லக்ஷியம் செய்யாமல் கதிஜா போயிருப்பாள் என்று அவளால் ஊகிக்கத்தான் முடியுமா? அங்கே மழையில் நனைந்துகொண்டே கதவைத் தட்டுவதும், உள்ளே தங்கள் குழந்தைகளுடனிருக்கும் குஷாலில் கதிஜாவின் குரல் கேட்காமலிருப்பதும், கதிஜா அங்கேதான் நிற்பதையும் பாத்துமாளால் எவ்விதம் அறியமுடியும்?

பாத்துமாள் அந்த மழையோடே அடுத்த வீட்டிற்கு ஓடினாள். அங்குமில்லை. அடுத்த வீடு—எதிர்வீடு—பக்கத்துவீடு—ஓர் இடத்திலும் காணவில்லை. ஓவென் றிரையும் அந்த மழை சப்தத்தின் மத்தியில் "கதிஜா" என்ற குரல் பன்முறை ஒலித்தது. ஆனால் பதில் ?......அதுதான் இல்லை. பக்கத்து வீட்டு ஜனங்கள் பேச்சளவில் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவளால் அதற்குமேல் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. தனது ஒரே சேலையும் நனைந்து தொப்பமாய்ப் போய்விட்டது. தனது வீட்டுத் திண்ணையில் தொப்பென்று விழுந்தாள். வாய் 'கதிஜா' என்று முணுமுணுத்து ஓய்ந்தது.

நடுச்சாம மிருக்கும். திடுக்கிட்டு எழுந்தாள். "ஹா! அல்லா!" என்று கத்தினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் கனவில் கண்டதை நினைக்கும் பொழுது உடல் புல்லரித்தது. தன் கணவன் கதிஜாவை வாரி எடுத்து முத்தமிட்ட காட்சி அவள் கண்முன்னே தோன்றி மறைந்தது. எழுந்து மறுபடியும் 'கதிஜா' என்று கத்திக்கொண்டே ஓடினாள். அடுத்தத் தெருவுக்கு அவளை இழுத்துக்கொண்டு ஓடியது வீதி. பாவம்! பாத்துமாளின் கூரிய கண்கள் ஒவ்வொரு அங்குலத்தையும் தடவிச் சென்றன. அந்த நடுத்தெருவில் ஓடும் தண்ணீரின் மத்தியில் கிடந்த ஒன்றை எடுத்தாள். ஆம் அதுதான் கதிஜாவின் உடல். முகத்தருகே கொண்டுபோனாள். "ஹா! கதிஜா!" என்று கத்தினாள். அந்த ஒரே சப்தத்தில் அந்தத்தெரு முழுவதும் விழித்துக்கொண்டன. சப்தம் கேட்ட இடத்திற்கு ஜனங்கள் எல்லோரும் ஓடினார்கள். தங்களுக்கு முன்னால், ஓடும் தண்ணீரில் தாயும் மகளும் கிடப்பதைக் கண்டால் திடுக்கிடாமல் என்ன செய்வார்கள்?



# ஸங்கீதமா ? ஸங்கேதமா ?

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

சக்ஷா : ச்ருதி : நமஸ்காரம் அண்ணா.

விருத்த ச்ருதி : வா அப்பா. நீ கண்ணில் படுவதே அபூர்வமாகிவிட்டது. உனக்குக் கச்சேரி "ஸர் கூட்" ஓய்ச்சல் ஒழிவு இல்லைபோலிருக்கிறது.

ச : இப்போது என் அத்தானுக்கு நல்ல "சான்ஸா ;" ஓயாமல் ரயிலிலும் மோட்டாரிலும் பிரயாணமாகவே இருந்து கொண்டிருக்கிறோம். இப்பவும் ஒரு கச்சேரி விஷயமாகத்தான் இங்கு வந்தேன். நம் தானச்ருதியையும் கானச்ருதியையும் அழைத்துப் போவதற்காக. தக்ஷிண கந்தர்வா கங்கு வய்யர் வீட்டுக் கல்யாணத்தில் கச்சேரி ஒப்புக்கொண்டிருந்தார். பக்க வாத்யம் வழக்கம்போல் அவருடைய ஸெட்டுத்தான். ஆனால் பிடில்காரர் இரண்டு நாள் முன் தனக்கு வர முடியாதென்று தந்தி கொடுத்துவிட்டாராம். ஆதலால் அந்த ஸெட்டு "கான்ஸல்" ஆகி நம் அத்தானுக்குத் தகவல் வந்தது. இவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வி : யார் அந்த ஸெட்டை "கான்ஸல்" செய்தது ?

ச : கந்தர்வாவே தேதியைத் தள்ளி வைத்துக்கொள்ளா விட்டால் கச்சேரி "கான்ஸெல்டு" என்று தந்தி கொடுத்து விட்டார்.

வி : ஏன், வேறு பிடில்காரர் கிடைக்க வில்லையா ?

ச : கிடைக்காமல் என்ன ? கந்தர்வா தான் தன் பக்க வாத்தியத்திற்கு இரண்டொருவரைத் தவிர, மற்றவர்களுக்கு இடம் கொடுப்பதில்லையே. அவருடைய ஸெட்டு இல்லாவிட்டால் அவர் பாடுகிறதில்லை என்பதுதான் தெரிந்த விஷயமாயிற்றே.

வி : அதற்கென்ன காரணம் ? என் வெகு கால அனுபவத்தில் இவ்விதம் ஒரு கண்டிப்பான அனுஷ்டானம் இருந்ததாகத் தெரியவில்லையே.

ச : கங்கு வய்யர் மருமான் கந்தர்வாவுக்கு சௌகரியமான தேதிக்கு முகூர்த்தம் ஒத்திப் போடவேண்டுமென்று மிகவும் முயற்ச்சி செய்தான். ஆனால் பெரியவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. சிறுவர் கோஷ்டிகளுக்கு தக்ஷிண கந்தர்வாவிடம் பிரமை. பெரியவர்களுக்கோ நம் அத்தான் பாட்டில்தான் பிரீதி. அத்தானுக்கு கானச்ருதி பிடிலும் தானச்ருதி மிருதங்கமும் வாய்த்துவிட்டால் வெகு உத்ஸாஹம். இவருக்கு ஒத்துமையான ஸெட்டு இது.

வி : இருந்தாலும் உன் அத்தான் வேறு பிடில் மிருதங்கங்களை போட்டு விட்டால் கச்சேரி பண்ணமாட்டேனென்று சொல்லமாட்டாரே ?

ச : அந்த வழக்கம் ஒருநாளும் கிடையாது. பக்க வாத்தியம் யார் என்று இவர் கேட்பதே கிடையாது. எந்தப் பக்க வாத்தியமானாலும் அங்கீகரிப்பார். ஏன், வெங்கிடசுப்பு முதல் வெங்கிடசாமிநாயுடு வரை இவருக்கு வாசிக்காதவர் யார் ?

ச்ருதி, லயம், ஸம்பிரதாயம் இவர் கையில் இருக்கும்போது எந்தப் பக்க வாத்தியக்காரனானாலும் கடிவாளத்தைக் கவ்விக்கொண்டு ரோட்டோடு போகும்படி ஏற்படுமே யொழிய, மீறிச் செல்லவோ, குடை கவிழ்க்கவோ இயலாது. இந்த மூன்று லகான்களையும் இவர் மாற்றி மாற்றி இழுத்து இடக்கு செய்பவர்களையோ, தடுமாறுபவர்களையோ வழிக்குக் கொண்டுவந்து சேர்த்துக் கொண்டே யிருப்பார்.

வி : ச்ருதி, லயம், ஸம்பிரதாயம் இம் மூன்று நிலைகளிலும் மைனாக பர்வதம் போல் அடித்தளத்தை அளாவின ஸங்

கீத ஸித்தனுக்குப் பக்க வாத்திய இன்னல்கள் யானையின் கால்களில் சிக்கிக் கொள்ளும் கொடிகளைப்போல் தன் கம்பீர நடையைத் தடுக்க வல்லனவாகா. ஆனால் மூவரும் அத்தகைய ஸித்தர்களானால் பெரும் போட்டா போட்டி ஏற்படும். அதில் மிருதங்கக்காரனைப் பிடில்காரன் தன் கையில் போட்டுக்கொண்டு பாடகனைக் கண்கலங்க அடிப்பதும் அல்லது அவனைப் பாடகன் தன் கையில் போட்டுக் கொண்டு பிடில்காரனை ஆட்டிவைப்பதும் அடிக்கடி நேரும். பாடகனும் பிடில்காரனும் ஒத்துப்போய் விட்டால் மிருதங்கக்காரன் (அல்லது கஞ்சிரா, கடம் வித்வான்) ஸாதுவாய்ப் பின் தொடர வேண்டியதுதான். ஆனால் பெரிய ஸிம்மங்கள் சேர்ந்து விட்டால் கச்சேரி ஸாதுவாய்போய்விடாது. சாதாரணமாகப் பாடகனுக்கும் பிடில்காரனுக்கும் பல பரீக்ஷையில் உத்ஸாகத்தினாலோ அல்லது சில சமயம் பரஸ்பரம் பொறாமையாலோ போட்டி ஏற்படத்தான் செய்யும். மிருதங்கக்காரன் ஒரு கக்ஷியில் சேர்ந்து கொள்வான். தனியே விடப்பட்டவன்பாடு கொஞ்சம் திண்டாட்டம்தான். கச்சேரிக்கு வரும்போது வயத்தில் நெருப்பைக் கட்டிக்கொண்டு குல தெய்வங்களை பிரார்த்தித்துக் கொண்டுதான் வருவான். எந்தப் புதரி விருந்து எந்தப்பூதம் கிளம்புமோ ஒன்றும் தெரியாது. ஆனால் அதிலும் சமாளித்துக்கொள்பவன் பெரியவனாவான்.

இந்தப் பெரும் நிகழ்ச்சி எல்லாம் திருக்கோடிகாவல் கிருஷ்ணையரோடும் கோனேரி ராஜபுரம் வைத்தினதய்யரோடும் போய்விட்டது. அது மாமுண்டியாபிள்ளை, பழனி கிருஷ்ணையர் இவர்களின் காலம். இந்த ஸிம்மங்களுடன் கர்ஜனை போய்விட்டது—மன்னார்குடிப் பெரியவாளுடன் சாஸ்திர வாக்யார்த்தம் போய்விட்டதுபோல்—இப்போது ஸங்கீதக் கச்சேரி ஸங்கேதக் கச்சேரியாகி விட்டது, வியாஸ பூஜை வாக்யார்த்தம் போல்.

சக்ஷுஃச்ருதி: அண்ணா, நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், ஸங்கீதம் மலைசூழ்ந்த புராதனக் கானகமானால் அல்லவா ஸிம்மங்கள் கர்ஜிக்கப் போகின்றன. ஸங்கீதம் புது நாகரிகத்தில் ஒரு பூஞ்சோலையாக மாறிவிட்டால் அதில் அழகான புறுக்கள் நேசமாய்க் கூவுவதும் மயில்கள் தோகை விரித்தாடுவதும் தானே காணத்தக்கது? எதுமேல்? பயங்கரமான ஸிம்ம கர்ஜனையையும் சஞ்சாரமற்ற கானகத்தையும் யார் விரும்புவார்கள்? மேலும் பாட்டு, பக்க வாத்யம்,லயம் மூன்றும் ஒற்றுமைப்பட்டு இழைத்தாலல்லவா ஸங்கீதமாகும்? இல்லையேல் மல்ல யுத்தமும் மனஸ்தாபமும் ஸங்கீதமாகுமா? ஸுகுமாரமான ஸங்கீத கலையில் வீரரஸத்திற்கும் அற்புத ரஸத்திற்கும் அவகாசம் ஏது?

வி: ஸங்கீதத்திற்கு அந்தரங்கமான ரஸ பிரச்னையைப் பற்றிப் பின் ஒரு சமயம் பேசிக்கொள்வோம். இப்போது ஸங்கேதம் ஏன் ஸங்கீதமாகாதென்றும், மல்ல யுத்தமும் மனஸ்தாபமும் ஸங்கீதமாகுமா என்று மட்டும் விசாரிப்போம். முதலில் "ஸங்கேதம்" என்ற பதத்திற்கு அர்த்தம் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு "முன் ஏற்பாடு" அல்லது "கட்டுப்பாடு" என்பது பொருள். ஹரிகதா காலக்ஷேபத்திற்கு ஸங்கேதம் செய்து வைக்கப்பட்ட ஜமா இன்றியமையாதது. கல்பனை நிறைந்த ஸங்கீதத்திற்கு ஸங்கேத ஜமா கேடுவிளைவிக்கும். கொஞ்சநாளில் அவ்விதக் கச்சேரி கிளிப்பிள்ளைப் பாடமாகிவிடும். ஒரே ஜமாவை அபேக்ஷிப்பவன் தனக்கு ஒரு ஊன்றுகோலையாவது சாய்வு மணையையாவது அபேக்ஷிக்கும் ஒரு பலஹீனனுக்குச் சமமாகிறான். தனக்கு நிர்ப்பயமாகவிருப்பதற்கும் தன் ஏறல் தாழல்களை மூடிக்கொண்டு போகவும் நம்பிக்கையாயின தோழர்களை அவன் விரும்புகிறான் என்று தோன்றும்; அல்லது தனக்கு பிரஸித்தப் பக்கவாத்திய மில்லாவிட்டால் தன் பிரஸித்திக்குக் குறையேற்படுமென்று அவன் மனதில் ஐயமிருக்கிறதென்றும் தோன்றலாம். ஆனால் கல்பனை என்ற ஸாம்ராஜ்யத்தை ஆளுபவனுக்குப் பக்க பலன் அலங்காரத்

திற்குமட்டுமே யல்லாது ஊன்றுகோலாகவாவது சாய்வு மனையாகவாவது ஆகிறதில்லை. பீமஸேனனைப்போல் இவனே பக்கத்திலிருப்பவனையும் தூக்கிச்செல்ல வல்லவனாகிறான். ஆனால் பக்க வாத்தியக்காரனும் கல்பனா சக்கிரவர்த்தியாக விருந்தால் அந்த ஸங்கீதம் தேவர்களுக்குரிய விருந்தே ஒழிய மனுஷ்ய ஆத்மாவால் அனுபவித்து மாளாது. அவ்வித ஜமாக்களுக்கு "ஸங்கேதம்" என்ற தூஷணை ஏற்படாது. ஏனெனில் தேங்கின ஜலம் ஆரோக்யக்குறைவை உண்டுபண்ணுமே ஒழிய ஊற்று ஜலம் நித்ய சுத்தமானது. பல்லடம் ஸஞ்ஜீவ ராவ் அவர்கள் வெகுநாள்வரையில் கரூர் சின்னசாமி அய்யரையும் மைலாட்டூர் கிருஷ்ணய்யரையும் அவருக்குப் பிறகு மைலாட்டூர் சாமி அய்யரையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு கச்சேரிகள் செய்துவந்தார். ஆனால் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் உத்ஸாஹப் போட்டி போட்டுக்கொண்டு கல்பனா பிரபஞ்சத்தில் ஏறிவிளையாடுவதில் ஒரு குறைவும் இருக்காது. ராயர் அவர்கள் வேறு பக்க வாத்தியத்தை ஒதுக்கவும் நினைக்கவில்லை. சுமார் நாற்பது வருஷங்களாக பிரக்யாதி பெற்ற எந்தப் பிடில் மிருதங்கக்காரரும் அவருடன் வாசித்திருக்கிறார்கள். யாவராலும் ராயரைச் சிறப்பிக்க முடிந்ததே யொழியச் சிறியவராய்த் தோற்றுவிக்க முடியவில்லை. பல ஹீனமான பக்கவாத்தியங்களையும் அவர் நிராகரித்ததில்லை. தன் பலத்தில் கச்சேரி செய்பவராதலால் பக்க வாத்தியத்தின் ஏற்றத்தாழ்வு அவரை பாதிக்காது. பாடகருக்குத் தக்க பக்க வாத்தியத்தைப்போட்டுப் பூர்ணமான ஸங்கீதத்தை அனுபவிக்க வேண்டுமென்ற ஆதாரம் ச்ரோதாக்களைச் சேர்ந்ததேயொழியப் பாடகன் அதைப்பற்றிக் கவலைப்பட்டால் அது அவன் பலஹீனத்திற்கு அறிகுறியாகும். வைத்தினாதய்யருக்கு கோவிந்தசாமி பிள்ளையும் அழகன் நம்பி தக்ஷிணாமூர்த்தி பிள்ளை இவர்களும் எங்கும் ஒரே ஸெட்டாக இருந்து வந்ததற்குக் காரணம் ஜாதிக்கமலத்தை ரெங்கூன் வைரத்துடன் சேர்த்து தோடு ஜதை கட்டக்கூடாது என்ற ச்ரோதாக்களின் மனோபாவம் மட்டுமே ஒழிய மேற்படி வித்வான்களின் பிரார்த்தனையினாலல்ல அவர்கள் பிரார்த்திக்காமலிருந்த காலமும் உண்டு. ஆனால் ரஸிகர்கள் அவர்களை விடுவதில்லை. கச்சேரி மேடையில்மட்டும் நிர்ப்பந்தப்படுத்திச் சேர்த்து உட்கார்த்திவிடுவார்கள். தனி இயல்புகளில் அவர்களுக்குள் வேற்றுமை இருந்தாலும், உலகத்திற்கும் பயன்படும் ஸங்கீதக் கலையின் பேரொளிகளைத் தாங்கி நிற்கும் சிகரங்களாய் அவர்கள் இருந்ததால் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் விஷயத்தில் உலக மக்கள் அதிகாரம் பெற்றவர்களானார்கள். அந்த வித்வத் சிரோமணிகளும் கலாஸேவையில் தங்கள் தங்கள் தனி இயல்புகளை ஒதுக்கிவைத்திருந்தார்கள். இது பெரியோர் தன்மை முடிவுரையாகச் சொல்ல வேண்டுமானால், எதிர்பாராத அம்சம் என்பது ஒன்று இருந்தாலொழிய ஸங்கீதம் ஸங்கேதமாகாது. ஸங்கேதம் என்ற சொல்லுக்கு இடமாகும்.

ச: யார் எதிர்பார்க்காதது?

வி: இது சரியான கேள்வி. எதிர்பாராதது என்பது மூன்று வகைப்படும். ச்ரோதாக்கள் எதிர்பாராதது என்பது அல்ப விஷயம். கச்சேரி செய்பவர்கள் பரஸ்பரம் எதிர்பாராதது என்பது உத்தம விஷயம். இந்த மூன்று விஷயங்களிலும் எதிர்பாராத அம்சங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு ஸங்கீதக் கச்சேரி உன்னதமானது. எவ்வளவுக் கெவ்வளவு இந்த அம்சங்கள் குறைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அது ஸங்கீதக் கச்சேரியாகிறது. எல்லா விஷயங்களிலுமே எதிர்பார்த்த அம்சங்களே வளர்ந்திருந்தால் கச்சேரி குளிர்ந்துபோன கஞ்சிபோலாகும்; ஊக்கமளிக்காது. உத்ஸாஹத்தைச் சிதைக்கும். ஆனால் இந்த வருஷம் ஆடிமாதத்தில் ஆற்றில் அதிக ஜலம் வராத போனாலும் நாம் பதினெட்டாம்பேரை சித்தி

ரான்னங்களுடனும் சப்பாரங்களுடனும் கொண்டாடாமல் விடவில்லை என்பது போல் மேற்படி ஸங்கேதக் கச்சேரிகளையும் நாம் கேழ்க்காமல் விடுவதில்லை. இந்த ஸங்கேதக் கச்சேரிகளைக் கேழ்பது டியூபில் காற்று குறைவாயிருக்கும் போது ஸைக்கில் சவாரி செய்வதற்குப் கொப்பாகும்.

பாடுபவருக்கே அது அப்படித்தான் இருக்கும். மேடு பள்ளங்களில் இடுப்பு ஓடியும். வேகம் எடுக்காது. தள்ளுவதில் கால் சோர்ந்துவிடும். காற்றுப் பூராவாகவிருந்தால் ஆகாயத்தில் பறப்பதுபோலிருக்கும். நாம் ஒரு வேகம் கொடுத்தால் அது இரண்டுமடங்கு வேகம் எடுக்கும். ஸங்கேத அம்சங்கள் வலுக்க வலுக்க உண்மையான ஸங்கீதம் களைபிடுங்காத வயலில் பயிர்போல் செழித்து ஓங்கி வளராது.

எதிர்பார்க்கப்படாத அம்சங்களில் ச்ரோதாக்களால் எதிர்பார்க்கப்படாதது என்பதை முதலில் குறிப்பிட்டோம். மேலே எது பாடப்போகிறான் என்ற ஆவல் ச்ரோதாக்களுக்கு இருக்க வேணும். அந்த ஆவலை அடிப்பெயர்த்து ச்ரோதாக்களுக்கு முன்னதாகவே புரோக்ராம் அச்சடித்துப் பரிமாறுவது ஒரு வித ஸங்கேத அம்சமாகிறது.

ச : கூ. கூ. அன்யாயம். அண்ணா இரைந்து பேசாதேயுங்கோ. இந்த புரோக்ராம் நோடீஸில் வெகுப் பேர்களுக்கு பிரமை இருக்கிறது. மெட்ராஸில் ஜனங்கள் இருட்டில் உட்கார்ந்து கச்சேரி கேட்டாலும் கேட்பார்கள் போலிருக்கிறது. புரோக்ராமைக் கையில் கொடுக்காவிட்டால் கச்சேரி கேட்க உட்காரவே மாட்டார்கள் என்பது நிச்சயம். அப்படி ஒரு பழக்கம் சுமார் 10, 12 வருஷ காலமாய் எற்பட்டுவிட்டது. ஒரு சமயம் பாருங்கள், நான் ஒரு நண்பருடன் ஒரு ஸபாவின் ஸீரீஸ் கச்சேரிகளுக்குப் போய்க்கொண்டிருந்தேன். ஒருநாள் என் நண்பர் டிராமில் ஏறினவுடன் புரோக்ராம் புஸ்தகத்தைத்தான் மறந்து விட்டதை அறிந்துகொண்டு உடனே டிராமை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கி ரிக்ஷாவில் திரும்பி வீடு போய் புரோக்ராம் புஸ்தகத்தை எடுத்து வந்தார். இதில் ஒரு மணி தாமதம் ஆகிவிட்டது. கச்சேரியில் நாங்கள் அமரும்போது அவர் புஸ்தகத்தைப் பிரித்துப் பார்த்து ஐந்தாவது உருப்படி நடக்கிறது என்று தெரிந்து கொண்டு சந்தோஷித்தார். ஆனால் பக்கத்தில் இருந்த ஒருவர், பாடகர் வரிசை கிரமமாய்ப் பாடவில்லை என்றும், இது மூன்றாவது உருப்படிதான் என்றும், புரோக்கிராமில் குறிக்கப்படாத வர்ணம் ஒன்று முதலில் அவர் பாடியதாயும் அதற்கு கல்பனை ஸ்வரங்கள் பல ஆவர்த்தங்கள் பாடி அதிக நேரம் கழித்து விட்டதாயும் சொன்னார். என் நண்பர் தன் பௌண்டன் பேனாவை எடுத்து மசியை ஆத்திரத்துடன் உதறி (என் மடியில் வெள்ளை வேஷ்டியில் நீல பிந்துக்களைப் பரப்பிப்) பக்கத்து ரஸிகரிடம் நடந்தது நடக்காதது முதலிய கீர்த்தனங்களைக் கேட்டு விபரமாய் புரோக்ராம் புஸ்தகத்தில் அந்த அந்த இடத்தில் குறிப்புக்கள் செய்துகொண்டார். “இந்த விஷயமாய் ஸபா செகரெட்டரிக்கு விபரக் குறிப்புகளுடன் ஒரு புகார் எழுதி அனுப்பப் போகிறேன்” என்றும், சொல்லிக்கொண்டார். பக்கத்து ரஸிகர், “ஸார், மற்றக் கச்சேரிகளுக்கும் இதேமாதிரி “நோட்ஸ்” எடுத்து ஸீரீஸ் முடிந்த பிறகு எல்லாத் தவறுதல்களையும் சேர்த்து ஒரு புகாராக எழுதி இன்னும் நாலு பேரிடம் கையெழுத்து வாங்கி அனுப்பலாம். நானும் கையெழுத்துப் போடுகிறேன். புரோக்ராமில் கொடுத்துவிட்டு இவர்கள் இஷ்டப்படி பாடுவதென்றால் நாம் எல்லாம் என்ன ஏமாந்தவர்களா?” என்று கோபக்களையுடன் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு மறுபடியும் என் நண்பருடன் புரோக்ராமை கவனிக்க ஆரம்பித்தார். பாடகர் சரணம் பாடி, அதில் நிரவல் ஸ்வர வரிசைகள் பாடிக்கொண்டிருந்ததால் அவர் பாடும் கீர்த்தனை என்ன வென்றும் அது புரோக்ராமில் உள்ளதா இல்லாததா வென்றும் புரோக்ராமில் இருப்பதா யிருந்தால் வரிசை கிரமப்படி எடுத்துக்கொள்ளப்

பட்டதா இல்லையா என்றும் வெகு நேரம் வரையில் நிர்ணயிக்க முடியாமல் இருவரும் பொறுமை யிழந்து முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு நானும் அவர்களே அவர்கள் சம்சயத்தைத் தீர்த்துக் கொள்ளட்டுமென்று மௌனமாயிருந்து விட்டேன். இவ்விதமாகவே கடைசி வரையில் அவர்கள் அன்று புரோக்ராமை பிரயோஜனப் படுத்திக் கொண்டு கச்சேரி கேட்டார்கள். மறுநாள் முதல் இந்த புரோக்ராம் வாதிகளின் சேர்க்கையில்லாமல் தனியே கச்சேரி கேழ்க்கப் போகலானேன்.

வி: "லோகோ பின்னருசி:" ஆனல் புரோக்ராம் போடுவதில் ஒரு சௌகரியம் இருக்கலாம். சிலருக்கு சில கீர்த்தனைகள், சில ராகங்கள், சில சில்லரை வகையறுக்களில் அதிக ருசி. லிஸ்டை முதலிலேயே பார்த்துவிட்டால் உள்ளே போகிறது போகாததை நிச்சயம்செய்து கொள்ளலாமல்லவா? சில ராகங்களையோ சில உருப்படிகளையோ கேட்டு சிலர் அனுத்துப் போயிருப்பார்கள். சிலருக்குப் பல்லவி என்ருல் பெருத்த அலுப்பு. இன்னது பாடப்போகிருனென்றுதெரியாமல் டிக்கட்டு வாங்கிவிட்டால் உள்ளே போனபிறகு எல்லாம் வேண்டாத சரக்காகவே இருந்துவிடும் பக்ஷத்தில் ஏமாற்றமாக வல்லவா இருக்கும்?

ச: அப்படிப் பார்த்தால் இந்த காலத்தில் புரோக்ராம் ரொம்ப அவசியம் தான், ஏனெனில் ராஜ்ய வாதங்களில் இருப்பதுபோல் ஸங்கீதத்திலும் கக்ஷிகள் ஏற்பட்டிருக்கின்றன. இது கக்ஷிகள் கட்சிப்பதையே அடிப்படையாகக் கொண்ட யுகமல்லவா? சிலருக்கு தியாகையர் கீர்த்தனைகள் திகட்ட ஆரம்பித்திருக்கின்றன. சகட்டுக்கு நன்ருக தியாகையர், தீக்ஷிதர், சாமா, சாஸ்திரிகள், ஸுப்பராய சாஸ்திரிகள், ஸதாசிவ ராயர், ஸதாசிவபிரும்மேந்திராள், ஸ்வாதித் திருநாள், இப்படி இருக்கவேண்டுமென்று ஒரு கக்ஷி.

வி: ஏன் கர்ப்பபுரிவாஸர், பட்டணம் சுப்பிரமணி அய்யர், பூச்சி அய்யங்கார் முதலியவர்களை விட்டு விட்டீர்களே.

ச: இவர்களுக்குச் சில வருஷங்களுக்கு முன் இருந்த பிராபல்யம் இப்போது இல்லை. ஏன் தியாகைய்யருக்கே இப்போது மங்கு சனி யோகமாகத்தான் தெரிகிறது. தியாகைய்யர் பெயரை புரோக்ராமில் பார்த்தாலே சிலர் உள்ளேயே நுழையமாட்டார்கள். மேலும் புரோக்ராமில் இனி இன்ன கீர்த்தனம் இன்ன பாஷையில் என்றுகூட விளம்பரப் படுத்தவேண்டிவரும். இல்லையேல், இரண்டொரு பதங்களிலிருந்து மட்டும் பாஷையை நிர்ணயிக்க முடியாதாதலால் ஸாஹித்யம் வெகு தூரம் வரையில் அச்சிடப்பட வேண்டும். சிலர் முக்கியமாக முதலில் எந்த பாஷையில் பாடகர் பாடப் போகிருர், முடிவில் பாடப் போவது எந்த பாஷையில் என்பதை மட்டுமாவது அவசியம் தெரிந்துகொண்டு தான், கச்சேரி கேழ்க்க வேண்டுமென்ற கொள்கையிருக்கலாம். எல்லா சௌகரியங்களையும் உத்தேசித்து புரோக்ராம் அச்சிட்டு வழங்குவது இனி ஸங்கீதக் கச்சேரிக்கு இன்றியமையாதது என்று ஒரு விதியே ஏற்பட்டுவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் ச்ரோதாக்கள் ஸம்பந்தப்பட்டவரையில் எதிர்பாராத அம்சமே இருக்கக்கூடாதென்று ஏற்படுவதால் இந்த புரோக்ராம் வழங்குதலை ஸங்கேதாம்சம் என்று தாங்கள் விலக்க விரும்புவது வீணே என்று சொல்லத் துணிகிறேன்.

வி: போனல் போகட்டும். இதை ஸ்வல்ப விஷயம் என்றுதானே சொன்னேன். இந்த அம்சத்தில் ஸங்கேதத்திற்கு இடம் கொடுத்தாலும் மற்ற மத்யம உத்தம விஷயங்களில் ஸங்கேதமில்லாமல் ஸங்கீதாம்சமே நிரம்பி யிருந்தாலும் கச்சேரியில் உன்னதப் போக்கு பாதிக்கப்படாது. அவ்வம்சங்களை விமர்சிப்போம்.

(தொடரும்)

# பொது உடமைகளா!

[டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம் ஏ., எல் ஐ. எம்.]

பொது உடமைகள் என்று சொல்லும்பொழுதே பலர் அச்சமுறுகிறார்கள். "வேண்டவே வேண்டாம். வேறு எதைப்பற்றி வேண்டுமானாலும் சொல்லுங்கள். இந்த ரஷ்ய விஷயம் மட்டும் வேண்டாம்," என்று பலர் சொல்லுவதைக் கேழ்க்கிறோம். இவ்விதம் கூறுகிறவர்கள் பொதுவாக சிரத்தையுடன் பூஜை முதலியவைகள் செய்துகொண்டு பெருந்தன்மை மிக்கவர்கள் என்று பலராலும் கொண்டாடப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். பிரசாரத்திற்காக கூலி பெற்று பேசும் கோஷ்டியினர்கள் இல்லை. ஆழ்ந்த மேதையுள்ளவர்கள் கூட நெருப்பு என்றாலே வாய் சுட்டுவிடும் என்றவாறு இவ்விஷயத்தைப் பற்றி பேச மறுக்கிறார்கள். இது அராசாங்கத்தினிடம் உள்ள பயத்தினால் தற்காப்பை யுத்தேசித்து சொல்லப்படும் பேச்சில்லை. உண்மையிலேயே பிரசாரத்தின் பலத்தினால் இவர்கள் மனத்தில் பதிந்திருக்கும் பிரமையே இவ்விதம் இவர்களைப் பயப்படச் செய்கிறது. சொத்துரிமை அழிந்துவிட்டால் அனர்த்தம் ஏற்பட்டுவிடுமே என்று பயப்படுகிறார்கள்.

ஆனால் கொஞ்சம் தைர்யமாக ஆலோசித்து பார்ப்பதால் யாதொரு அபாயமும் வந்துவிடாது. ரஷ்யாவில் பொது உடமைக்காரர்கள் பலாத்கார புரட்சி மூலம் பல காரியங்களை சாதித்திருக்கிறார்கள். அதுகாலை தனிகர்கள் மிக்க சங்கடங்களுக்காளானார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் இதனாலேயே பொது உடமை என்ற கொள்கையே விஷமாகிவிடுமா? யோசித்து பார்ப்போம். ஒரு பெரும் தேசத்தில் இக்கொள்கை வேரூன்றி இருக்கிறதென்றால் கொள்கையில் பலஹீனமோ தப்பிதமோ இருக்கமுடியாது. ஆனால் அதை பரப்பச் செய்யும் முயற்சிகளிலும் அதைப்பற்றிய விசாரணையிலும் அனுஷ்டானத்திலும் விரும்பத்தகாத பல அம்சங்கள் இருந்து இவ்வித சங்கடங்கள் ஏற்பட்டதென்றுதான் சொல்லவேண்டும். கதையில் வரும் தெனாலி ராமனுடைய பூனை ஒன்றுதான் பாலைக் கண்டால் பயப்படுகிறது. உண்மையில் நாம் பார்க்கும் ஒரு பூனையும் பாலுக்கு பயந்து ஓடுவதில்லை.

நம் அறிவைக்கொண்டு பொது உடமைகள் என்பதை ஆராய்வோம். பொது உடமைகள் என்று சுட்டிக்காட்டுவதிலிருந்து தொனிக்கவில்லையா தனி உடமைகளும் உண்டு என்று? ஆகவே சிற்சிலவைகளை பொது உடமைகள் என்று சமூகத்தின் நலத்தில் அக்கரைக் கொண்டவர்கள் பிரித்து உபதேசம் செய்தால் நாம் என்றென்றைக்கும் அவர்களுக்கு கடமைப் பட்டவர்களாகிறோம். இப்படி ஏதோ ஓர்காலத்தில் பாகுபாடுபடுத்தி இருந்திருப்பார்கள். அப்பொழுது சமூகத்தில் எப்பொழுதும் ஒற்றுமையும் திருப்தியும் ஆனந்தமும் நிறைந்திருந்திருக்கும். மாதம் மும்மாரி பெய்திருக்கும் சுபிக்ஷம் பெருகி எல்லோரும் இன்புற்றிருந்திருப்பார்கள். ஒவ்வொருவரும் "எப்படி பிறருக்கு உதவி செய்யலாம்? அப்படிப்பட்ட சத்பாத்திரம் கிட்ட வேண்டும்" என்றுதான் ஏங்கி இருந்திருப்பார்கள். "எல்லோரும் என்னிடம் வந்து வேண்டியதை பெற்றுச் செல்லட்டும். நான் ஒருவரிடமும் 'தேஹி' என்று நிற்காமல் இருக்கும்படி அனுக்கிரகிக்கவேண்டும், எல்லா ஜனங்களும் இன்புற்றிருக்கட்டும்" என்று எப்பொழுதும் பிரார்த்தனை செய்துகொண்டிருந்திருப்பார்கள்.

ஒவ்வொரு தேசத்திலும் இதே மாதிரியான பண்டைக்கால சரித்திரத்தையே ரூன்னோர்கள் வாழ்மைபடி வாழையாக போதிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். தர்மம் தவறாது சகல காரியங்களும் நடந்துவந்த காலத்தில் வேறு அதிக சரித்திரம் ஏற்பட நியாயம் இல்லை. ஒரு புண்யவான் மறைந்தால் அவன் பிள்ளை புண்யவான். அவ்வளவுதான். இவ்வித நிலையிலிருந்து தருமம் தவற ஆரம்பித்து வாழ்க்கையில் சுழல்கள் கிளம்பியகாலம் வெகுநாளைக்கு முந்திய விஷயமாகிறது. தொடர்ச்சியாக ஜன சமூகத்தில் அமைதியொழிந்து தாங்கல்கள் மலிந்தன. தாராள மனப்பான்மைக்குன்றவே தனிகர்களும் அறிவாளிகளும் வெறுக்கப்படும் நிலைக்கு வந்தார்கள். வறியோர்களும் அறிவு வளர்ச்சி பெறமுடியாதவர்களும் இவர்களை தங்கள் சத்துருக்கள் என்று மதிக்கும் நிலை நாளடைவில் ஏற்பட்டுவிட்டது. கஷ்டங்கள் மேலும் மேலும் ஏற்படவே தபஸைப்போல் ஓர் சக்தியைப் கிளறியது. ஆகவே இக்கிளர்ச்சியினால் தூண்டப்பட்ட மக்கள் பலவாறு தங்கள் கஷ்டங்களுக்கு காரணத்தையும் அவைகளைப் போக்கும் மார்க்கங்களையும் ஆராயத்தொடங்கினார்கள். பல தேசங்களிலும் இவ்வித எழுச்சிகள் ஏற்பட்டன. அவர்கள் முன்னேற்றத்திற்குத் தக்கவாறு அவர்கள் கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.

கொடுங்கோல் மன்னன் ஆட்சியில் அவதிப்பட்டவர்கள் நல்ல அரசனைக் கொண்டு பரிகாரம் செய்து துஷ்டனை விரட்டினார்கள். நல்ல அரசனிருந்தும் தக்க சௌகரியங்களைக் காணாத மற்றும் பலர் பொருப்பாட்சி கோரி கிளர்ச்சி செய்து வெற்றிபெற்றார்கள். இப்பொருப்பாட்சியினாலும் திருப்தியடையாத தேசத்தினர்கள் ஜன ஆட்சிக்காக புரட்சியையுண்டாக்கி ஜனநாயகத்தை ஸ்தாபித்து அரசனை கொலுவிருக்க வைத்தார்கள். அப்பொழுதும் கோரிய பலன் கிட்டாததைக் கண்ட சில தேசத்தினர்கள் அரசனையே நீக்கிவிட்டு ஜன ஆட்சியை ஸ்தாபித்தார்கள். அப்பொழுதும் பண்டைய சரித்திரம் கூறிய சுபிக்ஷம் காணப்பெறாத ஜனங்கள் பெரிதும் விசனமுற்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள்.

அரசியல் ஆதிக்கத்தை எவ்வாறு திருத்தியமைத்தபோதிலும் சூழ்ச்சியில் தேறிய சிலர் பொருப்புள்ள ஸ்தாபனங்களைக் கைப்பற்றி தங்களுக் கனுகூலமாக உள்ள ஒரு கூட்டத்தினரை பொருளிலும் சக்தியிலும் பெருகச்செய்து மற்றவர்களையடக்கி ஆளவே விழைந்தார்கள். அவர்களுடைய அட்டகாசத்திற்கு காரணம் அவர்களிடம் சிக்கிய பொருளும் பொருளீட்டும் மார்க்ககங்களும் தான். ஆகவே இவை இரண்டையும் அவர்களிடமிருந்து பிடுங்கி பொதுவில் எல்லோருக்கும் இருக்கும்படி ஒப்படைத்துவிட்டால்தானே சகல சுபிக்ஷங்களும் திரும்பும் என்று நம்பிய தீவிரவாதிகள், விசாரணையில் மேலேறி வந்தவர்கள், தீர்மானித்து பொது உடமைக் கொள்கையைப் பரப்பினார்கள்.

இவர்களைப்போல் பலரும் எண்ணமிட்டு திரண்டபொழுது ஏற்பட்ட புரட்சி என்றுதான் ரஷ்யாவில் கண்ட மாறுதல்களை சொல்லவேண்டும். இன்றைய தினம் ரஷ்யாவைப்பற்றி பலரும் புகழ்கின்றனர். மதம் என்றாலே வேப்பங்காய் என்கிறவர்கள் என்று தூற்றப்பட்ட ரஷ்யர்கள் தேசபக்தி மிக்க உள்ள தீரர்கள் என்று இன்றைய தினம் கொண்டாடப்படுகிறார்கள். அவர்கள் மதத்திற்கு வேண்டுமானால் பெயர் சொல்ல இயலாமலிருக்கலாம். ஆனால் இவ்வளவு தேசபக்தி மதம் இல்லாதவர்களுக்குள் ஏற்படாது. தேசம் அவர்களுடைய கடவுளாக இருக்கலாம். தியாகமே தேச வழிபாடு என்று நம்பி அவர்கள் செய்யும் தீர செயல்கள் அதைத்தான் சுட்டிக் காட்டுகிறது. ரஷ்யத் தலைவர் ஸ்டாலினின் யுத்த நோக்கம் என்னவென்பதைப்பற்றி ஆராயத் தேவை இல்லை. அவரை எதிர்க்க ஹிட்லர் கூறும் காரணம் உலகத்தை கம்யூனிஸ்ட் எனப்படும் பொது உடைமைக்

கொள்கைக்காரர்களிட மிருந்து காப் பாற்றவேண்டும் என்பதே. ஆகவே இந்த ரஷ்யோ ஜெர்மன் யுத்தம் கொள் கைக்காக நடைபெறுகிறது என்று ஒப் புக்கொள்ளுவோம். ரஷ்யர்கள் எதிர் பாராத விதமாக பலம் பெற்றெழுந்த தற்கு பொருத்த காரணம் அவர்களுக்கு கொள்கையில் உள்ள தீவிர பற்றுதான் என்று சகலரும் கூறுகிறார்கள்.

அதாவது அவர்கள் மதம் பொது உடமை. அதனால் அவர்கள் அடைந்து வரும் சௌகரியங்கள் எண்ணற்றவை. ஆகவே மதபக்தியினால் வெறியூட்டப் பெற்று தேசமாகிற கடவுளின் சன்னதி யில் இன்று உடல் பொருள் ஆவி மூன் றையும் தியாகம் செய்து உலகைப் பிர மிக்க வைக்கிறார்கள்.

இவ்விதம் படிப்படியாக ஆராய்ச்சியி னாலும் தியாகத்தினாலும் உணர்ந்து அனுஷ்டானத்திற்கு வந்திருக்கும் பொது உடமைக்கொள்கை நிலைக்கு வந்துவிட்டது. அடுத்தபடியாக முன் னேறவேண்டுமானால் "இப்பொது உடமைகள் எவை? தனி உடமை களும் உண்டா? பண்டைய சுபிக்ஷத்தை திருப்பி அடைய கையாளப்படும் இப் பொது உடமைகள் இவ்வளவு சங்க டங்களுக்கு ஆளாகவேண்டியக் காரண மென்ன?" என்றெல்லாம் ஆராயவேண் டும். இந்த ஆராய்ச்சியை விடுத்து "பொது உடமைகளா!" என்று கூறும் காலம் கட்டாயம் நிலைக்கமுடி யாது.

மறுபடியும் பதத்தைப் பிடித்து ஆராய்வோம். பொது உடமைகள் என்ற சொல் பொது என்றும் உடமை கள் என்றும் பிரிக்கப்பட்டால் யாருக்கு "பொது", எந்த உடமைகள் என்று கேட்க தோன்றுகிறதல்லவா? ஒன்று கூடி வாழ விரும்பி கூட்டுறவுக்கு முந்திக் கொண்ட ஜனங்களுக்குத் தான் சில உடமைகள் பொது.

இவ்வுடமைகளை ஆராயப் புகுமுன் தனி உடமைகள் எவை என்பதை ஆராய்வது பயன்படும். தனித்தியங் கிய மனிதன் பிறப்புரிமைகளாகப் பெற்றவை நான்கு. இவ்வுரிமைகள் தான் தனி உடமைகள். அவைகள் பின்வருமாறு.

(1) இப்பரந்த உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் சஞ்சரித்துத் தங்கு வது.

(2) இயற்கை சேமித்து வைத்திருக் கும் திரவ்யாதிகளை தங்கு தடையில்லா மல் அடையும் உரிமை.

(3) தன் வாழ்க்கையின் லக்ஷ்யம் என்னவென்று ஆராய்வதிலும் அதை அடைய முயற்சிப்பதிலும் பிறர் ஒரு வரும் குறுக்கிடக்கூடாதென்று மறுத் தளிக்கும் உரிமை.

(4) தனக்கே வேண்டியிருக்கும் பொழுது பிறர் உதவியை நாடும் உரிமை. ஆனால் அவர் உதவ விரும்பா விட்டால் அது அவர் உரிமை என்று கண்டு தன்னையும் பிறருக்கு உதவும்படி வலுக் கட்டாயப் படுத்தக் கூடா தென்ற பாதுகாப்பு.

இவ்வித உடமைகளுடன் தனித் தியங்கிய மனிதன் பிறருக்கிருக்கும் உற் பத்தி சக்தி தனக்கில்லா திருப்பதையும் ஆனால் அவ்வாறு உற்பத்தியானதை தான் அடைய வேண்டுமென்ற விருப்பம் மேலிட்டு வருவதையும் கண்டு அப் பொருளை தன் நான்காவது உரிமைகள் பலத்தில் யாசித்தான். அவன் கோரி யதை கொடுக்க மற்றவரும் இசையவே ஒரு கூட்டுறவு இவர்களால் நிலவியது. இப்படி பலர் ஒன்று கூடி ஒரு சமுகம் ஏற்பட்டது. இதில் யார் எப்பொருள் உற்பத்தி செய்தாலும் அப்பொருளை அனுபவிக்கும் உரிமை விரும்பியவர் களுக்கெல்லாம் கிடைக்கும் என்ற அடிப் படைத் தத்துவத்தை ஒப்புக்கொண்ட தின் பேரில்தான் இக்கூட்டுறவு நிலவி யது என்பதை ஆழமாக மனதில் பதிய வைக்கவேண்டும்.

இவ்வாறு வந்த கூட்டுறவில் உற்பத்தி சக்தியை ஒவ்வொருவரும் அதிகப் படுத்த விழைந்தார்கள். ஏன்? பிற ருக்கு உதவவேண்டும் என்ற ஆர்வம் மிகவே இவ்வித சிரத்தைத் தோன்றி

யது. இச்சிரத்தையின் பயன் பிறர் கொடுக்கும் புத்திமதிகளை கேட்கத் தூண்டியது. தன்னிலும் அதிகம் தெரிந்தவர்களிடமிருந்து பொது நலனை யுத்தேசித்து தான் அடைய விரும்பிய அறிவைப் பெற பயம், பக்தி, சிரத்தை, திடசித்தம், தாழ்மை முதலியவைகள் இன்றியமையாத சாதனங்கள் என்ற பக்குவம் ஏற்பட்டது. அப்படி யடைந்த அறிவினால் தான் திரட்டும் பொருளும் சக்தியும் பிறருக்குதவவே என்ற ஞாபகத்தையும் மறக்கவில்லை. அவ்விதமே தான் தேறினவுடன் மற்றயவர்களின் சௌகரியத்தை யுத்தேசித்து தன் அறிவையும் அனுபவத்தையும் பிறருக்கு உபதேசம் செய்வதே தன் கடமை என்ற எண்ணம் மேலோங்கியது. இவ்வித எண்ணத்தில் ஊறி ஊறி தனக்கென்று வாழாமல் பிறருக்கென்றே பலரும் தங்கள் வாழ்க்கையை நடத்தினார்கள். சிலர் ஓரிடத்தில் தங்கி தேடி வந்தவர்களுக்கெல்லாம் உபதேசம் செய்தார்கள். மற்றும் சிலர் ஊரூராகத் திரிந்து அனவரதமும் அறிவையும் அனுபவத்தையும் புகட்டுவதையே தம் தொண்டாகக் கொண்டார்கள். பலர் இல்லறிவைக் கொண்டு உற்பத்தியிலீடுபட்டு இவ்வனைவருக்கும் வேண்டிய சௌகரியங்களனைத்தையும் கொடுக்க விழைந்தார்கள்.

இவ்வாறு ஒரு சமூகம் பூராவும் தீவிரமாக கூட்டுறவின் மூலம் இயங்கியது. இச்சமூகத்திற்கு வேண்டிய சகலமும் பொது உடைமைகள் என்று கூறுவது மிகையாகாது. உற்பத்தியான பொருள்கள் எல்லாம் பொது உடைமையாகப் பாவிக்கப்பட்டன. தேறிய அனுபவமெல்லாம் எல்லோருக்கும் சொந்தம். பயிலுகின்ற வித்தை எல்லாம் பொது நலனை பெருக்கவேண்டியே பயிலப்பட வேண்டும். இச்சக்தியை தனித்தனியே அளந்தறிய ஆற்றல் படைத்த அறிவாளிகள் நிர்ணயித்து போதிப்பதைத் தான் பயிலவேண்டும். "இதைத்தான் கற்றுக் கொள்ளுவேன், இதைத்தான் போதிக்க வேண்டும்" என்று கூறும் உரிமை கிடையாது. சுயநலம் கோரி இவ்விதிக்கு மீறி நடக்க முயலுகிறவன் சமூகத்திற்கு லாயக்கில்லை.

இவ்விதம், உணவு, உடை, உணர்வு, உவகை, உபதேசம் என்ற சகலமும் பொது உடமைகள் என்று ஆதிசமூகம் வகுத்தது புலப்படவில்லையா? இவ்விதியை கடைப்பிடித்து ஒழுகிவந்த வரையிலும் புரட்சிக்கு அவசியம் ஏற்படவில்லை. இதில் சுயநலம் புகுந்து மற்றயவர்களின் உழைப்பின் பலனைத்தான் உழைக்காமலே யனுபவிக்க வேண்டும் என்ற இராக்ஷத குணமாகி, சோம்பல் வயப்பட்டு மனிதர்கள் திணற ஆரம்பித்ததும், தலை காக்கும் தர்மம் நிலை பிறண்டது. வரிசையாக புரட்சிகள் தோன்றி தருமத்தை நிலை நிறுத்த பாடுபடுவதைத் தான் பொது உடைமைக் கொள்கை ஞாபகப்படுத்துகிறது.

கால சக்கிரம் சுற்றிக்கொண்டுதான் இருக்கிறது. "பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுஉ அல கால வகையினாலே" என்ற வாக்கியம் பொய்க்கவில்லை. ஆனால் சுழன்று வரும் காலவரை என்ற ஞாபகம் மிக்க பழமையாக விருந்ததே. புதியதாக பரிணமிக்கும் என்பதை அறிவுறுத்துகிறது.

மேலும் தர்மம் நிலை பிறண்டதே யொழிய அடியுடன் மறைந்து விடவில்லை. ரஷ்யாவில் எல்லோருக்கும் உணவும் உடையும் அரசாங்கம் அளிக்கும் என்றும் பெரிய முதலாளியாக மாற வழியில்லை என்றும் கேள்விப்படுகிறோம். அங்கு பிறக்கும் குழந்தைகளின் பராமரிப்பு, கல்விப் பயிற்சி எல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பு. அங்கு தேர்ந்த அறிவாளிகள் எல்லோரும் அரசாங்கம் கோரும் வகையிலெல்லாம் கட்டாயம் உழைத்தாக வேண்டும் என்று கேள்விப்படுகிறோம். மற்றய தேசங்களிலும் பூர்ணமாக இல்லாவிட்டாலும் சிறிதளவாவது இவ்விதம் அரசாங்கம் உதவ வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. குழந்தைகள் கல்வி பயில கலாசாலையிலேயே வாசம்பெற்று ஆசிரியர்களுடன் கூடவே இருந்து படிக்க முயலுவதை

மிக்கக் கொண்டாடப்படுகிறதை பார்க்கிறோம். இங்கு ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல் ஓர் சகோதர பாவம் நிலவ மிக்கச் சந்தர்ப்பங்கள் கிட்டுவதாக கூறுகிறார்கள். பல சாலைகளில் சான்றோர்களைக் கொண்டு அடிக்கடி ப்ரத்தியேக உபன்யாசங்கள் செய்விக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இவைகள் அவசியம் என்கிறோம். இவ்வித முயற்சிகளுக்கு அரசாங்கமும் பொது ஜனங்களும் பற்பல நிதிகளை ஏற்பாடு செய்கிறார்கள். பல அறிவாளிகள் பல பல தொண்டர்கள் சங்கங்களை நிறுவுகிறார்கள். இதற்கும் பொது ஜனங்களிடமும் அரசாங்கத்தினிடமும் பொருளீட்ட வருகிறார்கள். இன்னும் பலர் அன்னதான சமாஜத்தை விருத்தி செய்ய விழைகிறார்கள். இவ்வித முயற்சிகளெல்லாம் எதன் சின்னங்கள்? பொது உடமைகளா! என்று மலைக்கிறோம். இவைகள் சிறிய அளவில் பொது உடமைக் கொள்கையை அனுஷ்டிப்பது இல்லையா?

இவ்விதம் சிறுகச் சிறுகப் பாடுபட்டு பல புரட்சிகளுக்குப் பிறகும் பூர்ணமான பொது உடமைகள் நிலைபெற முடியவில்லை. பொருள், ஏவல் இவைகள் போதிய அளவில் கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறோம். ரஷ்யாவிலும்கூட இவ்விதிகளை அமுலுக்குக் கொண்டுவர பல சிப்பந்திகளை நியமித்துக் கண்காணிக்க வேண்டி இருக்கிறது. இப்படி மேம்பார்வையிலிருப்பவர்கள் வேறு விதத்தில் சமூகத்திற்கு உழைக்க வேண்டியதில்லை என்றே இருக்கிறார்கள். இதை சுகவாசம் என்று கருதி மற்றும் சிலர் இந்நிலைக்கு வர முயன்றால் அவர்களை யடக்கிக் கட்டுப்படுத்தும் பெரும் பொறுப்பு அரசாங்கத்தின் தலையில் வடிகிறது. ஆனால் இவ்வித எண்ணத்தை எத்தனை நாட்களுக்கு அடக்கி வைக்க முடியும்? இவ்வித எண்ணத்திற்கு இடம் இருக்கும் வரையில் பொது உடமையின் அடிப்படை தத்துவம் நசுக்கப்படுகிறது. இன்னும் எவ்வளவு ரத்தம் சிந்தி பொருள்களை யழித்து இக்குறையை நீக்க விழலுவார்களோ?

மனமிருந்தால், உண்மை யறிய வேண்டுமென்றால், நம் முன்னோர்கள் காட்டிய செப்பனிட்ட பாதை இருக்கிறது. ஒப்பிட்டுப் பாருங்கள். யார் பொது உடமைக் கொள்கையை நன்கு அனுஷ்டித்து வாழ்ந்தார்கள் என்று கண்டு கொள்வீர்கள்.

நான்கு வித ஆச்ரமங்களை நியமித்தார்கள். அதில் க்ருஹஸ்தனுக்கு சகலவித பொறுப்பையும் அளித்தார்கள். பொருளீட்டுவது, அதை காப்பாற்றுவது, அதை வழங்குவது என்று எல்லாம் அவன் பொறுப்பு. பிரம்மசாரி என்கிற மாணாக்கர்கள் "பவதி பிக்ஷாம் தேஹி" என்று வந்தால் இல்லை என்று கூறாது அன்னமளிப்பது அவன் கடமை. சன்யாசிகள் வந்தால் உபசாரம்செய்து அன்னமளித்து அவர்கள் உபதேசங்களை கேட்டு க்ருதார்த்தனாக வேண்டுமென்பது அவர்களுக்கிட்ட கட்டளை. வானப்ரஸ்தர்களாக தவ வழி சென்ற பெரியோர்களை கானகத்தில் தேடி படைந்து சிஷ்ருஷைகள் செய்வது அவச்யமாக அவன் செய்ய வேண்டிய கடமை. அதிதி என்று யார் வந்தாலும் தெய்வமாக பாவித்து அன்னமிட்டு உபசரிப்பது அவன் வழிபாடு. தன்னிடம் உள்ளதை தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் எல்லோருக்கும் கொடுத்து எஞ்சியதை சாப்பிடுவதே அவன் நூற்கும் நோன்பு.

இந்த க்ரஹஸ்தன் அதிகாரம் சிறிய குடும்பத்தின்மீது. சிறிய பூஸ்திதியோ அல்லது ஒரு சிறிய தொழிலோ ஊதியத்தைக் கொடுக்கிறது. ஆனால் இவ்வூதியத்தை யனுபவிக்கப் பாத்தியப்பட்டவர்களோ வையகத்திலுள்ள அனைவரும் ரஷ்ய சர்க்கார் எல்லோருக்கும் பொதுவில் உணவு கொடுப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் வெளி தேசத்திலுள்ள நாம், அதில் பங்கென்று கோர முடிகிறதா? இந்த சிறிய கிரகஸ்தனிடம் கோரலாம்! உலகத்தில் ஒரு ரஷ்யாதான் தற்பொழுது இருக்கிறது. நம் முன்னோர்கள் சிருஷ்டித்த கிரகஸ்தர்களோ பலர். உலகம் பூராவும் இவர்களே பொருளீட்டுபவர்கள். பல தேசங்கள் சேர்ந்து

ஒரு குடையின்கீழ் வருவதுபோல் பல கிரஹஸ்தர்களும் ஒரு அரசனின்கீழ் என்று வகுத்தார்கள். கிரஹஸ்தன் தன்னுள் ஒரு தேசத்தையே அடக்கி வைத்திருக்கிறான் என்பது மிகையாகாது.

பிரம்மசாரிகளைக் கவனிப்போம். இவர்கள் வித்தை பெற குருவினிடம் ஒப்படைக்கப் பட்டார்கள். அரச குமாரனும் தரித்திரன் மகனும் சரி சமானமாக குரு சிஷ்ருஷையில் அமர்கிறார்கள். ரெஸிடென்ஷியல் யூனிவர்சிடி என்று வழங்கப்படும் கலாசாலையின் தத்துவம் அவ்வளவு ஆடம்பரமும் செலவும் இல்லாமலேயே இங்கு ததும்பி இருக்கிறது. இன்னும் ஒரு பங்கு மேன்மையையும் காட்டுகிறது இக்குருகுலவாசம். பிக்ஷை எடுத்து வரும் இக்குருகுலத்து மாணாக்கர்கள் தங்கள் தங்கள் சாமர்த்தியத்தினால் அதிகம் சம்பாதித்தாகப் பெருமையடையக்கூடாதென்று பிக்ஷை பூராவையும் குருவினிடம் கொடுத்து அவர் கொடுத்ததைச் சாப்பிடவேண்டும் என்ற நியதி. மாணாக்கன் தன் குலப்பெருமையையும்பணப்பெருமையையும் அடிக்கடி பகட்டாகக் காட்டிக்கொள்ள தகுந்த இடமாக இந்த ரெஸிடென்ஷியல் யூனிவர்சிடி இருப்பதை தடுக்க பிரயத்தனம் செய்வார்களா? இவ்விதம் படிப்பிற்கு எதிரியாகிய அகம்பாவத்தை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வழிகாட்டினார்கள். இதுமட்டும் போதாதென்று தாழ்மையும், வைராக்கியமும், சிரத்தையும், பக்தியும், பயமும் உபதேசம் பெற அத்தியாவசியம் என்பதை யுணர்ந்து குருசிஷ்ருஷையிலேலே இப்பிரம்மசாரிகள் காலம் கழித்தார்கள். குருவாகப் பார்த்து அனுகிரத்தவித்தையை அந்த பக்குவ காலத்தில் அடைந்தார்கள். ஒவ்வொருவருடைய வித்தைப் பயிற்சியும் சமூகத்தின் பொது நலனுக்காகச் செய்யப்படுவது. ஆகையால் இப்பயிற்சி சமூகத்தின் பொது உடமை. இதை ஆராய்ந்து பக்குவம் வந்தவர்களுக்கே தக்கதை போதிப்பது குருவின் கடமையே யொழிய சிஷ்யனின் தனி உறிமை இல்லை என்று நம் பெரியவர்கள் வகுத்த துணிபை என்னென்று புகழ்வது!

இவ்வித குருக்கள் யார்? பொதுவாக கிரஹஸ்த தருமத்தை நன்கு பரிபாலித்து சகலரிடத்தும் அன்புடன் ஒழுகப் பழகிய கிரகஸ்தன் உலகத்தின் வருங்கால கிரகஸ்தர் முதலியவர்களுக்கு பயிற்சியை யளிப்பதே தன் வாழ்நாளில் செய்யப்பட வேண்டிய தொண்டென்று தேறியவர்கள். இவர்கள் க்ருஹக் கிருத்யங்களை வயது வந்த குமாரனிடம் ஒப்படைத்து விட்டு தவக்கோலம் பூண்டு வனம் செல்லும் வானப் பிரஸ்தர்களெனப்படுவர். இவர்களை நாடியடைந்தசிஷ்யர்களுக்குபதேசம் செய்து மகிழ்ந்தார்கள். ஞானம் பெற்ற பெரிய கிருகஸ்தர்களும் ருஷிகுலம் ஸ்தாபித்து வாழ்ந்து இக்கைங்கர்யத்தை செய்து வந்தார்கள். இவ்வாறு கல்வி வளர்ச்சியை ஏற்பாடு செய்வித்த அத்தீர்க்கதர்சிகள் படிப்பிற்காக பணம் தேடவேண்டிய சிரமத்தை யறவே யொழித்தார்கள். படிப்பிப்பதும் படிப்பதும் பொது ஜனங்களின் நன்மைக்காகவே. ஆகவே இவர்களை காப்பாற்றி சகல சௌகரியங்களையும் செய்வது பொது ஜனங்களாகிய கிரஹஸ்தன் சுமை என்று வகுத்தார்கள். சிறு சிறு சுமையாக பல கிரஹஸ்தர்களுக்கும் பிரிந்தும் நின்றது இச்சுமை.

ஞானம் மிக்க முற்றி பற்று விலகியுள்ளவர்களுடைய அனுபவமும் பொது உடமையே. ஆகவே அவர்களை சன்யாசி கூட்டத்தில் சேர்த்தார்கள். உற்றார், ஊர் என்ற தொடர்பில்லாமல் உலகினர் பூராவும் உறவினரென்றும், உலகம் பூராவும் உய்விடமென்றும் கொண்டார்கள். ஆகவே ஓர் ஊரிலும் சேர்ந்தார்போல் பல நாட்கள் தங்காமல் திக் விஜயம் செய்து தெள்ளிய ஞானத்தை பரப்புவதே ஓர் சேவை என்று எண்ணி மகிழ நியமிக்கப்பட்ட உபன்யாசகர்கள் இல்லையா இவர்கள்? இவ்வுபன்யாசங்கள் பலருக்கும் பொதுவானது என்ற காரணத்தாலேயே கிரகஸ்தன் சன்யாசிகளை பூஜித்து வணங்கி உபன்யாசத்திற்கு ஏற்பாடு

அட்டைப் படம்

# வித்தியாசங்கரர் கோயில், சிருங்கேரி

ஸ்ரீமத் ஆதி சங்கர பகவத் பாதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட முக்கிய பீடங்களில் ஒன்றுன சாரதா பீடத்திற்கு இருப்பிடமான சிருங்கேரி மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த கடூர் ஜில்லாவில் இயற்கை சூழில் மிகுந்த மலைநாட்டின் நடுவே துங்கபத்திரை ஆற்றங்கரையில் மனதைக் கவரும் அமைதியும் அருளும் வாய்ந்து விளங்குகிறது. ஆதி ஆசாரியர்கள் வடநாடுகளில் திக்விஜயம் செய்து திரும்புகையில் இந்த இடத்தில் தங்க நேரிட்டதாகவும் அங்கே பிரஸவ வேதனைப்படும் தவளைக்குப் பாம்பு குடை பிடிக்கக் கண்டு இவ்விதம் மைத்திரி பிரகிருதி குணங்களையே மாற்றும்படியான சக்தி இந்த இடத்தில் இருப்பதால் இதுவே ஸ்ரீ சாரதா பூஜைக்கும் தன் சிஷ்யர்கள் வாஸத்திற்கும் தகுந்த இடம் என்று நிர்மானித்து மடத்தையும் கட்டி ஸ்ரீ சாரதா தேவியைப் பிரதிஷ்டை பண்ணினதாக ஐதிகம்.

சிருங்கேரி மடத்தின் குரு பரம்பரையில் தோன்றின ஸ்ரீ வித்யா தீர்த்த ஸ்வாமிகள் உலகப் பிரஸித்தரான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிக்குக் குரு. அப்பெரியாரின் ஞாபகார்த்தமாக அவருக்கடுத்த பட்டத்தவரும் வித்தியாரண்ய ஸ்வாமியுடன் அவரிடம் சிஷ்யராக இருந்தவருமான ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகளால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ வித்தியா சங்கரர் கோயில் அபூர்வமான முறையில் வான சாஸ்திரத்தின் தத்துவத்தை யுணர்ந்த சிற்பிகளால் ஸ்ரீ வித்தியாரண்யருடைய மேற்பார்வையில் அமைக்கப்பட்டுக் கலைச்செல்வம் நிரம்பி நிற்கிறது. பதினெட்டு அடி உயரமுள்ள 'நவரங்க'மென்ற நடு மண்டபத்தைப் பனிரெண்டு ஸ்தம்பங்கள் தாங்கி நிற்கின்றன. ராசி மண்டலம் போன்று நீள வட்டமான இந்த மண்டபத்தில் அந்த அந்த மாதம் சூரியன் அதற்குரிய ராசியில் நுழையும் அன்றைக்குக் காலையில் அந்த ராசி பிம்பத்தை அடையாளமாகவுடைய ஸ்தம்பத்தின்மேல் சூரிய கிரணங்கள் விழும் விசித்திரத்தை இங்கே. காணலாம்.

---

செய்கிறுன். இவ்விதம் பற்றற்ற தூய்மையான சேவைக்கீடாகுமா பணம் கொடுத்து தற்காலம் பல்கலைக் கழகங்கள் நிகழ்த்தச் செய்யும் ப்ரத்யேக உபன்யாசங்கள்?

இவைகளையெல்லாம் ஆராயும் பொழுது பொது உடமைகளா என்று மலைப்பது நம் பாரத சமுதாயத்தில் வளர்ந்தவர்களுடைய காரியம் இல்லை. உலகினிற்கே மேலான வழியில் ஆஸ்ரம தர்மங்களைப் போதித்து பொது உடமைக் கொள்கைகளைப் பரப்பிய உண்மை சனுதனிகளின் மரபு நாம் என்று பெருமையுடன் கூற முன்வாருங்கள். மறுபடியும் உலகம் உய்ய உண்மையான பொது உடமைகளை உவகையுடன் அனுஷ்டிக்கத் தொடங்குங்கள் என்று கூறும் காலம் வந்தால் நம் தர்மம் தலை காக்கும் என்பதைப் பிரத்யக்ஷத்தில் பார்க்கலாம்.

# மாலதியின் தலைத்தீபாவளி

[ஜயலக்ஷ்மீ, R. ஸ்ரீனிவாசன்]

"ஸீதா, சீதா! இதோ 'வாணீ' (பத்திரிகையின் பெயர்)யின் சிறு கதைப் போட்டியில் 'ரேவதி' என்பவள் முதல் பரிசை தட்டியிருக்காளே! அடாடா! முழுசா, ஆயிரம் ரூபாய் என்றால் ஆயிரம் ரூபாய். யார் இவள்?"

"அவள் யாரோ, எனக்குத் தெரியாதே."

"நீயும்தான் கதை எழுதறேன் என்கிறாயே. புண்ணியமா புருஷார்த்தமா? ஏதாவது அதனால் சம்பாத்தியமுண்டா......."

"ஏம்பா, அம்மாவை ஏதாவது சொல்லாவிட்டால் உனக்குப் பொழுது போகிறதில்லையா? அம்மாவின் கதை ஒன்றையாவது நீடிச்சு பார்த்தானாத் தெரியும், அதன் உருசி உனக்கு!"

"பெண் பரிஞ்சுண்டு வந்தூட்டையாக்கும். உக்கம்மாவை நான் ஒண்ணும் சொல்லலையடியம்மா. உன் கலியாணத்திற்கு ஏதாவது கொஞ்சம் பணம் சம்பாதிச்சுத் தரட்டுமேனுதான் பார்த்தேன்......."

"அப்பா, அதோ புருஷோத்தமையர் மாமா வருகிறார்!" என்றாள் மாலதி. ராமச்சந்திரனும் எழுந்து சென்றான்.

* * *

சென்னையில் பிராக்டீஸ் செய்யும் ஆயிரக்கணக்கான வக்கீல்களில் ராமச்சந்திரனும் ஒருவன். வருமானம் மிக சொற்பமே. கூட ஏதோ பிதுரார்ஜிதம் கொஞ்சமிருந்ததாகையால் எப்படியோ ஒருமாதிரியாகக் குடும்பத்தை நடத்தி வந்தான். தற்சமயம் பெண்ணுக்குக் கலியாணம் செய்யவேண்டிய கவலை வரவே, பணக்கவலை அவனை முற்றுகையிட்டது. 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்பதுபோல் ராமச்சந்திரனுக்கு மாலதிதான் ஒரே குழந்தை. குழந்தையைக் கூடியவரையில் தகுந்த இடத்தில் கொடுத்துக் கலியாணம் செய்ய வேண்டுமென்பதுதான் பெற்றோர்களின் விருப்பம். தேடாத இடமெல்லாம் பார்த்து, கடைசியில் வீட்டை அடமானம் வைத்து, நாலாயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் சேலம் இன்ஜினியர் ராமரத்தினமையரின் புதல்வன் கோபாலகிருஷ்ணனுக்கு மாலதியைக் கொடுத்துச் சிறப்பாகக் கலியாணத்தை நடத்திவிட்டான் ராமச்சந்திரன்.

மாலதிக்குக் கலியாணம் நடந்த பத்தாம்நாளே ஆறுமாதக் கர்ப்பிணியாகவிருந்த சீதாவிற்கு திடீரென்று ஏதோ கர்ப்பக்கோளாறு கண்டு, அதே சாக்கில் காலகதியடைந்தாள்.

* * *

மாலதிக்கு அந்த வருஷம் தலைத் தீபாவளி நடைபெறவில்லை. அதற்கடுத்த வருஷமாவது தீபாவளிப் பண்டிகைக்கு மாப்பிள்ளையை அழைத்து, கலியாணத்தில் செய்யாமல் நின்றுபோன வைதிரமோதிரமும், தங்க ரிஸ்ட் வாட்சும் செய்துபோட்டாலன்றி, பெண்ணைத் தங்கள் அகத்திற்கு அழைத்துக் கொள்கிற யோசனை கிடையாதென்று மாலதியின் மாமனார் மூன்றாம் மனுஷ்யர் வழியாக ராமச்சந்திரனுக்கு செய்தியனுப்பினார். எற்கெனவே கடன்பட்டிருந்த ராமச்சந்திரன் இந்தச் செய்தியை அறிந்து, செய்வதென்னவென்று வகையறியாது பரிதபித்தான். அடமானத்திற்கு வைத்த வீட்டை இன்னும் மீட்க வழிகாணோம், மேலும் மனைவி காயலா கிடந்தபொழுது, வேறு மருந்துக்கும், மாயத்திற்கும், டாக்டருக்குமென்று கொடுப்பதற்காகக் கடன் வாங்கியிருந்தான்.

குழந்தைக்குக் கலியாணமாகி ஒன்றரை வருஷமாச்சு. அவளைக் காலா

காலத்தில் புக்ககம் அனுப்பிக் கொடுக்காமலிருப்பதும் நன்ருகவில்லே. குழந்தைதான் என்ன நினைப்பாள்? வரவர வரும்படியும் குறைந்துவிட்டது. என்ன செய்வான், பாவம்! இருதலைக் கொள்ளியில் எறும்பு போல் தவித்தான். ரொம்ப ரொம்ப யோசித்துவிட்டு, கடைசியில் நண்பன் தியாகராஜனிடம் ஒரு ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினுன். அதனுடன்கூட மனைவியின் சில்லரை நகைகள் சிலவற்றையும் விற்று பணம் ஆக்கி, கூடப் போட்டு வைர மோதிரமும், தங்கக் கைக்கெடியாரமும் வாங்கிவிட்டான். அதைத் தவிர தீபாவளி ஜவளிச் செலவு வேறு உண்டே! சம்மந்திகளுக்கும், பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்குமாக இரண்டு ஜதை புடவைகளும், வேஷ்டிகளும் (இந்த யுத்த காலத்திலேதான் துணி விலையைக் கேட்க வேண்டுமா? விஷம்போல் ஏறுகிறதே) வாங்கியாக வேண்டும். தவிர, பண்டிகைச் செலவு, சம்மந்திகள் வந்து போக ரயில் சார்ஜ்........அப்பப்பா! இதனைத்தையும் யோசிக்க யோசிக்க ராமச்சந்திரனுக்குத் தலை சுழன்றது. என்னவோ பாவம், மென்று விழுங்கி திண்டாடிக்கொண்டு தலைத் தீபாவளிக் கொண்டாட்டத்திற்குக் கட்டாயம் வரும்படி சம்மந்திகளுக்கும், மாப்பிள்ளைக்கும் அழைப்புக் கடிதமும் எழுதிப் போட்டுவிட்டான். செலவு இதோடு நின்றுவிட்டதா என்ன? இன்னும் இதற்கடுத்த மாதம் நிறைவேற விருக்கும் சாந்திக் கல்யாணத்திற்கு சீர் எடுக்க வேண்டுமே. அதற்குச் செலவழிக்கப் பணம்?

* * * *

தந்தையின் அசௌகரியங்களையும், அனுகூலங்க ளில்லாமையையும் சிறுமி மாலதி எவ்விதம் அறியக்கூடும் பாவம்! கலியாணமாகி ஒன்றரை வருஷத்திற்குப் பிறகு சந்திக்கப்போகும் தன் மணளனை பற்றிய இன்ப நினைவுதான் அவளுக்கு! ஆனந்த மிகுதியால் பூரித்துப் போனுள் மாலதி! நகை நட்டுகளை விதவிதமாக ஜோடித்துக் கொள்வதும், புதுப் புடவை கட்டிகொள்வதும், கேசத்தை வாரி அழகாகப் பின்னி சிங்காரித்துக்கொள்வது மாக நிலைக்கண்ணுடி முன்னல் மணிக்கணக்காக நின்று காலங் கழிக்கலானுள். வீடு முழுவதும் ஒழித்து, பளிச்சென்று பரிசுத்தம் செய்யலானுள். தன் தாயாரை பெற்ற தாழ்ப் பாட்டிக்கு பக்ஷணம் பணியாரம் தயாரிப்பதில் கூடமாட ஒத்தாசையும் செய்வாள்.

கூடத்திற்கடுத்த பெரிய அறையை மாப்பிள்ளைக்காக தந்தையும் மகளுமாக ஒழித்துக்கொண்டிருந்தனர். அங்கே ஒரு மூலையில் ஒரு மரப் பெட்டி இருந்தது. அதன்மீது இன்னும் நான் கைந்து பெட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. இருவருமாக ஒன்றென்ருய்ப் பிடித்து அடுத்த அறைக்கு எடுத்து சென்று வைத்தார்கள். அடிப்பெட்டியின் தளத்தில் கறையான் பிடித்திருப்பதைக் கண்டு மாலதி, ' அப்பா! அம்மா பெட்டியெல்லாம் கறையான் " என்று கூவினுள்.

" அம்மா பெட்டியா? ஏதோ பழந் துணிப் பெட்டிபோலிருக்கே" என்ருன் ராமச்சந்திரன். "இல்லை அப்பா, அம்மா இதில்தான், தான் எழுதிய கதைகள் பிரசுரமான பத்திரிகைகள், அதன் சம்பந்தப்பட்ட கடிதங்கள் எல்லாவற்றையும் வைப்பது வழக்கம்" என்ருள் மாலதி.

"ஆனுல் சாவிக்கொத்தை கொண்டு வா திறந்து பார்க்கலாம். எல்லாம் என்னவாச்சோ" என்று பெட்டியை எடுத்து வேறிடத்தில் வைத்து கறையானை தட்டினுன் ராமச்சந்திரன். மாலதி சாவிக்கொத்தைக் கொணர்ந்து, ஒவ்வொரு சாவியாகப் போட்டு பார்த்து, கடைசியில் பெட்டியைத் திறந்துவிட்டாள்..

"அப்பாடா! உள்ளே கறையான் புகவில்லை" என்ருள் மாலதி.

ராமச்சந்திரன் உட்புறமிருந்த புத்தகங்களையும், பத்திரிகைத் தாள்களையும் ஒன்றென்ருக எடுத்துப் பிரித்து பார்த்த வண்ணமே, இதென்ன, அம்மா "ரேவதி" எழுதிய கதைகளுக்கு இப்படி சிகப்பு பென்ஸிலால் குறிப்பு போட்டு ஜோடித்து வைத்திருக்காள்! அம்மா பெயரில் கதை

கள் எங்கேயோ கொஞ்சம் தானே இருக்கு" என்றான்.

"ஐயோ, அப்பாவே! அம்மாவின் ஜன்மநக்ஷத்திரமென்ன ?"

"ரேவதி"

"பின்னே 'ரேவதி' என்ற எழுத்தாளி யாருன்னு நெனச்சே ?"

"ஆனால் அவள் உங்கம்மாவா!"

"பின்னே!"

"அடி கள்ளி! அம்மாவும், பெண்ணு மாக ஏன் எனக்கு இதைச் சொல்லாமல் ஒளித்தேள் ?"

"அம்மா தன் நிஜப்பெயரில் கதை எழுதினால்தான் நீ படிப்பதே இல்லே. அசட்டையா இருந்துவிடுகிறாய் என்று 'ரேவதி' என்ற புனைப்பெயரில் எழு திண்டிருந்தாள்............" என்று சொல்வ தற்குள் ராமச்சந்திரன் பெட்டியிலிருந்த சிறிய டைரியொன்றை எடுத்து தாள் களைத் திருப்பவாரம்பித்தான்.

2-4-19....'விலாசினி'யில் வெளிவந்த என் கதைக்கு இன்று 25 ரூ. சன்மானம் வந்தது.

4-6-19...."மைத்ரேயி"யில் பிரசுர மான என் தொடர்கதைக்கு இன்று 120 ரூ. வந்தது.

5-9-19........"தேசபந்து"வின் சிறு கதை போட்டி பந்தயத்தில் என் கதை க்கு இன்று கிடைத்த முதல் பரிசுப் பணம் 500 ரூ.

7-11-19...."வாணி"யின் சிறு கதை போட்டி பந்தயத்தில் நான் ஜயித்த பணம் 1000 ரூ.

"சுகந்தா"வில் பிரசுரமான என் கட்டுரைக்கு 50 ரூ.

....இத்தனையும் மாலதியின் கலியாணச் செலவிற்கென்று, கலியாணம் நடந்த அடுத்த மாதமே அவரிடம் Surprise சாக கொடுக்கவேண்டும். இந்த தேதிக்கு கிட்டதட்ட 2000 ரூ. சேர்ந்திருக்கு. கடைசி பக்ஷம் 3000 ரூபாவது என் கைப்பட சம்பாதித்துக் கொடுக்க வேண்டும்........

இவ்வாறு டைரிக் குறிப்புகளை படித் துக் கொண்டே போனான் ராமச்சந்தி ரன். அவனுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. பரபரவென்று பெட்டியிலுள்ள பத்திரிகைகளையும், காகிதங் க ளை யு ம் புரட்டினான். அடிப்பாகத்தில் நீண்ட தொரு கவர் இருந்தது. அதைத் திறந்து பார்க்கையில், கத்தை கத்தை யாக ரூபாய் நோட்டுகள் வெளிப்பட் டன. எண்ணிப் பார்த்தால் 3756 ரூ!

"மாலதி!"

"அப்பா!"

"உன் தாயார் ஒரு தெய்வம்! 'கதை எழுதறேன் பேர் வழி' என்று என்ன சாதிக்கிறியோ" என்று அவளை ஏசுவேனே. அவள் புனிதத் தன்மையை அறியாது போனேனே. தமிழ்நாடு போற்றிப் புகழும் சிறந்த எழுத்தாளி "ரேவதி" தான் என் கண்மணி சீதா என்பதை அறியாது போனேனே" என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தான் ராமச்சந்திரன்.

* * *

மாலதியின் தலை தீபாவளிக் கொண் டாட்டம் முதல்தரமான முறையில் இனிதே நடைபெற்றதென்பதைச் சொல் லவும் வேண்டுமா ?



கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதராயிருந்த
காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமீ சாஸ்திரீகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

## கீர்த்தனை 11

ராகம் கேதாரம்] [தாளம் ஆதி

### ஸாஹித்யம்

பல்லவி

காம லோப மோஹ நிவ்ருத்தயே
கால கால பதாம்புஜ மாச்ரய,ரே.

அனுபல்லவி

*வாமலோச னஹேம சாபலோத்தாம வஞ்சன
க்ஷாம, மானவ.

சரணம்

கமல ஸம்ப வாதிம சாம்பவ
ப்ரணய பக்திபர ப்ரணுத வைபவம்
*சமல ஸூசன லேச வர்ஜிதம்
விமல யக்ஞமன: பீடமாச்ரிதம்.

### தாத்பர்யம்

ஸ்திரீகளிடத்திலும் பணத்திலும் பற்றுண்டு கொடூரமான ஏமாற்றங்களை அடைந்து க்ஷீணித்துப்போன ஏ மானிடனே! பிரும்மா முதலிய ஈச்வர பக்தர்களால் அளவு கடந்து ததும்பும் சலுகையுடன் கூடிய பக்தி பரவசத்தால் துதிக்கப்பட்ட பெருமையை யுடையதும், பாபம் என்ற பேச்சுக்கு அணுவளவும் இடம் கொடாததும், பரிசுத்தமான யக்ஞேச்வரனின் மனமாகிற பலகையில் நிலைபெற்றதும் ஆன காலகாலனாகிய பரமேச்வரனின் சரண கமலத்தைக் காமம், லோபம், மோஹம் இவைகள் விலகும் பொருட்டு, பற்றிக்கொள்.

பல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மகதப | பமகா | கஸ | ஸரி | கஸ | ஸரி | ஸநி பா நி |
| காஅமஅ | லோஓஒ | பஅ | மோஓ | ஓஓ | ஹஅ | நிஇ வ்ருஉத்த |

---

குறிப்பு:—*இந்தக் கீர்த்தனத்தில் அனுபல்லவியே புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. சரணத்தில் மூன்றாவது ஆவர்த்தம் ஸாஹித்யம் மாற்றப்பட்டிருக்கிறது. ஸங்கீதாம்சங்களிலும் சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.—ய. ம.

ஸ அ அ ஷி ஸரி கரி ரிஸ ஷி ஷி
யே எ ஏ மோஓஓஓ ஓஓ

ஷி ஷி கரி பம மக கரி ஷி ஷி
பஅ மோஓ ஓஓ ஓஓ

ஷி கம ப ஸ் ஸ் ஸஅஅஸஅஅ ஸ் நிஸாநி பாபம
கால கா ஆ ல பஅஅதாஅஅம் பு ஜஆஅ மாச்ரஅ

கமதபபம ஷி ஷி மக கரி ரீஇஸ் ரிஸ
யஅஅஅரேஎ புஉ ஜஅ மாஅ ச்ரஅ

நிப பாபம
யஅ அஅரேஏ காமலோபமோ.

## அனுபல்லவி

பநிபா பஸ்நி ஸ்ாஅ ஸ் க் காரி
வாஅமஅ லோஒச ஞஆஆ ஷே ம சாஆப

ஸரிகரிஸநி ஷி ஷி ஸ் பம ஷி
லோஒஓஓஓஓ ஷே மஅ

ஸரிகா ஸ் காகரி ஸரீஸ ஸ் ஸ் கரிஸநிபா தபபம காஅரி
லோஒஓ ஓ த்தாமஅ வம்ஞ்ஞ் ஞ் ச னஅஅஅஆ க்ஷஅஅம மாஅன

ஸரிகா ஸ
வஅஆ அ காமலோபமோ.

## சரணம்

கக ம பா ம பஅஅ பம தப பமகா கஸ
கம ல ஸஅ ம்ப வாஅஅ திஇ மஅ சஅஆம்பஅ

ஸரிகஸ ககா ரீ ஸ் ஸரிஸநி ப ஸஸ ஸநி கா கரி
வஅஅஅ ப்ரணயஅ பஅக்தி பஅரஅஅ ப்ரணு தஅ வைஇ பஅ

ரிஸஸ பநிபா பஸ்நி ஸ்அஅ ஸ் க் க்ரி
வம்ம்ம் சமன ஸஹஸ ஞஅஅ லே ச வஅர்ஜி

ஸரிகரிஸநி ககரி ரீஸ ஸரிஸநிபா மக தப பமகாகரி
தம்ம்ம்ம் வமலஅ யஅக்ஞ மஅஅன: பீஇ டஅ மஅஆச்ரிஇ

ஸரிகாஸ
தம்ம்ம் காமலோபமோ.

# இந்தியாவின் துறைமுகங்கள்

[ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி]

## சென்னை IV

இந்தியாவின் கிழக்குக் கரையில் முக்கியமான துறைமுகம் சென்னைதான். வங்காளக்குடாக் கடலில் வடகோடியில் உள்ள கல்கத்தாவுக்குப் போகிற கப்பல்களும் அங்கிருந்து வருகிற கப்பல்களும் வழியில் தண்ணீருக்கும் எரி கரும்புக்கும் தங்குமிடம் சென்னைதான். இந்தக் கிழக்கு கரைக்குக் கொரமாண்டல் கரை என்று பேர். ரங்கூன், மலேயா, ஜப்பான் முதலிய இடங்களுக்கு இதுதான் சமீபமான இந்தியத் துறைமுகம். இங்கிருந்து உள்நாட்டு நகரங்களுக்கு ரயில் போக்கு வரத்து வெகு அநுகூலமாயிருப்பதனால் தென் இந்தியா முழுவதுக்குமே இதுதான் பிரதானத் துறைமுகமாயிருக்கிறது. இதற்கு பின்புறமாக மலைகளுமில்லை குன்றுகளுமில்லை. இங்கிருந்து மைசூருக்கும் ஐதராபாத்துக்கும் போகிற வழி படிப்படியாய் உயரும் பீடபூமியாக அமைந்திருக்கிறது. அதனால் தென் இந்தியாவின் விளைபொருள்களும் கைத்தொழில் உற்பத்திகளும் ரயில் மார்க்கமாகவும் ரோடு மார்க்கமாகவும் சென்னையை அடைந்து அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. இறக்குமதியாகும் விதேசிப் பொருள்களும் சென்னையிலிருந்தே பெரும்பாலும் ரயில் மூலமாகவும் ரோடு மூலமாகவும் உள் நாட்டுக்கு விநியோக மாகின்றன.

இந்தியாவின் மேற்குக் கரையிலும் வடகிழக்குக் கோடியிலும் அதிக மழையைப் பொழிகின்ற தென் மேற்குப் பருவக் காற்று சென்னையில் அதிகமாக அடிப்பதில்லை. ஆகையால் இந்தத் துறைமுகத்தில் அதிக மழை ஒருநாளும் பெய்வதில்லை. அதிகமாய்ப் பெய்தால் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் (அக்டோபர் நவம்பர் டிசம்பர் மாதங்களில்) சற்று அடைமழை பெய்யலாம். எப்போதாவது ஒரு வருஷத்தில் கடுங்காற்று மழைவருவதும் உண்டு.

அதிக மழை யில்லாமல் சாதாரணமாய் நன்றாய் வெயில் காய்ந்தபடியே இருக்கிறபடியால் வர்த்தகர்கள் சரக்குகளுக்கு ஒருவித சேதமுமில்லாமல் திறந்த வெளியிலேயே ஏற்றுமதி இறக்குமதிகள் அனைத்தும் இந்தத் துறைமுகத்தில் நடக்கின்றன.

சென்னையில் வரக்கூடிய புயல் காற்று ஐப்பசி மாசத்தில்தான் வருவது வழக்கம். ஆடி புரட்டாசி கார்த்திகை மாசங்களிலும் ஒரொரு வருஷத்தில் புயல் காற்று அடிப்பதுண்டு. இவை சாதாரணமாக சென்னைக்கு வடக்கே நூறு மைலிலுள்ள நெல்லூரைத் தாண்டியாவது தெற்கே நூறு மைலிலுள்ள கடலூரைத் தாண்டியாவது அடிக்குமே தவிர சென்னையிலேயே அடிக்கிறதென்பது கிடையாது. இதை நமக்கு அறிவிக்கிற பாவனையாக இந்த இரண்டு எல்லைகளிலும் வட பெண்ணை தென் பெண்ணை ஆறுகள் இவ்விரு பட்டணங்களின் ஓரமாய் பாய்கின்றன. இப்பெண்ணையாறுகளுக் கிடையில் நடுநாயகமா யமைந்துள்ள சென்னைப் பட்டணத்துக்கு புயலால் சேதம் ஏற்பட்டதே கிடையாது. அப்படிப் புயல் அடித்தாலும் முன் கூட்டியே அச்செய்தியை வானசாஸ்திர நிலையம் இத் துறைமுக அதிகாரிகளுக்கு அறிவிப்பார்களாகையால் கப்பல்கள் புயல் காற்றில் போய் அகப்பட்டுக்கொள்ளாமல் சென்னைத் துறைமுகத்திலேயே பக்குவமாக தங்கிவிடும், இல்லாவிட்டால் புயல் அடிக்கும் எல்லைக்கு எட்டப்புறப்பட்டுப் போய்விடும்.

மேன்மைதங்கிய கிழக்கிந்திய கம்பெனியார் முதல் முதல் இந்தக் கரைக்கு வந்தபோது கூவம் ஆற்றின் முகத்துவாரத்துக்குப் பக்கத்தில் மணற்கரையில் ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். இது கி. பி. 1639-ம் வருஷம். அதுதான் அவர்களுடைய துறைமுகம். அந்தக் காலத்தில் துறைமுக வசதிகள் ஒன்றும் ஏற்படவில்லை.

முதலில் கட்டின கோட்டையோ ஒரு சிறு சதுரமான மாடிவீடு. நாலு மூலையிலும் நாலு கொத்தளங்கள் அமைந்திருந்தன. அதிலிருந்துகொண்டு எதிரிகள், தாக்கவொட்டாமல் பாதுகாத்து வந்தார்கள். கோட்டையிலேயே பண்டக . சாலையுமிருந்தன. சிப்பந்திகள் வெளியே சிறு குடிசைகளில் இருப்பது வழக்கம். அந்தநாளில் துறைமுகமுமில்லை, ரேவுமில்லை. வெறும் மணற்கரைதான். அதுவும் அதிக அகலமில்லை. மழைகாலத்தில் கப்பல் போக்குவரத்து நின்றுவிடும். வெயில் காலமாயிருந்தால்தான் கப்பல்கள் வரும். அவைகளும் அலைகளைத் தாண்டி சற்றுத் தூரத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும். சரக்குகளாகட்டும் பிரயாணிகளாகட்டும் அங்கிருந்து நாட்டுப்படகுகளில் ஏறித்தான் மணற்கரைக்கு வரவேண்டும். இந்தப் படகுகள் மசூலிப்பட்டணத்தில் செய்யப்படுவதனால் இவற்றிற்கு மசூலா படகு என்று பெயர் வைத்துவிட்டார்கள்! கப்பலிலிருந்து இறக்கின சாமான்களை வைக்கவும் கிடங்குகள் இல்லை. சுங்க அதிகாரிகள் வந்து பார்வையிடும் வரையில் இவைகளை மணலிலேயே போட்டு வைப்பார்கள். வியாபாரிகள் நின்று பார்த்துக்கொண்டிருப்பார்கள். அதிகாரிகளின் சடங்குகள் முடிந்த பிற்பாடு கோட்டைக்குள்ளே கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்.

சென்னையின் வர்த்தகம் வளருகிற வேகத்தில் அதன் இடவசதி வளரவில்லை. நூற்றைம்பது வருஷத்திற்குப் பிறகு கோட்டையில் இறக்குமதி ஏற்றுமதிப் பொருள்களுக்கு இடம் பற்றாமற் போய்விட்டது. 1794 வருஷத்தில் லார்டு கிளைவ் கவர்னராயிருந்தார். அவர் கோட்டைக்கு வடக்கே ஒரு மைல் தூரத்தில் (இப்போது துறைமுகமுள்ள இடத்தில்) சரக்குகளை இறக்கவேண்டும் என்று உத்தரவிட்டார். அந்த நாளில் திப்புசுல்தான் பயம் குறைந்தபாடில்லை. அதனால் வர்த்தகர்கள் இப்படி வெட்டவெளியில் சரக்குகளை போட்டு வைக்கலாமா என்று திகில்பட்டார்கள். என்றாலும் கிளைவ் செய்த சீர்திருத்தத்தினால் சேதம் எதும் உண்டாகவில்லை.

அன்றுமுதல் சரக்குகள் அங்கேதான் இறக்குமதி ஏற்றுமதி ஆகின்றன. இடம் மாறிற்றே ஒழிய, பழயபடித்தான் கப்பலைத் தொலைதூரத்தில் நங்கூரம் பாய்ச்சி நாட்டுப்படகுகளில் சரக்கை கறையேற்றி வந்தார்கள். கப்பலையே கரையோரம் கொண்டுவந்து நிறுத்தும்படியாக துறைமுகம் கட்டவேண்டும் என்று சிலர் யோசித்தவுடனே இந்தப் படகு ஓட்டிப் பிழைக்கும் ஜாதியாருக்கு ஜீவனம் இல்லாமல் போய்விடுமே என்ற கூக்குரல் பெரிதாயிற்று. இந்தப் படகோடிகளோ தங்களை விட்டால் வேறு யாரும் இந்தத் தொழிலுக்கு வரமாட்டார்கள் என்ற தைரியத்தினாலும், மசூலாபடகைத் தவிர வேறெதுவும் அலையில் நிலைக்காதென்ற காரணத்தினாலும் ஒன்றுக்கு ஐந்து, ஆறு, எட்டு பத்தாக கூலி கேட்க ஆரம்பித்தார்கள். அநியாயக் கூலி வாங்குவதோடு நில்லாமல் சாமான்களைப் பழுதாக்கியும் சிலவற்றைக் களவாடியும் வர்த்தகர்களுக்குத் தொல்லை விளைவித்தார்கள். இதனால் வரும் சேதம் படிக்குப் பாதியாய்விடவே 1868-ம் வருஷத்தில் சென்னை (வெள்ளைக்கார) வர்த்தக சபையார் சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டு துறைமுகம் கட்டச் செய்தார்கள்.

கொஞ்சத்தில் ஆகிறதா, குரங்கு மிளகு தண்ணீர் குடிக்கிறதென்றால்? இதற்கு ஒரு கமிட்டி. அதில் பல அபிப்பிராய பேதங்கள்! காதோடு காது வைத்தாப்போல் வேலை செய்கிற வெள்ளைக்காரர்கள் கூடச் சென்னை வாசிகளானவுடனே ஆளுக்கொரு அபிப்பிராயம் சொல்லக் கற்றுக்கொண்டு விட்டார்கள்.

இவர்களுக்குள் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் போகவும், கராச்சி துறைமுகத்தைக் கட்டின இஞ்சினீரான பார்க்ஸ் துரையை யோசனை கேட்டார்கள். அவர்கள் சென்னை நகரைப் பார்த்தது கூடக் கிடையாது. இருந்தபோதிலும் அவர் யோசனை சொல்லிவிட்டார். மூவாயிரம் அடி நீளம், மூவாயிரம் அடி அகலத்துக்கு ஒரு சதுக்கம் கடலில் கட்டி ஐந்நூறு அடி அகலத்தில் ஒரு வழி விட்டுவிட்டால் நல்ல துறைமுகம் ஆய்விடும் என்று தெரிவித்தார். இந்தப்படிக் கட்டத்தொடங்கினவுடனே, அந்தக் காலத்தில் வைசிராயாகயிருந்த லார்டு லிட்டன் பிரபு சென்னை நகருக்கு என்ன இத்தனைபணச்செலவு,வேண்டாம் என்று தடுத்துப் பார்த்தார். அவருக்கு மேல் சீமையில் இருக்கும் இந்தியா மந்திரி அதை நிராகரித்து விடவேவேலை தொடர்ந்து நடந்தது. வைசிராய் விட்டாலும் வேலை விரோதமா யிருந்தது. 1881ம் வருஷம் அடித்த புயல் காற்றில் அரைகுறையாய் நடந்திருந்த கட்டடமெல்லாம் விழுந்து நஷ்டமாயிற்று. துறைமுகத்திற்குள் நங்கூரம் பாய்ச்சியிருந்த இரண்டு சிறுகப்பல்கள் முழுகிப்போயின. மூட்டை தூக்கி இயந்திரங்கள் கடலில் அடித்துக்கொண்டு போகப்பட்டன.

இந்தப் புயற்காற்றுச் சம்பவத்துக்குப் பிறகுதான் துறைமுக வாசலை வடகிழக்கு மூலையில் அமைக்கத் தீர்மானித்தார்கள். அதுவும் பல திட்டங்கள் போட்டுப் போட்டு கடைசியாக 1904ம் வருஷம் ஸர் பிரான்ஸிஸ் ஸ்பரிங் சென்னைக்கு வந்து கட்டுவித்த பிறகு தான் பூர்த்தியாயிற்று. அலையில்லாமல் துறைமுகத்துக்குள் ஜலமட்டம் இருக்கச் செய்தவர் இவரே. இவரால்தான் துறையோரமாய் வெறும் மணலாயிருந்தவிடத்தில் ரேவுகளும், கிடங்குகளும் ரயில் பாதையும் ஏற்பட்டன. அவர் எதிர் நோக்கினபடியே இத்துறைமுகத்தின் வர்த்தகமும் அமோகமாய் வளர்ந்துவிட்டது.

மனுஷ்ய யத்தனத்தால் இத்தனையும் செய்து முடித்துவிடவே கடவுளும் கண் திறந்தாரென்றுதான் சொல்ல வேண்டும். துறைமுகம் கட்டலாம் என்று ஆரம்பித்தபோது அலையினால் மணல் மேடிட்டுப் போகுமென்றும் அதை அவ்வப்போது தூறுவாரவேண்டுமென்று நினைத்ததெல்லாம் தேவையில்லாமல் போய்விட்டது. துறைமுகம் கட்டினதன் விளைவாக அதற்கு தெற்கே கோட்டைக் கெதிரே முன்னே சிறிதாயிருந்த கடல்கரை அலைகள் கொண்டு வந்து ஒதுக்கும் மணல் குவிந்து இந்த நாற்பது வருஷத்தில் வெகு விசாலமாக ஆய்விட்டது.

சென்னைத் துறைமுகத்தின் நாற்பாங்கெல்லைக்குள் இருநூறு ஏகரா விஸ்தீரணமுள்ள கடல் பரப்பு அடங்கியுள்ளது. இதற்குள் $31\frac{1}{2}$ அடி ஆழமுள்ள கப்பல்கள் பதினொருக்குக் குறையாமல் ஏககாலத்தில் நிற்கிறதற்கு இடமிருக்கிறது. ஏழு ரேவுகள் இருக்கின்றன. இவற்றுள் ஐந்தில் நவீன இயந்திர சாதனங்களினுதவியால் ஏற்றுமதி இறக்குமதி துரிதமாய் நடத்தலாம். ஒவ்வொரு ரேவின் ஓரமாகவும் ஒரு கப்பல் நிறுத்தலாம். கப்பல்களைத் துறைமுகத்துக்குள் கொண்டு வரவும் வெளியிலனுப்பவும் இரண்டு (டக்) கப்பல்கள் இருக்கின்றன. துறைமுகத்தின் மேற்கு ஓரமாய் நிற்கும் கப்பல்கள் நேராக இடங்களிலேயே சரக்குகளை இறக்கலாம். மற்ற பகுதிகளில் நிற்கும் கப்பல்களிலிறங்கும் சரக்குகளைக் கொண்டுவர எல்லாப் பகுதிகளிலும் ரயில் பாதை இருக்கிறது. எண்ணெய் கொண்டு வருகிற கப்பல்கள் நேரே எண்ணெய்க் கம்பெனிகளின் டாங்கிகளில் எண்ணெயைக் குழாய்கள் மூலமாய் ஊற்றிவிடுகின்றன.

கப்பல்களினின்றும் பாரமான சுமைகளை இறக்கவும் கரையிலுள்ள சுமைகளை ஏற்றவும் மின்சாரத் தூக்கிகளும் (கிரேன்களும்) தண்ணீரால் இயங்கும் கிரேன்களும் பல அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில 15 டன், 33 டன், 40 டன்கூட தூக்கி வைக்கக் கூடியவை.

சாமான் கிடங்கு சுமார் பதினொரு ஏகர் விஸ்தீரணமுள்ளது. மேலே தளம்

போட்டிருக்கிறது. நிலக்கடலை போன்ற சுத்தம் செய்து காயப்போட்டுக் கப்பலேற்ற வேண்டிய சரக்குகளை சேமித்து வைக்கும் கிடங்குகளும் தீப் பிடிக்காத அஸ்பெஸ்டாஸ் பூச்சுள்ள தகரம் கூரை போட்டிருக்கிறது.

கடல் கொந்தளிக்கும் நேரத்திலும் அசையாமல் சிறு படகுகள் போக வர வசதியாக ஒன்பது ஏகர் விஸ்தீரணம் நீர்நிலை இருக்கிறது. சுமார் 2800 அடி நீளம் கரையோரமாக இப்படகுகள் இரும்பு முதலிய நீர்வை கட்டாத சரக்குகளைக் கரையேற்ற முடியும். இதோடு இந்த நீர்நிலையில் 900 டன்னுக்கு அதிகமில்லாத கப்பல்களைப் பழுது பார்க்கவும் வசதி யிருக்கிறது. ஒரு மூலையில் சிறு படகுகள் கட்டவும் செய்யலாம். தேக்கு மரங்களை இறக்குவதற்கென்று இரண்டு ஏகரா விஸ்தீரணம் தனியே ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்மராட்டா இருப்புப் பாதையும் தென் இந்தியா ரெயில் பாதையும் இத்துறைமுகத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றபடியால் சாமான்களை ரயிலிலிருந்து கப்பலுக்கும் கப்பலிலிருந்து ரயிலுக்கும் சுலபமாக மாற்றலாம்.

இத்துறைமுகத்தின் நிருவாகம் பதினூறு அங்கத்தினர்கொண்ட ஒரு சபையினரால் நடத்தப்படுகிறது. இவர்களுள் நால்வர் சர்க்காரால் நியமிக்கப்படுகிறார்கள். நால்வரை சென்னை (வெள்ளைக்கார) வர்த்தகர் சபையும், இருவரைத் தென்னிந்திய வர்த்தக சபையும், ஒருவரைச் சென்னை ஜவுளி வர்த்தகர் சங்கமும், ஒருவரைச் சென்னை தோல் வியாபாரிகள் சங்கமும், இருவரை சென்னை வியாபாரச் சங்கமும் தெரிந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஒரு சேர்மென் சபைக்குத் தலைவர். வழக்கமாக சர்க்கார் நியமிக்கிற நாலு பேரும் சுங்க இலாகா அதிகாரியும், துறைமுக அதிகாரியும், இரண்டு ரெயில்வே கம்பெனிகளும் அதிகாரிகளுமாவர். துறைமுகப் பாதுகாப்பும் இச்சபையின் கையிலேதான் இருக்கிறது. அதற்கு ஒரு அதிகாரியும் இருக்கிறார்.

இந்தத் துறைமுகத்தின் சராசரி இறக்குமதி 25 கோடி ரூபா. ஏற்றுமதி 20 கோடி ரூபா. ஆகமொத்த வர்த்தகம் சுமார் 45 கோடி. இதனால் துறைமுகத்துக்குவருஷவருமானம்50 லக்ஷம்.செலவு 40 லக்ஷம். துறைமுகம் கட்டுகிறதற்கும் பிறகு அவ்வப்போது அதன் அபிவிருத்திக்கும் சர்க்கார் கடன் கொடுத்திருக்கிறார்கள். அதை மாதம் தோறும் கொடுத்துத் தீர்த்து வருகிறார்கள். இப்போது போகிற போக்கில் இக்கடன் பாதி 1952-ல் அடைந்துவிடும். 1982-ல் முழுவதும் கடன் தீர்ந்தே போகும். இதைத் தவிர 1923-ம் வருஷம் லண்டனில் இந்தத் துறைமுகச் செலவுக்காக ௬0 லக்ஷம் கடன் வாங்கி இப்போதுள்ள கிடங்குகளைக் கட்டினார்கள். இதற்கு ஆறு மாசத்துக் கொருதரம் வட்டி செலுத்தி வருகிறார்கள். இந்தக் கடனுக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிற ஒரு கணக்கில் வருஷா வருஷம் 50 ஆயிரம் ரூபா கட்டிக்கொண்டு வருகிறார்கள். இந்தக் கடனும் 1953-ம் வருஷத்தில் பைசல் ஆய்விடும்.

சென்னையில் இறக்குமதி ஆகிற பண்டங்களில் பெரும்பகுதி அரிசி,வேறுஉணவுப் பொருள்கள், நிலக்கரி, எண்ணெய், எரு, காகிதம், சாதல்வார், தேக்கு மரம், சர்க்கரை, சாபசு சாமான்கள், தோல் பதனிடும் சரக்குகள், உலோகங்கள், கண்ணடி, இயந்திரங்கள், மோட்டார்கார்கள், சைகில்கள், இவற்றின் சாமான்கள், நூல் ஜவுளி, ரயில் எஞ்சின்கள், வண்டிகள், சிமிட்டி, தோல், சாராய வகைகள், கால் நடை தீவனம், புகையிலை, பழங்கள், கோணிப்பை, தீப்பெட்டி, பருத்தி, சோப்பு முதலியன.

ஏற்றுமதி ஆகிற பண்டங்கள் பெரும்பாலும் வேர்கடலை, தோல், வெங்காயம், புகையிலை, பருத்தி, பழைய இரும்பு (காயலான்)பாவுகல், நூல்ஜவுளி,பிண்ணாக்குமஞ்சள், எரு, காப்பிக்கொட்டை முதலியன.

வெளி நாட்டு வர்த்தகத்துக்காக இந்தத் துறைமுகத்துக்கு 1913-14-ம் வருஷம் வந்துபோன கப்பல்களின் எண்ணிக்கை 511. அதேமாதிரி 1943-44-ல் வந்துபோன கப்பல்களின் எண்ணிக்கை 1000 இருக்கும்.

# நமது தபால் பெட்டி

ஐயா,

தங்கள் பத்திரிகையின் மூலம் தமிழ் நாட்டுக்கு தாங்கள் செய்துவரும் தொண்டு யாவராலும் மறுக்கக்கூடிய தன்று. அதிலும் ஸங்கீதக் கலையில் ஸகல அம்சங்களிலும் தலைசிறந்து விளங்கும் நம் கர்னாடக ஸங்கீதத்துக்கும், ஸங்கீத அபிமானிகளுக்கும் தங்கள் பத்திரிகை மிகுந்த உத்ஸாகத்தை உண்டுபண்ணுகிறது. ஸம்ஸ்கிருத பாஷையில் பெரியவர்களால் இயற்றப் பட்டு மூலையில் மறைந்து கிடக்கும் அரிய கீர்த்தனங்களை பிரசுரிக்கும் தொண்டைத் தாங்கள் எற்றுக்கொண்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது. தங்கள் பத்திரிகையில் இப்போது வெளியாகிக் கொண்டிருக்கும் கும்பகோணம் ஸ்ரீயக்ஞ ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் ஸம்ஸ்கிருத கிருதிகள் ஸம்பிரதாயமான கர்னாடக ஸங்கீத வழியை அனுசரித்து, பிராசின உருப்படிகளுக்கு ஸமமான யோக்யதையை உடையவைகளாயிருக்கின்றன. இது வரையில் வெளிவந்த உருப்படிகளில் தோடி, கல்யாணி, சங்கராபரணம், தன்யாசி முதலிய ராகங்களில் அமைந்த கிருதிகள் தற்காலம் புதிது புதிதாய் வெளிவரும் பாட்டுக்களுக்கு, அர்த்தபுஷ்டியிலும், ராக பாவத்திலும் எவ்விதத்திலும் தாழ்ந்தவைகளல்ல. சில பாட்டுக்கள் தீக்ஷிதர் அவர்களின் கிருதிகளுக்கு ஸமமாயுமிருக்கின்றன. இவைகளுக்கு வேண்டிய இடங்க




# இயற்கையின் தெய்விக அழகு

[பி. ஸ்ரீ.]

விஞ்ஞானிகள் இயற்கையைப் பார்க்கும் பார்வை வேறு, கவிஞர் பார்வை வேறு என்பது வெளிப்படை. விஞ்ஞானிகள் பகுத்தறிவுக் கண் கொண்டு ஆராய்ந்து பார்ப்பவர்கள். கவிகளோ மனோபாவம் என்ற அகக்கண் கொண்டு பார்த்து அனுபவிப்பவர்கள். விஞ்ஞானி மேகத்தைப் பார்த்ததும், சூரிய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாக மாறி அப்படி ஆகாசத்திலே மேகமாய்க் காண்கிறது என்கிறான். கவிஞன் கருமேகத்தைப் பார்த்ததும், "கருங்கடலே அப்படி ஆகாய வீதிக்கு வந்துவிட்டது,—வெயிலால் தவிக்கும் நிலபுலங்களை நீராட்டிக் குளிர்விப்பதற்காக" என்று குதூகலப் படுகிறான்.

மலைமேல் எழுந்து நெருங்கிப் படர்ந்த மேகக்கூட்டத்தை வர்ணிக்கும்போது கம்பன்,

பம்பி மேகம்
பரந்தது பானுவால் :
"நம்பன் மாதுலன்
வெம்மையை நண்ணினன்,
அம்பின் ஆட்டுதும்"
என்(று)அகல் குன்றின்மேல்
இம்பர் வாரி
எழுந்தது போன்றதே !

[பம்பி - நெருங்கி நிறைந்தது. பரந்தது - பாவிப் படிந்தது. பானு - சூரியன். நம்பன் மாதுலன் - நம்பல் + மாதுலன் = நம்புதற்கு உரிய மாமன். அம்பின் - நீரினல். ஆட்டுதும் - ஆட்டுவோம். இம்பர் வாரி - இவ்வுலகத்திலுள்ள கடல்; கீழே உள்ள கடல்.]

என்று பாடுகிறான்.

கருங்கடலே அப்படி அங்கே வந்து கிடப்பதுபோலத் தோன்றுகிறது, 'மலையின் வெப்பம் தீர நீராட்டுவோம்!' என்று. "கடலுக்கு ஏன் அந்தக் கவலை?" என்ற கேள்விக்கும் ஒரு விடை கண்டு பிடிக்கிறது கவிஞனது கற்பனை யுள்ளம். மலையின் புதல்வி நதி, நதியின் பதி (கணவன்) கடல்; எனவே மலைக்குக் கடல் மாப்பிள்ளை, கடலுக்கு மாமனார் மலை. மாமன் வெதும்ப மாப்பிள்ளை சகிப்பானா? மனைவியிடம் உண்மையாகவே காதல் கொண்ட மாப்பிள்ளை, "பெண்ணைக் கொடுத்தாரோ, கண்ணைக் கொடுத்தாரோ?" என்றல்லவா போற்றுவான் மாமனை? தன் தந்தையைக் காட்டிலும் அதிகமாய்ப் போற்றுவானும் தன் காதலியின் தந்தையை. எனவே, கடல் எழுந்து மலையை நீராட்ட வந்து விட்டதாம், வெப்பம் தீர. இப்படி யெல்லாம் தோன்றுகிறது கவிஞனுக்கு, மலைமீது காணப்படும் கடல்போன்ற கருமேகக் கூட்டங்களைப் பார்க்கும்போது.

---

ளில் ஸாகித்யம் சேர்த்தோ, ஸங்கதிகளைச் சேர்த்தோ, அல்லது மாற்றியோ, திருத்தம் செய்து ஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் பதிப்பித்து வருவது எல்லாரும் சுலபமாய்ப் பாடம் செய்ய வசதியாய் இருக்கிறது.

இந்த கிருதிகளை பெரிய வித்வான்கள் தங்கள் கச்சேரிகளில் பாடி பிரபல்யப் படுத்துவார்களானல் ஸம்ஸ்கிருத பாஷைக்கும் கர்னடக ஸங்கீதத்துக்கும் பெரிய தொண்டாக இருக்கும். வித்வத்துவம் வாய்ந்த பெரியவர்களின் ஞாபகமும் அழியாமல் இருக்கும்.

இவ்விடத்தில் என் நண்பர்கள் சிலரும் இம்மாதிரியே அபிப்பிராயப்படுவதால் தங்கள் பத்திரிகையின் மூலமே இந்த வேண்டுகோளை வித்வான்களுக்கு அறிவித்துக்கொள்ள முன்வந்தேன்.

இப்படிக்கு :
**ஸ்ரீ. எம். ஆர். வைத்தினதன்,**
மிலிடரி அகௌண்ட்ஸ் இலாகா, பூனா.

# அது ஒரு காலம்!



நாலைந்து வருஷங்களுக்குமுன்பு தான். நீங்கள் எந்த ஸ்டேஷனுக்கும் சுலபமாகவும் அதிகச் செலவில்லாமலும் போகமுடியும். இப்பொழுது பிரயாணச் செலவு ஒன்றுக்கு நாலாகிவிட்டது. தாமதமின்றி டிக்கட்பெறும் காலமும் ஒன்று இருந்தது. இப்பொழுதோ அரைமணி நேரத்துக்கு மேலாக க்யூ நின்று டிக்கட்டு பெறவேண்டியிருக்கிறது; சார்ஜும் அதிகமாகி விட்டது. ஒரு அணாவுக்கோ அரை அணாவுக்கோ உங்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய கூலிகள் தயாராக நின்றிருந்த காலமும் இருந்தது. இப்பொழுது ஆள் அகப்படுவதே கஷ்டம். உங்களிஷ்டப்படியே வண்டியும், வண்டியில் உட்காரும் இடமும் சுலபமாகப்பெறும் காலமும் இருந்தது. இன்று வண்டியில் நுழைய முடிந்தாலே அதிர்ஷ்டம்தான். பல தடவைகளில் ரயிலைப்பிடிக்க முடியாமலே போய்விடுகிறது. உள் நுழைய முடிந்தாலும், பல மணி நேரம் நிற்கவேண்டியும் நேரிடுகிறது. இந்த கலாட்டாவில் உங்கள் சாமான்களை இழக்க நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன், உங்கள் குடும்பத்தாரிடமிருந்தே பிரிந்து விடும்படி நேரிட்டாலும் நேரிடலாம். உங்கள் பெண்ஜாதி, மக்களுக்கு பிரயாணம் இன்று முன்போல சௌகரியமானதல்ல.

புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். சௌகரியமான காலம் வரும்வரை நீங்களும் உங்கள் குடும்பமும் ரயில்வேபோக்குவரத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

## பிரயாணத்தைக் குறையுங்கள்

A 678 TM

விஞ்ஞானிக்கே, இந்த மனோ பாவப் பார்வை கிடையாது. அவன், கடல்நீர் ஆவியாவதைப் பற்றியும், அந்த ஆவியைப் பருவக்காற்று அடித்துக்கொண்டு வருவது பற்றியும், அந்த நீராவியை மலை தடுத்து நிறுத்துவதைப் பற்றியும் நீராவிமீது குளிர்காற்று வீசும்போது அது கரு மேகமாகத் தோன்றுவதைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டே போவான். அவனும் ஆராய்ச்சிக் கண்ணால், அறிவுக்கண்ணால், இயற்கைஅழகுகளைக் காண்பவன்தான். எனினும் இயற்கையின் தெய்விக அழகைக் காணும் கண் கவிஞனுக்குத்தான் உண்டு.

* * * *

இது நிற்க. இயற்கை அழகுகளிலும், தெய்வத்தின் அழகுகளைக் காணும் கவிஞர்கள் உண்டு. இவர்களுக்குக் கரு மேகத்தைப் பார்த்ததும், ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவின் ஞாபகமே வந்துவிடும்; அல்லது பார்வதி தேவியின் ஞாபகம் வரும். மின்னலோடு கூடிய கருமேகம் மாணிக்கவாசகருக்கு மின்னற் கொடிபோன்ற இடையோடு கூடிய பராசக்தியையும், அந்த அம்மையின் இன்னருளையும் ஞாபகப்படுத்துகிறது. மயிலைப் பேயார் என்ற பேயாழ்வாருக்கு மின்னலும் மேகமும் கூடிய திருமாலை நினைப்பூட்டுகிறது.

எழில்கொண்ட மின்னுக்
கொடியெடுத்து, வேகத்
தொழில்கொண்டு தான்முழங்கித்
தோன்றும்,—எழில்கொண்ட
நீர்மேகம் அன்ன
நெடுமால் நிறம்போலக்
கார்வானம் காட்டும்
கலந்து.

[எழில் - அழகு. மின்னுக் கொடி - மின்னற் கொடி. கார்வானம் - கார் காலத்து ஆகாசம்.]

கார் காலத்து வானத்திலே நீர்கொண்டெழுந்த மேகம் மின்னற் கொடியோடு கர்ஜித்து வேகமாய்த் திரிந்துகொண்டிருக்கிறதல்லவா? இந்தக் காட்சியும் ஆழ்வாருடைய பக்திக் கண்ணுக்குப் பகவானுடைய காட்சிதான். பகவான் மின்னற் கொடிபோன்ற பிராட்டியோடு, அடியார்களைக் காத்தருள்வதற்கு வேகமாக ஓடித் திரிவது போலவும், தன் வெற்றிச் சங்கை ஊதி முழக்குவது போலவும் தோன்றுகிறதாம் இந்த மயிலாப்பூர் ஆழ்வாருக்கு.

இப்படிப் பக்திக் கண்ணோடு இயற்கையைப் பார்க்கும்போது இயற்கை யழகு குன்றிப் போவதில்லை; இயற்கை யழகு அதிகரித்துக் காண்கிறதென்றே சொல்லலாம். இயற்கையின் தெய்வீக அழகே புலனாகிறது என்றும் சொல்லலாம். இயற்கையின் அழகுகளிலும் தெய்வ அழகைக் காண்பவர்களை, "இவர்கள் இந்த லோகப் பார்வை இல்லாதவர்கள்; மறு லோகப் பார்வை உள்ளவர்கள் தான்!" என்று எப்படிச் சொல்லலாம்? இந்த லோகத்திலேயே பரலோக அழகையும் காணிபவர்களல்லவா இவர்கள்?

* * * *

ஆழ்வார்கள் முதலான பக்த மணிகள் தான் இப்படி இயற்கையை அனுபவிக்கிறார்கள் என்பதில்லை. மற்றக் கவிகளும் இப்படி அனுபவிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இன்று நம் கண்முன் ஓர் உண்மைத் தமிழ்க் கவியாக விளங்கும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும் சில சமய விசேஷங்களில் இயற்கையின் தெய்விக அழகுகளை அனுபவித்தவர் என்றே தோன்றுகிறது.

ஓர் உதாரணம், மாலைப்பொழுதிலே பிறைச்சந்திரனை எல்லாரும் பார்த்திருக்கிறார்கள். கவிகளும் எத்தனையோ விதமாக வர்ணித்திருக்கிறார்கள். வானம் தன் நெற்றிமீது சமயக் குறியாகிய 'கோபி' நாமம் அணிந்துகொண்டது போல இருக்கிறது என்றுகூட ஒருவர் பாடியிருக்கிறார். ஆனால்,

வான வெளிதனிலே,—கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே,
கூனப் பிறைவரவே,—சிவன்திருக்
கோலம் தெளிவேனடி!

என்ற கவிமணியின் பாட்டிலே, மாலைப்

பொழுதும் பிறைச்சந்திரனும் தங்கள் தெய்விக அழகுகளை நமக்கு எவ்வளவு வசிகரமாய்க் காட்டுகின்றன! அந்தி வண்ணனாகிய சிவபெருமான் நெற்றியிலே பிறைச்சந்திரனை தரித்துக்கொண்டிருக்கிறான் என்று புராணம் சொல்லுவதை எவ்வளவு உண்மையான கவிதையாக்கி விடுகிறார் நமது கவிஞர்!

வேறொரு உதாரணம். சமுத்திரத்தையும் சூரியனையும் விஞ்ஞானிகள் விஞ்ஞானக் கண்கொண்டு ஆராய்ந்திருக்கிறார்; பல கவிகளும் பாடியிருக்கிறார்கள். எனினும் கடல் அலைகளுக்கு இடையே சூரியோதயமாகும் காட்சி கவிமணிக்கு ஒரு தெய்விக அழகையே வெளியிடுகிறது:

முற்றிய ஆழியிலே,—அலைவந்து
மோதி எறிகையிலே,
கற்றைக் கதிர்எழவே,—உமைதிருக்
காட்சி வியப்பேனடி!

[ஆழி - சமுத்திரம். கற்றைக் கதிர் - கிரணத் தொகுதியோடு கூடிய சூரியன்.]

இன்னும் ஓர் உதாரணம். வானத்தையும் பார்க்கவேண்டாம்; சமுத்திரத்திற்குக்கூடப் போகவேண்டாம்; சூரியோதயத்தில் ஒரு தாமரைத் தடாகத்தின் கரையில் நின்று பார்த்திருக்கிறீர்களா? சூரியன் தன் கிரணங்களால் செந்தாமரையை ஸ்பரிசிப்பதிலும், அந்த ஸ்பரிசத்தால் செந்தாமரை மலர்ச்சி பெறுவதிலும் உள்ள தெய்விக அழகைக் கண்டிருக்கிறீர்களா? இங்கே கவிமணி பார்க்கிறார் ஒரு காதல் - நாடகத்தை:

தாமரைப் பொய்கையிலே,—கதிரொளி
தட்டும்அவ் வேளையிலே,
பூமலர்ந் தோங்கிடவே,—ஹரியென்று
போதம் நயப்பேனடி!

[பொய்கை - நீர் நிலை. நயப்பேன் - விரும்புவேன்.]

செந்தாமரைப் பெண்ணைச் சூரிய நாராயணன் காதலிப்பதும், காதலி முக மலர்ச்சியோடு அக்காதலை ஏற்றுக்கொள்வதும் ஆகிய இந்த நிகழ்ச்சியில், மகாவிஷ்ணு செந்தாமரையில் இருக்கும்




இந்தப் பையன் தன் தாய் நாட்டிலும் அயல் நாட்டிலும் சிறந்த கல்வியைப் பெற்று இன்று வாழ்க்கையில் மிக உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறான். இதற்கு சாத்தியமாக இருந்ததற்குக் காரணம் அவன் தகப்பனார் தீர்க்க தரிசனத்துடன் அவனுக்கு வேண்டிய அளவு கல்வி மற்றும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் மூலம் ஏற்பாடுகள் செய்திருந்தார்.

**உங்கள் பையன் விஷயமாக என்ன செய்திருக்கிறீர்கள்?**

விவரங்களுக்கு:

**நேஷனல்**

**இன்ஷ்யூரன்ஸ் கோ., லிட்.**

* * *

நெருப்பு, விபத்து, மோட்டார், கப்பல் மற்றும் பல இதர இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கு

**நேஷனல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கோ., லிட்.**

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு — கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:
'நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்'
362, சைனா பஜார் ரோட்—எஸ்ப்ளனேட்
சப் - ஆபீஸ்கள்: பெங்களூர் & மதுரை

மஹா லக்ஷ்மியை மணந்துகொள்ளும் புராணக் கதை புதைந்து கிடக்கிற தல்லவா? இந்த இயற்கை அற்புதத் திலே லக்ஷ்மீ நாராயண மூர்த்தியின் தெய்விக அழகைக் கண்டு பாடுகிறார் கவிமணி.

* * *

இப்படியெல்லாம் பக்திக் கண்கொண்டு இயற்கையைப் பார்ப்பது மறு லோகப் பார்வை அன்று; இப்படிப் பாடுவது வெறும் பக்திக் கவிதையுமன்று. கவி மணியின் மேலே குறித்த பாடல்களை 'இயற்கைக் கவிதை' இல்லையென்று சொல்ல முடியுமா? கவிஞன் இயற்கை யழகுகளை மனோ பாவத்தால் பார்க்கும் போது, பக்தியோடுதான் பார்க்கிறான். இந்தப் பார்வையில் சமய நோக்கும் காட்சியுங் கலந்து கொள்வதில் கவிதைக் குக் குறைவொன்றுமில்லை; இயற்கை யின் தெய்விக அழகு இனிது புலனாகிக் கவிதையும் ஒரு விசேஷ அழகுபெறக் கூடும்.

## அறிவிப்பு

பிரதி மாதம் பாரத மணி ஆங்கில மாதம் 20-ந் தேதி வாக்கில், அதாவது தமிழ் மாதம் முதல் வாரத்தில் வெளி வரும். காலத்தில் பத்திரிகை வந்து சேராவிட்டால், சந்தாதாரர்கள் பாரத மணி காரியாலயத்திற்கு 30-ம்தேதிக்குள் எழுதவேண்டும்.

ஆபீசுக்குத் தபாற்செலவு வீண் செய் யாமல்,சந்தா பாக்கியுள்ள சந்தாதாரர்கள் தாங்களே கவனித்து வருட சந்தாவை முன்பணமாகவே உடனே அனுப்ப வேணும். சந்தாதாரர்களின் ஒத்துழைப் புக்கு இது ஒரு முக்கிய லட்சியமாகும்.

—மானேஜர்

## மகாத்மாவின் மணிவாசகம்

"உண்மையான யுத்த முயற்சி" யென்ற கட்டுரையில் காந்திஜி பின் வருமாறு எழுதுகிறார் :—

"இப்பொழுது நாம் செய்ய வேண்டி யவைகளில் பசித்தவர்களுக்கு அன்ன மளிப்பதும், ஏழைகளுக்கு வஸ்திர மளிப்பதும் முக்கியமான காரியங்கள். யுத்த காலத்தில் இவ்விரு பஞ்சமும் அதிகமாகும். பணக்காரர்கள் பஞ்சக் கொடுமையை அறிய மாட்டார்கள். ஏழைகளின் உழைப்பைக் கொண்டு பணக்காரர்கள் கொள்ளை லாபமடைகின் றனர். ஆதலால் தங்களுடைய அனுவசி யச் செலவுகளையெல்லாம் குறைத்துக் கொண்டு, ஏழைகளின் பிணிகளைப் போக் குவதுதான் அவர்களுடைய முக்கிய கடமையாகும்.

"பணக்காரர்கள் சப்பாத்தி, அரிசி, பருப்பு, பால், நெய், எண்ணெய் முதலி யவைகளை உணவாக எடுத்துக் கொள் கின்றனர். ஆனால் பால், முட்டை, மாமி சம் முதலியவைகளைகூட உண்பவர்கள் பருப்பு வகையறுக்களை உண்ண வேண் டியதில்லை. ஏழைகள் பருப்பு வகை யறுக்களை உண்பதில்லை. அவர்களுக்கு அவைகள் கிடைப்பதில்லை. பணக்காரர் கள் இவைகளை உண்பதை விடுத்தால், ஏழைகளுக்குப் பேருதவி செய்தாற் போல். மேலும் பணக்காரர்கள் அனு வசியமாகக் கண்டா கண்டபடி உணவு களை நாசம் செய்யாமல் இருந்தால், ஏழைகள் பஞ்சத்தினுல் அவதிப்பட வேண்டியதில்லை.

## எழுத்தாளருக்கு

கட்டுரைகளையும் சிறு கதைகளையும் வேறு பாரதமணியிலே பிரசுரிக்க விரும்பும் விஷயங்களையும் எழுதியனுப்பு வோர், தாங்கள் எழுதியவை பிரசுரிக்கப் படாவிட்டால் அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு வேண்டிய தபாற் செல வுக்கு ஸ்டாம்பும் மேல் விலாசமும் அனுப்பவேண்டும்.

—ஆசிரியர்